வெளியீடு 7-7-97 Issued 7-7-97

TAMILNADU POLLUTION ... LIBRARY MADRAS

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
அலுவலக வெளியீடு

TAMIL NADU
LEGISLATIVE ASSEMBLY DEBATES
OFFICIAL REPORT

புதன்கிழமை, ஜூலை 24, 1996 — தொகுதி 6 — எண் 1

Wednesday the 24th July, 1996 — Volume 6 — No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

Legislative Assembly Secretariat, Fort St. George,
Chennai-600 009

D.
V2,11,31 ...
N96.6.1.
213465

SCANNED
BES-560
213465

Price Rs. 3.00

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

24-7-1996

உள்ளடக்கம்

		பக்கங்கள்
(i)	தமிழ் நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்	iii—vi
(ii)	Personnel of the Government of Tamil Nadu	vii—x
(iii)	தமிழ் நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்	xi—xiv
(iv)	தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி)	xv—xxiv

1. வினாக்கள் – விடைகள்—

உடுக்குறியிட்ட வினாக்கள்	1—9

2. சிறப்புக் கவன ஈர்ப்புகள்—

(அ)	திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தில் மானாவாரி மணிலாப் பயிர்கள் பூச்சிகள் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளது குறித்து.	9—11
(ஆ)	காவிரி நதிநீர் நடுவர் மன்றத் தலைமை நீதிபதி பதவியை நிரப்ப மத்திய அரசை வலியுறுத்துவது குறித்து.	12—17
(இ)	தனியார் மருத்துவக் கல்லூரிகளில் கல்விக் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது குறித்து.	18—19

3. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)—

கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, *1996.*	19—20

SCANNED
DES-560

பக்கங்கள்

4. தகவல் கோரல்—

(அ) பெரியாறு பிரதானக் கால்வாய்ப் பாசன விவசாயத்திற்குத் தண்ணீர் திறந்து விடுதல் குறித்து. 20—21

(ஆ) 10-6-1996 அன்று எதிர்க்கட்சித் தலைவர், தொகுதி உறுப்பினரை அழைக்காமல் காமராஜர் மாவட்ட ஆட்சித் தலைவரைச் சந்தித்தது குறித்து. 21—26

5. வரவு-செலவுத் திட்டம், 1996 - 97, பொது விவாதம்— தொடர்ச்சி. 26—118

டாக்டர் வே. ஆல்பன் 26—30

*திரு. கு. ரவி அருணன் 30—35

*திரு. மு.க. ஸ்டாலின் 35—42

*திரு. அ.வ. அப்துல் நாசர் 42—47

திரு. ஆர். காந்தி 47—56

*திரு. ந. கருப்பண்ண உடையார் 56—60

*திரு. கொ.வி. நன்னன் 60—64

திரு. வி.ஜி. தனபால் 65—69

*திரு. இ. கணேசன் 69—74

*திரு. ஆர். சக்ரபாணி 74—79

திரு. டி. மணி 79—93

*திரு. எல். சந்தானம் 93—99

*திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் 99—112

திரு. எஸ். திருநாவுக்கரசு 112—118

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— 118

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ் நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

ஆளுநர்—டாக்டர் எம். சென்னா ரெட்டி

அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. *முதலமைச்சர்* : **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** *பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணி, மாவட்ட வருவாய் அதிகாரிகள், உள்துறை, நிதி, திட்டம், தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, வணிக வரிகள், சிறுபான்மையினர் நலன்.*

2. *கல்வி அமைச்சர்* : **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** *தொழிற்கல்வி உள்ளிட்ட கல்வி, சட்ட மன்றம், தேர்தல்கள், மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளையாட்டு மற்றும் இளைஞர் பணிப்படை, முன்னாள் இராணுவத்தினர்.*

3. *மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்* : **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** *மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம், மின்சாரம்.*

4. *வருவாய்த் துறை அமைச்சர்* : **மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** *வருவாய், வருவாய் வாரியம், மாவட்ட வருவாய் நிர்வாகம், மாவட்டத் துணை ஆட்சியாளர்கள்.*

5. *ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்* : **மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** *நகராட்சி நிர்வாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.*

6. வேளாண்மைத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம்:**
வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக்கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்புப் பயிர் மேம்பாடு.

7. பொதுப்பணித் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. துரைமுருகன்:**
பொதுப்பணிகள், சிறுபாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம், செயற் திட்டப் பணிகள்.

8. போக்குவரத்துத் துறை அமைச்சர் : **மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:**
போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகம் மற்றும் நெடுஞ்சாலைகள், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

9. தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் : **மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:**
தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு.

10. உணவு மற்றும் பொது விநியோகத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. கே. என். நேரு:**
உணவு, விலைக் கட்டுப்பாடு மற்றும் குடிமைப் பொருட்கள் வழங்கல், பொது விநியோக முறை.

11. பால்வளத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. க. சுந்தரம்:**
பால், பாற்பண்ணை வளர்ச்சி, குடிசை மாற்று வாரியம், இடவசதிக் கட்டுப்பாடு.

12. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:**
தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு, பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, இசுலாமிய அறக்கட்டளை (வக்ஃப்).

13. சட்டத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், எடைகள் மற்றும் அளவைகள் குறித்த சட்டம், நிறுமப் பதிவு (கம்பெனிகள் பதிவு), கடன் நிவாரணம் (கடன் வழங்கல், சீட்டு நிதி இவை பற்றிய சட்டம் இயற்றுதல் உட்பட).

14. கூட்டுறவுத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. வே. தங்கபாண்டியன்:** கூட்டுறவு, புள்ளிவிவரங்கள்.

15. கைத்தறித் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** கைத்தறி, துணித் தொழில், சுற்றுச் சூழல், மாசுக் கட்டுப்பாடு.

16. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

17. வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. பொங்கலூர் நா.பழனிச்சாமி:** வனம், சின்கோனா, கால்நடை பராமரிப்பு.

18. வீட்டு வசதித் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகர அமைப்பு திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி.

19. ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** கிராமக் குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பதிவுத் துறை மற்றும் முத்திரைத்தாள் சட்டம், சத்துணவு.

20. செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு வ. முல்லைவேந்தன்:** செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், திரைப்படச் சட்டம்.

21. இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்	:	**மாண்புமிகு புலவர் பூ. ம. செங்குட்டுவன்:** இந்து சமய அறநிலையத் துறை.
22. சமூக நலத் துறை அமைச்சர்	:	**மாண்புமிகு திருமதி எஸ். பி. சற்குண பாண்டியன்:** சமூக நலன், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிர்வாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம்.
23. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்	:	**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** ஆதிதிராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்.
24. சுற்றுலாத் துறை அமைச்சர்	:	**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.
25. கதர் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்	:	**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை, அரசு அச்சகம்.
26. மீன்வளத் துறை அமைச்சர்	:	**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மீன்வளம் மற்றும் மீன்வளக் கழகம், மகளிர் மற்றும் குழந்தைகள் நலன், இரவலர் காப்பு இல்லம்.

PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

GOVERNOR—DR. M. CHANNA REDDY

MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. Chief Minister	..	**The Hon. KALAIGNAR M. KARUNANIDHI:** Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Home, Finance, Planning, Industries, Prohibition and Excise, Commercial Taxes and Minorities Welfare.
2. Minister for Education	..	**The Hon. Prof. K. ANBAZHAGAN :** Education including Technical Education, Legislature, Elections, Electronics, Science and Technology, Sports and Youth Service Corps and Ex-Servicemen.
3. Minister for Health and Electricity	..	**The Hon. Thiru Arcot N. VEERASAMY :** Health, Medical Education and Family Welfare and Electricity.
4. Minister for Revenue	..	**The Hon. Thiru Nanjil K. MANOHARAN :** Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors.
5. Minister for Rural Development and Local Administration	..	**The Hon. Thiru Ko.Si. MANI :** Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness and Urban and Rural Water Supply.
6. Minister for Agriculture	..	**The Hon. Thiru S. ARUMUGHAM :** Agriculture, Agricultural Engineering, Agro Service, Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.

7. Minister for Public Works ..	**The Hon. Thiru DURAIMURUGAN:** Public Works, Irrigation including Minor Irrigation and Programme Works.
8. Minister for Transport ..	**The Hon. Dr. K. PONMUDI:** Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports and Highways and Madras Metropolitan Development Authority.
9. Minister for Tamil Official Language and Tamil Culture ..	**The Hon. Dr. M. THAMIZHKUDIMAGAN:** Tamil Official Language and Tamil Culture.
10. Minister for Food and Public Distribution System. ..	**The Hon. Thiru K.N. NEHRU:** Food, Price Control and Civil Supplies and Public Distribution System.
11. Minister for Milk ..	**The Hon. Thiru K. SUNDARAM:** Milk and Dairy Development, Slum Clearance and Accommodation Control.
12. Minister for Labour ..	**The Hon. Thiru A. RAHMAN KHAN:** Labour, Census, Employment and Training, Iron and Steel Control, Newsprint Control and Wakf.
13. Minister for Law ..	**The Hon. Thiru ALADI ARUNA:** Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money lending and Legislation on Chits.
14. Minister for Co-operation. ..	**The Hon. Thiru V. THANGAPANDIAN :** Co-operation and Statistics.
15. Minister for Handlooms ..	**The Hon. Thiru N.K.K. PERIASAMY:** Handlooms, Textiles and Environmental Pollution Control.

16. Minister for Backward Classes	..	**The Hon. Thiru M.R.K. PANNEER SELVAM:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indian Overseas, Refugees and Evacuees.
17. Minister for Forest and Animal Husbandry	..	**The Hon. Thiru Pongalur N. PALANISAMY:** Forest, Cinchona and Animal Husbandry.
18. Minister for Housing	..	**The Hon. Thiru K. PITCHANDI:** Housing, Rural Housing Development, Town Planning and Urban Development.
19. Minister for Rural Industries and Registration	..	**The Hon. Thiru I. PERIASAMY:** Rural Industries including Village and Cottage Industries, Registration and Stamp Act and Nutritious Meals.
20. Minister for Information and Publicity	..	**The Hon. Thiru V. MULLAIVENDAN:** Information and Publicity, Film Technology and Cinematography Act.
21. Minister for Hindu Religious and Charitable Endowments	..	**The Hon. Pulavar B.M. SENGUTTUVAN:** Hindu Religious and Charitable Endowments.
22. Minister for Social Welfare	..	**The Hon. Thirumathi S.P. SARGUNA PANDIAN:** Social Welfare, Orphanages and Correctional Administration and Integrated Child Development Service Schemes.
23. Minister for Adi-Dravidar and Tribal Welfare	..	**The Hon. Thiru Samayanallur S. SELVARASU:** Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour.

24. Minister for Tourism ..	**The Hon. Thiru N. SURESH RAJAN:** Tourism and Tourism Development Corporation.
25. Minister for Khadi and Printing ..	**The Hon. Thiru Andhiyur P. SELVARASU:** Khadi Board, Bhoodan and Gramdan, Stationery and Printing and Government Press.
26. Minister for Fisheries ..	**The Hon. Thirumathi S. JENEFER CHANDRAN :** Fisheries and Fisheries Development Corporation, Women's and Children's Welfare and Beggars Home.

தமிழ்நாடு [illegible] காப்பக நூலகம்
213465
சென்னை-600 008

தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை

பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்

பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. இ. இளம்வழுதி

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

1. திரு. பெ. சு. திருவேங்கடம்
2. திரு. அ.லெ. சுப்பிரமணியன்
3. திரு. இ. புகழேந்தி
4. திரு. மா. இராமச்சந்திரன்
5. திரு. டி. சுதர்சனம்
6. திரு. ஜி. பழனிசாமி

செயலாளர்

திரு. செ. சு. ஜானகிராமன்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல்

1.	திரு .டி. சாலமன் ஜெயபால், பி.எஸ்சி., பி.எல்.	.. கூடுதல் செயலாளர்
2.	திரு. வெ. இராசாராமன், பி.எஸ்சி., பி.எல்.	.. இணைச் செயலாளர்.
3.	திரு. கா.ப. இராஜன், டி.ஆர்.எஸ்.	.. துணைச் செயலாளர்
4.	திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்சி., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர்
5.	திரு. கி. சாயிநாதன், பி.ஏ., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர்
6.	திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர்
7.	திரு. சா. கணேசன், பி.ஏ. பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர்
8.	திரு. தி. திருமாவளவன், பி.எஸ்சி., பி.எல்.	.. துணைச் செயலாளர்
9.	திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல்.	.. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
10.	திரு. டி. சுந்தரராஜுலு, எம்.ஏ.	.. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
11.	திரு. வே. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல்.	.. பேரவைத் தலைவரின் சிறப்பு தனிச் செயலாளர்
12.	திரு. ப.சீ. வெங்கடராமன், பி.காம்.	.. குழு அலுவலர்
13.	திருமதி வீ.நா. உமா, பி.ஏ.	.. குழு அலுவலர்
14.	திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ.	.. சார்புச் செயலாளர்
15.	திரு. எம். ஜோபாய், பி.காம்.	.. சார்புச் செயலாளர்
16.	திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.ஜி.எல்.	.. சார்புச் செயலாளர்

17.	திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல்.	..	சார்புச் செயலாளர்
18.	திரு. ஜி. அனீஸ் அகமத், பி.ஏ., பி.ஜி.எல்.	..	சார்புச் செயலாளர்
19.	திரு. மா. செல்வராஜ், பி.எஸ்.சி., பி.எல்.	..	சார்புச் செயலாளர்
20.	திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ.	..	சார்புச் செயலாளர்
21.	திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல்.	..	சார்புச் செயலாளர்
22.	திரு. பு.அ. செல்வராஜ், பி.எஸ்சி.	..	சார்புச் செயலாளர்
23.	திருமதி என். துளசிபாய், பி.ஏ.	..	சார்புச் செயலாளர்
24.	திரு. கே. ரவீந்திரன், எம்.ஏ.	..	சார்புச் செயலாளர்
25.	திரு. ஊ.கு. சுப்பிரமணியம், எம்.ஏ.	..	சார்புச் செயலாளர்
26.	திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எட்.	..	சார்புச் செயலாளர்
27.	திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல்.	..	சார்புச் செயலாளர்
28.	திரு. மு. ஆறுமுகப்பெருமாள், எம்.ஏ., பி.லிட்.	..	தலைமை நிருபர்.
29.	திரு. இல. மாரியப்பன், பி.ஏ.	..	தலைமை நிருபர்
30.	திரு. ம. பிலிப், எம்.ஏ.	..	தலைமை நிருபர்
31.	திருமதி சி. கனகவல்லி, டி.சி.பி.	..	தலைமை நிருபர்
32.	திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ.	..	தலைமை நிருபர்
33.	திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம்.,	..	உதவி விவாதப் பதிப்பாளர்
34.	திரு. ம. ஸ்ரீனிவாசலு, பி.காம்., பி.எல்.,	..	உதவி விவாதப் பதிப்பாளர்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

பெயர்களும் தொகுதிகளும்.

1. அசோகன், திரு. அ. .. திருவாரூர் (செ.வ.)
2. அந்தியூர் செல்வராசு, திரு. ப. .. அந்தியூர் (செ.வ.)
3. அபுல்ஹசன், திரு. எம்.எம்.எஸ். .. மயிலாடுதுறை
4. அப்துல் நாசர், திரு. அ.வ. .. புவனகிரி
5. அப்துல் லத்தீப், திரு. ம. .. வாணியம்பாடி
6. அப்பாவு, திரு. மு. .. ராதாபுரம்
7. அமரமூர்த்தி, திரு. டி. .. அரியலூர்
8. அய்யலுசாமி, திரு. லி. .. கோவில்பட்டி
9. அருண்குமார், திரு. பா. .. மேட்டுப்பாளையம்
10. அழகர்ராஜா, திரு. என்.ஆர். .. தேனி
11. அழகிரி, திரு. ச. .. சிதம்பரம்
12. அழகுவேலு, திரு. ச. .. கண்டமங்கலம் (செ.வ)
13. அன்பழகன், பேராசிரியர் க. .. துறைமுகம்
14. அன்பழகன், திரு. வ. .. செய்யார்
15. அன்பில் பொய்யாமொழி, திரு. .. திருச்சிராப்பள்ளி-2
16. ஆசையன், திரு. பெ. .. ஆண்டிப்பட்டி
17. ஆண்டமுத்து, திரு. வெ.அ. .. பவானிசாகர்
18. ஆண்டி அம்பலம், திரு. எம். .. நத்தம்
19. ஆருண் ரஷீத், திரு. ஜே.எம். .. வில்லிவாக்கம்
20. ஆலடி அருணா, திரு. .. ஆலங்குளம்
21. ஆல்பன், டாக்டர் வே. .. திருவட்டாறு
22. ஆவுடையப்பன், திரு. இரா. .. அம்பாசமுத்திரம்

23.	ஆறுமுகம், திரு. சோ.	..	வீரபாண்டி
24.	ஆறுமுகம், திரு. டி.பி.	..	திருச்செங்கோடு
25.	ஆற்காடு நா. வீராசாமி, திரு.	..	அண்ணாநகர்
26.	ஆனந்தன், திரு. பால	..	வந்தவாசி(செ.வ.)
27.	இரகுமான்கான், திரு. அ.	..	இராமநாதபுரம்
28.	இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ.	..	மேலூர்
29.	இராசமாணிக்கம், திரு. பி.	..	ஒரத்தநாடு
30.	இராசன், திரு. வி.பி.	..	ராஜபாளையம் (செ.வ.)
31.	இராமசாமி, திரு. கே.ஆர்.	..	திருவாடனை
32.	இராமசாமி, திரு. வை.	..	பண்ருட்டி
33.	இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர்.	..	கம்பம்
34.	இராமச்சந்திரன், திரு. சி. இரா.	..	தொண்டாமுத்தூர்
35.	இராமச்சந்திரன், திரு. மா.	..	திருவோணம்
36.	இராமலிங்கம், திரு. ஏ.	..	காட்டுமன்னார் கோவில் (செ.வ.)
37.	இராமலிங்கம், திரு. செ.	..	திருவிடைமருதூர்
38.	இராமன், டாக்டர் இ.எஸ்.எஸ்.	..	பள்ளிப்பட்டு
39.	இராமஜெயம், திரு ந. பூ.	..	மைலாப்பூர்
40.	இராஜரெட்டி, திரு. ச.	..	தளி
41.	இராஜேந்தர், திரு. டி.	..	பூங்காநகர்
42.	இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஆ.	..	ஆண்டிமடம்.
43.	இளங்கோ, திரு. கோ.	..	அவினாசி (செ.வ.)
44.	இளம்வழுதி, திரு. இ.	..	எழும்பூர் (செ.வ.)
45.	ஈஸ்வரன், திரு. ரா.	..	வாசுதேவநல்லூர் (செ.வ.)
46.	உதயசூரியன், திரு. தா.	..	சங்கராபுரம்

47.	உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம்.	.. தஞ்சாவூர்
48.	கணேசன், திரு. இ.	.. எடப்பாடி
49.	கணேசன், திரு. கே.சி.	.. ஜெயங்கொண்டம்
50.	கருணாநிதி, கலைஞர் மு.	.. சேப்பாக்கம்
51.	கருப்பண்ண உடையார், திரு. ந.	.. பாபநாசம்
52.	கருப்பசாமி, திரு. சொ.	.. சங்கரநயினார்கோவில் (செ.வ.)
53.	கருப்புசாமி, திரு. டி.	.. உப்பிலியாபுரம் (ஆ.வா.)
54.	கல்யாணம், திரு. குத்தாலம் பி.	.. குத்தாலம்
55.	கண்ணையன், திரு. க.	.. தொட்டியம்
56.	காஞ்சனா கமலநாதன், டாக்டர்	.. கிருஷ்ணகிரி
57.	காந்தி, திரு. ஆர்.	.. இராணிப்பேட்டை
58.	கிட்டு, திரு. சைதை கா.	.. சைதாப்பேட்டை
59.	கிருட்டிணன், திரு. பசும்பொன் தா.	.. சிவகங்கை
60.	கிருஷ்ணசாமி, டாக்டர் க.	.. ஓட்டப்பிடாரம் (செ.வ.)
61.	கிருஷ்ணன், திரு. எஸ்.வி.	.. நாங்குநேரி
62.	கிருஷ்ணன், திரு. சீ.வெ.	.. வேடசந்தூர்
63.	குண்டன், திரு. டி.	.. உதகமண்டலம்
64.	குமாரதாஸ், டாக்டர் தே.	.. கிள்ளியூர்
65.	கோதண்டம், திரு. ஏ.	.. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
66.	கோபால், திரு. பா.	.. மேட்டூர்
67.	கோபு, திரு. சி.	.. அணைக்கட்டு
68.	கோமதி சீனிவாசன், திருமதி	.. வலங்கைமான் (செ.வ.)
69.	கோவிந்தன், திரு. ப.	.. தாரமங்கலம்
70.	கோவிந்தன், திரு. வி.	.. பேரணாம்பட்டு (செ.வ.)
71.	சக்ரபாணி, திரு. ஆர்.	.. ஒட்டன்சத்திரம்

72.	சண்முகம், திரு. கோ.	..	திருப்பத்தூர்
73.	சண்முகம், திரு. சி.	..	ஆலந்தூர்
74.	சண்முகம், திரு. ம.	..	கிணத்துக்கடவு
75.	சந்தானம், திரு. எல்.	..	சோழவந்தான்
76.	சந்திரசேகரன், திரு. சி.	..	சேந்தமங்கலம் (ஆ.வா.)
77.	சந்திரசேகரன், திரு. துரை.	..	திருவையாறு
78.	சமயநல்லூர் எஸ். செல்வராசு, திரு.	..	சமயநல்லூர் (செ.வ.)
79.	சம்பத், திரு. ஏ.ஜி.	..	முகையூர்
80.	சரஸ்வதி, திருமதி ஆர்.	..	தாராபுரம் (செ.வ.)
81.	சற்குணபாண்டியன், திருமதி எஸ்.பி.	..	டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
82.	சாமிநாதன், திரு. மு.பெ.	..	வெள்ளக்கோவில்
83.	சிங்காரவேலு, திரு. வி.பி.	..	வால்பாறை (செ.வ)
84.	சிவபுண்ணியம், திரு. வை.	..	மன்னார்குடி
85.	சிவராமன், திரு. ஆர்.	..	திருப்பத்தூர்
86.	சிவராஜ், திரு. சு.	..	ரிஷிவந்தியம்
87.	சிவலிங்கம், திரு. எஸ். ஆர்.	..	பனமரத்துப்பட்டி
88.	சிவானந்தம், திரு. ஆர்.	..	ஆரணி
89.	சிவாஜி, திரு. இ.ஏ.பி.	..	திருத்தணி
90.	சின்னய்யா, திரு. வெ.	..	திருமயம்
91.	சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர்.	..	விருதுநகர்
92.	சுகவனம், திரு. இ.ஜி.	..	பர்கூர்
93.	சுடலைமுத்து, திரு. அ.	..	போடிநாயக்கனூர்
94.	சுதர்சனம், திரு. டி.	..	பூந்தமல்லி
95.	சுந்தரம், திரு. க.	..	பொன்னேரி (செ.வ.)
96.	சுந்தரம், திரு. ந.	..	காரைக்குடி

123.	தண்டபாணி, திரு. சி.டி	..	கோயம்புத்தூர் மேற்கு
124.	தமிழரசன், திரு. குழந்தை.	..	விருதாசலம்
125.	தமிழ்க்குடிமகன், முனைவர் மு.	..	இளையான்குடி
126.	தமிழ்ச்செல்வன், திரு.ஆர்.	..	அரக்கோணம் (செ.வ.)
127.	தமிழ்மணி திரு. வீ.	..	செங்கல்பட்டு
128.	தளபதி, திரு. கோ.	..	சேடப்பட்டி
129.	தனபாலன், திரு. கே.ஆர்.ஜி.	..	சேலம்-1
130.	தனபால், திரு. வி.ஜி.	..	குடியாத்தம்
131.	தாமரைக்கனி, திரு. இரா.	..	ஸ்ரீவில்லிபுத்தூர்
132.	திசைவீரன், திரு. உ.	..	பரமக்குடி (செ.வ.)
133.	திருஞானசம்பந்தம், திரு. வி.	..	பேராவூரணி
134.	திருநாவுக்கரசு, திரு. எஸ்.	..	அறந்தாங்கி
135.	திருவேங்கடம், திரு. பெ.சு.	..	கலசப்பாக்கம்
136.	துரை, திரு. க.	..	திருவெறும்பூர்
137.	துரைசாமி, திரு. பா.	..	வரகூர் (செ.வ.)
138.	துரைமுருகன், திரு.	..	காட்பாடி
139.	தெய்வநாயகம், திரு. எ.	..	மதுரை மத்தி
140.	தேவராஜன், டாக்டர் மு.	..	பெரம்பலூர் (செ.வ.)
141.	நடராசன், திரு. ஆ	..	பேரூர்
142.	நடராஜன், திரு. டி.	..	செஞ்சி
143.	நயினா முகமது, திரு. கோ.	..	கடையநல்லூர்
144.	நன்னன், திரு. கொ.வி.	..	செங்கம் (செ.வ.)
145.	நாகரத்தினம், திரு. ச.	..	கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
146.	நாஞ்சில் மனோகரன், திரு. கி.	..	திருவல்லிக்கேணி
147.	நிஜாமுதீன், திரு. ஜி.	..	நாகப்பட்டினம்
148.	நேரு, திரு. கே.என்.	..	லால்குடி

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

149.	பத்மா, டாக்டர்	..	நன்னிலம் (செ.வ.)
150.	பரணிகுமார், திரு. பா.	..	திருச்சிராப்பள்ளி-1
151.	பழனிசாமி, திரு. ஜி.	..	திருத்துறைப்பூண்டி (செ.வ.)
152.	பழனிவேல் ராஜன், திரு. பி.டி.ஆர்.	..	மதுரை மேற்கு
153.	பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே.	..	குறிஞ்சிப்பாடி
154.	பன்னீர்செல்வம், திரு. மு.	..	சீர்காழி (செ.வ.)
155.	பாண்டுரங்கன், திரு. என்.	..	பெரணமல்லூர்
156.	பாலகிருஷ்ணன், திரு. சோ.	..	முதுகுளத்தூர்
157.	பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.என்.	..	பவானி
158.	பாலசுப்பிரமணியன், திரு. ப.	..	பட்டுக்கோட்டை
159.	பிச்சாண்டி, திரு. கு.	..	திருவண்ணாமலை
160.	புகழேந்தி, திரு. இ.	..	கடலூர்
161.	புரட்சிமணி, திரு. எஸ்.	..	மங்களூர் (செ.வ.)
162.	பூவேந்தன், திரு. த.	..	பழனி (செ.வ.)
163.	பெரியசாமி, திரு. இ.	..	ஆத்தூர்
164.	பெரியசாமி, திரு. என்.	..	தூத்துக்குடி
165.	பெரியசாமி, திரு. என்.கே.கே.	..	ஈரோடு
166.	பெரியசாமி, திரு. நா.	..	பெருந்துறை
167.	பெரியண்ணன், திரு. அ.	..	புதுக்கோட்டை
168.	பெருமாள், திரு. வி.	..	ஏற்காடு (ஆ.வா.)
169.	பெர்னார்டு, திரு. இரா.	..	குளச்சல்
170.	பொங்கலூர் நா. பழனிச்சாமி, திரு.	..	சிங்காநல்லூர்
171.	பொன்முடி, டாக்டர் க.	..	விழுப்புரம்
172.	பொன்முடி, திரு. எஸ்.எஸ்.	..	பல்லடம்

தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை

ஆடி 9, தாது-திருவள்ளுவர் ஆண்டு 2027

1996 ஜூலை 24, புதன்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9.30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்."

கொலை முதலிய கொடுமைகளைப் புரிவோரை ஓர் அரசு தண்டனைக்குள்ளாக்குவது, பயிரின் செழிப்புக்காகக் களை எடுப்பது போன்றது ஆகும்.

1. வினாக்கள்-விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள், வினா எண் 13, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கணேசன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

13—

அரசுப் பணியாளர் தேர்விற்கு கல்வித் தகுதி

*** 818**-திரு. இ. கணேசன்:*

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தொகுதி IV அரசுப் பணியாளர் தேர்வு எழுத 10-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருப்பதுடன், தட்டச்சு தேர்ச்சியும் பெற்றிருக்க வேண்டும் என இருப்பதை முன்பிருந்தபடியே மாற்றியமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தொகுதி IV அரசுப் பணியாளர் தேர்வு எழுத 10-ஆம் வகுப்பு (S.S.L.C.) தேர்ச்சி பெற்றிருந்தால் போதுமானது. தட்டச்சில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனை ஏதும் பணிவிதிகளில் குறிப்பிடப்படவில்லை. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டு அரசுப்பணியில் நியமனம் செய்த பிறகு தகுதிகாண் பருவகாலத்திற்குள் தமிழ் மற்றும் ஆங்கிலம் இரண்டிலும் தட்டச்சில் கீழ்நிலையில் தேர்ச்சி பெறவேண்டும் என்று அரசு ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

திரு. இ. கணேசன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, குரூப்-4 தேர்வு - இளநிலை உதவியாளர் பணிக்கு—எப்போது நடத்துவதாக உத்தேசம் உள்ளது என்பதை அரசு அறிவிக்குமா?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே, தட்டச்சில் தேர்ச்சி பெற்று இருக்க வேண்டுமா என்ற மூலக் கேள்விக்கான விடையை நான் வழங்கி இருக்கின்றேன். இந்தக் கேள்வியை தனிக் கேள்வியாகப் போட்டால் அதுபற்றி விபரம் சேகரித்து பதில் சொல்ல இயலும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 14, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. புகழேந்தி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

14—

கடலூர் துறைமுக விரிவாக்கப் பணி

*** 20—திரு இ. புகழேந்தி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் துறைமுக விரிவாக்கப் பணி எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். அரசின் பரிசீலனையில் உள்ளது.

1996 ஜூலை 24]

திரு. இ. புகழேந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் உருவாக்கப்பட்டு, வளர்ந்து வந்து கொண்டிருக்கிற கடலூர் சிப்காட் இரசாயன தொழிற்சாலை தொடர்ந்து வளர்ந்த நிலையிலும், நிதிநிலை அறிக்கையில் கடலூர் அனல் மின் நிலையம் பரிந்துரைக்கப்பட்டு இருக்கிற நிலையிலும், கப்பல் போக்குவரத்து மிகவும் அவசியமான, தேவையான ஒன்றாகும். கடலூர் துறைமுகத்திற்கு கப்பல்கள் ஏராளமாக வருகை தருவதும், அதன்மூலமாக 500-க்கும் மேற்பட்ட தொழிலாளிகள் அங்கே தங்களுடைய வாழ்வை நடத்திக்கொண்டு இருப்பதுமான சூழ்நிலையில் கடலூர் துறைமுக விரிவாக்கப் பணியை இந்த ஆண்டே எடுத்துக்கொள்வதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் துறைமுகத்தை மேம்படுத்துவதற்காக 'பிரிலிமினரி ஸ்டடீஸ்' என்ற அடிப்படையில் 1993-லேயே சுமார் 15 லட்சம் ரூபாய் செலவில் மாதிரி ஆய்வு செய்யப்பட்டு அதற்கான அறிக்கைகள் இருக்கின்றன. பல்வேறு தொழிற்சாலைகளும் அந்தப் பகுதியிலே வளர்ந்து வருவதை முன்னிட்டு கடலூர் துறைமுகத்தினுடைய எல்லையை விரிவுபடுத்துவதற்கான செயற்குறிப்பும் அரசிடம் இருக்கிறது. மேலும் தமிழக முதல்வர் அவர்கள், துறைமுகங்கள் வளர்ச்சி அடைய வேண்டும் என்ற எண்ணத்தோடு குஜராத் மாநிலத்திலுள்ள செயல்பாடுகளை எல்லாம் நேரில் பார்த்துவர ஆணையிட்டு, அந்த அடிப்படையிலே அதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டு இருக்கின்றன. தனியார்கள் மூலமாக நம்முடைய மாநிலத்தில் இருக்கிற பல்வேறு துறைமுகங்களை வளர்ச்சி அடையச் செய்வதற்கான செயற்குறிப்பும் அரசினுடைய கவனத்தில் இருக்கிறது. பி.ஓ.டி. (B.O.T.) என்று சொல்லப்படுகிற முறையில் அந்தத் துறைமுகங்களைத் தனியாருக்கு அளித்து, அவர்கள் மூலமாக அதை அபிவிருத்தி செய்து மீண்டும் அரசிடம் ஒப்படைக்கிற திட்டங்களின் மூலமாகவும் அந்தத் துறைமுகங்களை, சிறு துறைமுகங்களை வளர்ச்சி அடையச் செய்ய முடியுமா என்ற பரிசீலனைகளும் அரசின் கவனத்தில் இருக்கிற காரணத்தினால் வெகு விரைவில் கடலூர், நாகப்பட்டினம் போன்ற துறைமுகங்களின் வளர்ச்சிக்காக இந்த அரசு பல்வேறு பணிகளை மேற்கொள்ள இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 9.35

திரு. இ. புகழேந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் நன்கறிந்த கடலூர் துறைமுகப் பகுதியிலிருந்து செல்கின்ற வழியில் ஆறும் கடலும் சந்திக்கின்ற இடத்தில் மண் அடைப்பு ஏற்பட்டு, முகத்துவாரம் அடைக்கப்பட்ட சூழ்நிலையில், போக்குவரத்துத் துறை அலுவலர்களும், மீனவ நண்பர்களும், தொழிலாளத் தோழர்களும் அந்த முகத்துவாரத்தைக் கடந்து கடலுக்குச் செல்கின்ற வரை உயிருக்கு உத்தரவாதம் இல்லாத சூழ்நிலை தொடர்ந்து இருப்பதால் உடனடியாக அந்த முகத்துவாரத்தில் அடைத்திருக்கிற மண்ணை அகழ்ந்து ஆழப்படுத்துகிற பணிக்கு நம்முடைய அரசு உத்தரவிடுமா என்று அமைச்சர் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: பேரவைத் தலைவர் அவர்களே, டிரெட்ஜிங் என்று சொல்லப்படுகிற அந்த மண் வாரும் பணிகள் எல்லாம் துறைமுக வளர்ச்சித் திட்டத்திலே அடங்கியிருக்கின்றன. அந்தத் துறைமுக வளர்ச்சிக்கான பணிகளை மேற்கொள்கிறபோது மணலை வாரிவிட்டால் மட்டும் போதாது. அப்படி மணல் வாருகிறபோது, மெயின்டெனன்ஸ் என்று சொல்லப்படுகிற வகையில் அதை நிரந்தரமாகப் பாதுகாக்கின்ற பொறுப்பும் இருக்கவேண்டும். இவையெல்லாம் துறைமுக வளர்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் கண்காணிப்பு செய்யப்பட்டு வருகின்ற காரணத்தால், அந்தத் துறைமுகத்தின் வளர்ச்சிப் பணி செய்யப்படுகிறபோது, அந்தப் பணிகளும் தொடர்ந்து அதனுடன் இணைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 15, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. இராமலிங்கம், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர்.*

15—

எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டிற்குக் கொடுக்கப்பட்ட தொகை

*** *341*—திரு. செ. இராமலிங்கம்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1996 ஜூலை 24]

(அ) எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டிற்காக தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியங்களின் மூலம் கொடுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

(ஆ) ஒன்றியங்களின் சார்பில் செய்யப்பட்ட பணிகள் என்னென்ன?

மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டையொட்டி தஞ்சை மாவட்டத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியங்களின் மூலம் தொகை ஏதும் வழங்கப்படவில்லை.

(ஆ) அலங்கார வளைவுகள் அமைத்தல், நாளிதழில் விளம்பரம் செய்தல், தகவல் மையம் அமைத்தல் போன்ற பணிகளின் செலவுகள் ஒன்றியங்களின் சார்பில் செய்யப்பட்டுள்ளன.

திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கிற பொது நிதி (General Fund), அந்த ஒன்றியங்களின் வளர்ச்சிப் பணிகளுக்கே போதுமான நிதியாக இல்லாத நிலையில், அலங்கார வளைவுகளுக்கு, தனி நபர்களுக்குப் புகழ் பாடுபவர்களுக்கு என்று செலவு செய்யப்பட்டது அரசுக்குத் தெரியுமா? அதுபற்றி தகுந்த நடவடிக்கையை அரசு எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத் தமிழ் மாநாட்டையொட்டி எந்த ஊராட்சி ஒன்றியமும் மாநாட்டு நிதிக்காக நிதியைத் தரவில்லை. ஆனால் அந்தந்த ஊராட்சி ஒன்றியங்கள் தங்களுடைய ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஊராட்சிகளின் சார்பில் பல அலங்கார வளைவுகளை அமைத்திருக்கின்றன. எடுத்துக்காட்டாகச் சொல்ல வேண்டுமென்றால், அலங்கார வளைவுகளை அமைப்பதில் பூதலூர் ஒன்றியம் ரூ. 3,000-தையும், ஒரத்தநாடு ஒன்றியம் ரூ. 8,000-தையும், திருவோணம் ஒன்றியம் ரூ. 9,000-தையும், கும்பகோணம் ஒன்றியம் ரூ. 4,950-தையும், திருவிடைமருதூர் ஒன்றியம் ரூ. 5,000-தையும், திருப்பனந்தாள் ஒன்றியம் ரூ. 5,000-தையும், பாபநாசம் ஒன்றியம் ரூ. 5,000-தையும், வலங்கைமான் ஒன்றியம் ரூ. 5,000-தையும், அம்மாபேட்டை ஒன்றியம் ரூ. 5,100-ஐயும், பட்டுக்கோட்டை ஒன்றியம்

ரூ. 5,000-தையும், மதுக்கூர் ஒன்றியம் ரூ. 5,000-தையும் செலவிட்டிருக்கின்றன. குடந்தை நகராட்சி மட்டும் நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்படுவதற்காக ரூ. 4,500 செலவு செய்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நலப் பணிகளுக்கே பணம் போதாதபோது, இப்படி ஆடம்பரமாகச் செலவு செய்யலாமா என்று கேட்டிருக்கிறார்கள். செய்யப்பட்டிருக்கிறது என்ற விவரத்தைத்தான் என்னால் சொல்லமுடியும். அதற்குமேல் வேறு மதிப்பான கருத்தைத் தெரிவிப்பதும் முறையாக இருக்காது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. குழந்தை. தமிழரசன்.

திரு. குழந்தை. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத் தமிழ் மாநாடு என்ற பெயரால், முந்தைய அரசு ஒரு ஊழல் மாநாட்டை நடத்தி முடித்திருக்கிறது. இதன் தொடர்ச்சியாக சாலைகள், மண்டபங்கள், பாலங்கள் என அமைக்கப்பட்டதில் மிகப்பெரிய அளவில் சீர்கேடுகள் நடந்திருப்பதாகக் கருதப்படுகிறது. அதுகுறித்து இந்த அரசு விசாரணை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்: பேரவைத் தலைவர் அவர்களே, உலகத் தமிழ் மாநாட்டுக்காக ஏறத்தாழ 74 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது. அதிலே நெடுஞ்சாலைத் துறைக்கு மட்டும் 24 கோடி ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது. ஆனாலுங்கூட, அது குறித்த தணிக்கை அறிக்கை, 31-3-1995 வரைக்கும்தான் வந்திருக்கிறதே தவிர, இன்னும் பணிகள் நடந்து கொண்டிருப்பதாகத்தான் குறிப்புகள் இருக்கின்றன. எனவே, பணிகள் தொடர்ந்து நடைபெறுகின்றனவா அல்லது அந்தப் பணிகள் 24 கோடி ரூபாய்க்குள் முற்றிலுமாக முடிக்கப்பட்டதா, சிறப்பாக நடத்தப்பட்டதா, இல்லை அரைகுறையாக நலிவடைந்த நிலையிலே விடப்பட்டுள்ளதா என்பதை இந்த அரசு ஆராய்ந்து மற்ற முடிவுகளை மேற்கொள்ளும்.

முற்பகல் 9.40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. குத்தாலம் பி. கல்யாணம்.

திரு. குத்தாலம் பி. கல்யாணம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத் தமிழ் மாநாட்டின்போது பிற நாடுகளிலிருந்து வந்த தமிழறிஞர்கள் தங்குவதற்காகக் கட்டப்பட்ட வீடுகளுடைய எண்ணிக்கை எவ்வளவு? அந்த வீடுகளை அதற்குப் பிறகு விற்பனை

செய்த முறையில் முறையாக விதிமுறைகள் கடைப்பிடிக்கப்பட்டு இருக்கின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வினா ஊராட்சி ஒன்றியங்களின் செலவைப் பற்றி மட்டுமே இருக்கிறது; என்றாலும் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் கேட்ட வேறு விவரங்களைத் தெரிவிக்க வேண்டுமென்றால் அவர் தனிக் கேள்வி போட வேண்டும். தெரிந்த ஒன்று, நிறைய வீடுகள் கட்டடப்பட்டன. ஆனால் அவை இப்போது யாருக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்று தெரியாமல், தமிழ்ப் பல்கலைக் கழகத்துக்காரர்கள் எங்கள் வளாகத்தில் கட்டப்பட்டது, அவற்றை எங்களுக்குத்தான் ஒதுக்க வேண்டும் என்று சொன்ன நிலையிலும், இல்லை, இல்லை, இவை கட்டப்பட்டது பிறருக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்றுதான் என அன்றைக்கு இருந்த ஆளும் கட்சி எடுத்த முயற்சி ஒரு பக்கமும், ஆக இரண்டுக்கும் இடையில் தடையாகி யாருக்கும் கொடுக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. விரைவில் இதற்கான முடிவுகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகையில் செய்தல் வேண்டும் என்பதை மறந்து, ஊழலை உலகமெல்லாம் பரப்ப வேண்டுமென்ற நோக்கத்தோடு நடத்தப்பட்ட அந்த விழாவிற்கு *74* கோடி ரூபாய் ஏற்கெனவே அரசாங்கம் ஒதுக்கியும் கூட ஒன்றியங்கள் எந்த நிதியிலிருந்து ரூ. *5,000*, *4,500* என்று பணத்தை எடுத்துச் செலவிட்டன? அப்படி முறைகேடாகச் செலவிட்ட அலுவலர்கள் மீது நடவடிக்கையெடுத்து அந்தப் பணம் மீண்டும் பெறப்படுமா, அரசின் கணக்கில் கொண்டு வரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முறைகேடாகச் செலவிடப்பட்டது என்று சொல்ல முடியாது. ஆணைகள் பிறப்பிக்கப்பட்டதால் அந்தந்த ஒன்றியங்கள் ரூ. *5,000*, ரூ. *8,000* என்று எடுத்துச் செலவழித்து இருக்கின்றன. ஏற்கெனவே தெரிவிக்கப்பட்ட *74* கோடி ரூபாய்க்கும் மேல் இந்தச் செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இது இன்னும் எத்தனை ஊராட்சி ஒன்றியங்களில் நடந்தன என்ற விவரம் தெரியவில்லை.

எனவே 74 கோடி ரூபாய்க்கு மேலே அவர்கள் செலவிட்டாலும், அதுவும் இங்கிருந்து, மேலிடத்திலிருந்து போன ஆணைகளின் அடிப்படையில்தான் நடந்திருக்கின்றன என்பதால் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றால் மேலிடத்தில்தான் எடுக்கவேண்டுமே தவிர, கீழிடத்தில் எடுப்பது சரியாக இருக்காது என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இறுதியாக, திரு. சிவபுண்ணியம்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சையில் நடந்த எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்யப்பட்டிருக்கின்றன. அது ஊதாரித்தனமான செலவாகச் செய்யப்பட்டது என்பது பெருவாரியான கருத்து. குறிப்பாக அந்தத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தினுடைய வளர்ச்சிக்காக கடந்த ஆட்சியில் நிதி ஒதுக்கப்பட்டதா? ஆமெனில் அந்த நிதியொதுக்கப்பட்ட விவரங்களையும், அதன்மீது இந்த ஆட்சி கூடுதலாக நிதியொதுக்க எடுத்த முயற்சிகள் என்ன என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற புள்ளி விவரங்களுக்குத் தனிக் கேள்வி போட வேண்டும்; என்றாலும் என்னுடைய மனக்குறை எல்லாம், இன்றைக்கும் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றுகிற ஏறத்தாழ 360 பேர்களுடைய பணிகள் முறையாக வரன்முறைப்படுத்தப்படவில்லை. ஏராளமான நூல்கள், ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, முடித்து வைக்கப்பட்டும், எழுதிவைக்கப்பட்டும், அவை அச்சிடப்பெறவில்லை. உள்ளபடியே பார்த்தால் சரஸ்வதி மஹால் நூல் நிலையம் அங்கேதான் இருக்கிறது, தமிழ்ப் பல்கலைக்கழகம் அங்கேதான் இருக்கிறது. ஒரு மாநாடு நடைபெறுகிறபோது சாலைகளைப் போட வேண்டும், நகராட்சியைச் சீர்படுத்த வேண்டுமென்று நினைத்திருந்த அந்த அரசு முதலில் தமிழுக்குத் தொடர்பான தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் பணியாளர்களின் பணிகள் வரன்முறைப்படுத்தப்பட வேண்டும், ஆசிரியர்களுக்கான முறையான பணி அமர்த்தங்கள், நூல்களை வெளியிடுவதற்கான முயற்சிகள் ஆகியவற்றை மேற்கொள்ள வேண்டுமென்று எந்தச் சிந்தனையும் வைத்துக்கொள்ளவில்லை. எனவேதான் பணம் முழுவதும் இப்படி விரயமாகி இருக்கிறது என்று கருதப்படுகிறது. என்றாலும் இதுகுறித்து முறையாகத் தணிக்கை அறிக்கைகள் பெறப்படவில்லை.

மாநாடு நடந்து ஒன்றரை ஆண்டுகள் ஆகியும் கூட 23 துறைகளில் 8 துறைகளில் தணிக்கை முடிந்தும், அறிக்கை வந்து சேரவில்லை. செய்தி மக்கள் தொடர்புத் துறையில் தணிக்கையே முடியவில்லை. சமூக நலத் துறையில் இன்னும் தணிக்கையே முடியவில்லை. எனவே மாநாடு நடந்து ஒன்றரை ஆண்டு ஆன பிறகும் கூட தணிக்கை முடியாத துறைகள் இரண்டு, தணிக்கை அறிக்கை வரப்பெறாத துறைகள் எட்டு; வந்த 13 துறைகளைப் பற்றி ஆய்வு செய்து கொண்டிருக்கிறோம். தக்க முடிவுகளை மேற்கொள்வோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. சிறப்புக் கவன ஈர்ப்புகள்

(அ) திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தில் மானாவாரி மணிலாப் பயிர்கள் பூச்சிகள் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, சிறப்புக் கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் பெ.சு.திருவேங்கடம் மற்றும் ஏ. ராசேந்திரன் ஆகியோர் 'திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தில் பல பகுதிகளில் மானாவாரி மணிலாவைப் பூச்சிகள் தாக்கி பல்லாயிரக்கணக்கான ஏக்கரில் பயிர்கள் பாழ்கியுள்ளது குறித்து' மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

முற்பகல் 9.45

திரு. பெ.சு. திருவேங்கடம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டப் பகுதிகளில் உள்ள கலசப்பாக்கம், போளூர் மற்றும் உள்ள பல பகுதிகளில் மானாவாரி மணிலா இந்த ஆடி மாதத்தில் போடப்பட்டு களை எடுக்கின்ற தருவாயில் இருந்து வருகின்றது. இன்றையதினம் அவற்றை பூச்சிகள் தாக்கி, மணிலாவே அழிந்துவிடக்கூடிய ஒரு பயங்கரமான சூழ்நிலை உருவாகியிருக்கிறது. இப்போது விற்கின்ற விலைவாசியில், அதைக் காப்பாற்ற வேண்டிய பெரும் பொறுப்பு வேளாண்மைத் துறைக்கு இருந்து வருகின்றது. நம்முடைய அமைச்சர் அவர்கள்

இந்தத் துறையை முடுக்கிவிட்டு நடவடிக்கை எடுக்கவேண்டும். இப்போது பூச்சி மருந்துகளின் விலை அதிகமான அளவில் உயர்ந்துவிட்டிருக்கிறது. வசதி படைத்தவர்கள் வேண்டுமானால், அதை வாங்கி தனியாக அவர்களுடைய நிலத்தில் ஸ்ப்ரே பண்ணலாம். ஆனால் ஏழை எளிய மக்கள் அதைச் செய்யாவிட்டால், பூச்சி மருந்தைத் தெளித்தவர்களுக்கும் பயன் இல்லாமல் போய்விடும். எனவே, மொத்தமாகப் பூச்சி மருந்து அடிப்பதற்கு, நம்முடைய அரசு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆவன செய்யுமா என்றும் நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஏ. ராசேந்திரன்.

திரு. ஏ. ராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தில் வாழும் மக்கள் புஞ்சைப் பயிரை நம்பி வாழ்கிறார்கள். குறிப்பாக, போளூர், கலசப்பாக்கம், திருவண்ணாமலை, பெரணமல்லூர் போன்ற தொகுதிகளில் வாழும் மக்கள் எல்லாம் புஞ்சைப் பயிரைப் போட்டபிறகு, தற்போது சிவப்புக் கம்பளிப் பூச்சி அடித்திருக்கிறது, அதனால், பயிர்கள் எல்லாம் நாசமாகிறது என்ற நிலை ஏற்பட்டு இருப்பதாகச் சொல்கிறார்கள். இதற்கு நம்முடைய அரசு முன்பு இருந்தபோது, 'ஏரியல் ஸ்ப்ரே' செய்தார்கள். அதன்மூலமாக ஒட்டுமொத்தமாகப் பூச்சிகளைக் கொல்வதற்கும், அழிப்பதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டது. அதைப்போல இந்த அரசு இப்போது செய்யவேண்டும் என்று கூறி அரசினுடைய கவனத்தை நான் ஈர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தில் நடப்பு பருவத்தில் இதுவரை, 80,500 ஹெக்டேர் நிலப்பரப்பளவில் மானாவாரி மணிலா விதைப்பு மேற்கொள்ளப்பட்டது. இதில் சுமார் 25,500 ஹெக்டேர் பரப்பு 1 மாத வயது கொண்ட பயிராகவும், 55 ஆயிரம் ஹெக்டேர் பரப்பு 10, 15 நாட்கள் வயது கொண்ட பயிராகவும் உள்ளது. சாகுபடி செய்யப்பட்டுள்ள மானாவாரி மணிலாவில் பூச்சிக் கண்காணிப்பு செய்ததில், சிவப்பு கம்பளிப் புழுவின் தோற்றம் இதுவரையிலும் தென்படவில்லை. சுருள் பூச்சிகளின் தாக்குதலால்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1996 ஜூலை 24] [திரு. சோ. ஆறுமுகம்]

சேதம் மிகக் குறைந்த அளவே தென்படுகிறது. முன்பட்டத்தில் விதைப்பு செய்த சுமார் 25,500 ஹெக்டேர் பரப்பளவில் ஒரு மாதம் வயதுள்ள மானாவாரி மணிலாவில், வந்தவாசி கோட்டத்திலும், செய்யார் கோட்டத்திலும் சுருள் பூச்சித் தாக்குதல், பொருளாதாரச் சேத நிலைக்கு உள்ளாகவே, மிகக் குறைந்த அளவிலே தென்படுகிறது. இருப்பினும் மானாவாரி மணிலாவில் பூச்சி நோய்த் தாக்குதலைத் தொடர்ந்து கண்காணிப்பு செய்து, பொருளாதார சேத நிலையை அடையும்போது, பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ள தக்கவாறு விவசாயிகளுக்கு எடுத்துரைக்க வேளாண்மைக் களப் பணியாளர்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆரணி கோட்டத்தில் மட்டும் 550 ஹெக்டேர் பரப்பளவில் சுருள் பூச்சித் தாக்குதல் சேத நிலை அடைந்துள்ளது. பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சிபாரிசுப்படி மருந்துகளைத் தெளிக்க விவசாயிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நோயின் பாதிப்பு அதிக அளவில் இல்லை என்று தெரியவருகிறது.

திருவண்ணாமலை வட்டாரத்தில் இசைக்குளி, காட்டேரி, தண்டரை, மண்டம்பள்ளம் ஆகிய கிராமங்களும், செங்கம் வட்டாரத்தில் பிஞ்சூர், பருசப்பட்டு, அதட்டவாடி, தாழையூத்து ஆகிய கிராமங்களும், தண்டராம்பட்டு வட்டாரத்தில் மலமஞ்சூர், புதூர், நாராயணகுப்பம், தாணிப்பாடி ஆகிய கிராமங்களும், சிவப்புக் கம்பளிப் புழுவால் தொடர்ந்து தாக்குதலுக்கு ஆளாக்கப்பட்ட பகுதிகளாகும். நடப்புப் பருவத்தில் மேற்குறிப்பிட்ட பகுதிகளில் சிவப்புக் கம்பளிப் புழுவின் தாக்குதல் கண்காணிக்கப்பட்டு வந்ததில், இதுவரை கம்பளிப் புழுவின் தோற்றம் தென்படவில்லை. எனவே, சிவப்புக் கம்பளிப் புழுவினால், மானாவாரி மணிலாவில் பாதிப்பு ஏதும் இல்லை எனத் தெரிய வருகிறது. அகில இந்திய வானொலியில், வேளாண்மைத் துறை இணை இயக்குநர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர் ஆகியோர் மூலம் மானாவாரி மணிலாவில் தோன்றும் பூச்சிகள் குறித்தும், தாக்குதல் குறித்தும், அவற்றைக் கட்டுப்படுத்தும் முறைகள் குறித்தும், அவ்வப்போது தெரிவிக்கப்பட்டு உள்ளது . மேலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சிவப்புக் கம்பளிப் புழு மற்றும் சுருள் பூச்சித் தாக்குதல் அறிகுறி மற்றும் தடுப்பு முறைகள் பற்றியும் துண்டுப் பிரசுரங்கள் அச்சடித்து விவசாயிகளுக்கு வினியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

முற்பகல் 9.50

(ஆ) காவிரி நதிநீர் நடுவர் மன்றத் தலைமை நீதிபதி பதவியை நிரப்ப மத்திய அரசை வலியுறுத்துவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த சிறப்புக் கவன ஈர்ப்பு, டாக்டர் க. கிருஷ்ணசாமி.

***டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி நதி நீர்ப் பிரச்சினையில் நடுவர் மன்றத் தீர்ப்பை அமலாக்குவதில் தமிழ்நாடு அரசு மிகவும் தீவிரமாக உள்ளது. டில்லி உச்சநீதிமன்றம் பாரதப் பிரதமரின் முன்னிலையில் இரு மாநில அரசுகளும் பேசித் தீர்த்துக் கொள்ளவேண்டுமென்ற ஆணையைப் பிறப்பித்தது. இந்நிலையில் நடுவர் மன்ற நீதிபதி சித்தடோஷ் முகர்ஜி நீண்ட விடுப்பில் சென்றுவிட்டார். நடுவர் மன்ற நீதிபதியின்றி நடுவர் மன்ற ஆணையை நடைமுறைப்படுத்த இயலாது. எனவே வேறு ஒரு நீதிபதியை நடுவர் மன்ற நீதிபதியாக நியமிக்க மத்திய அரசை தமிழக அரசு உடனடியாக வலியுறுத்த வேண்டிய அவசியம் குறித்து தமிழக முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன், ஒரு நிமிடத்தில் பேசி முடிக்க வேண்டும்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஆடிப் பட்டம் தேடி விதை' என்று சொல்வார்கள். இங்கே எங்களுக்கு காவிரியில் நடுவர் மன்ற உத்தரவுப்படி கூட நீர் கிடைக்காமல் காவிரிப் படுகையில் இருக்கக்கூடிய விவசாயிகள் எல்லாம் இப்போது மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிற காரணத்தினாலே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தங்களுடைய செல்வாக்கை மத்திய அரசிலே பயன்படுத்தி பேச்சு வார்த்தை மூலமாக உடனடியாக மீதம் இருக்கிற தண்ணீரை அந்த நடுவர் மன்ற ஆணைக்குட்பட்டு உடனடியாக விடுவதற்கு ஆவன செய்வாரா என்பதையும், அதைப்போல மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணசாமி அவர்கள் வேண்டியதைப் போல நடுவர் மன்ற நீதிபதியை உடனடியாக நியமிப்பதற்கு ஆவன செய்து காவிரிப் படுகையில் வாழ்ந்து கொண்டிருக்கிற விவசாயப் பெருமக்களுக்கு உடனடியாக நீர் வழங்க உத்தரவிடுவாரா என்றும் அறிய விரும்புகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரிப் பிரச்சினையில் இன்று நேற்று அல்ல,

1996 ஜூலை 24] [கலைஞர் மு. கருணாநிதி]

நீண்ட நெடுங்காலமாக தமிழக அரசு, அது திராவிட முன்னேற்றக் கழக அரசாக இருந்தாலும், அருமை நண்பர் எம்.ஜி.ஆர். தலைமையில் நடைபெற்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசாக இருந்தாலும், ஒரே நிலைதான் எங்கள் இரு கட்சிகளுக்குமிடையே உண்டு என்று நான் அல்ல, எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது இந்த அவையிலேயே அறிவித்திருக்கின்றார். ஏனென்றால், இந்தப் பிரச்சினை 1968 முதல் பேசிப் பேசிப் பார்த்து தீராத பிரச்சினையாக ஆகிவிட்ட ஒன்று. அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதுதான், பொதுப்பணித் துறை அமைச்சர் என்ற முறையில் நானும் கர்நாடகத்தினுடைய முதலமைச்சரும் பொதுப் பணித்துறையையும் தன் கையிலே வைத்திருந்த அமைச்சருமான வீரேந்திர பட்டீல் அவர்களும், நீர்ப்பாசனத் துறை அமைச்சராக மத்தியிலே இருந்த கே.எல்.ராவ் அவர்கள் முன்னிலையிலே பல முறை பேச்சுவார்த்தை நடத்தினோம். அதற்குப் பிறகும் தொடர்ந்து 27 தடவை பேச்சுவார்த்தைகள் நடைபெற்று எந்த முடிவும் ஏற்படவில்லை. முடிவை நெருங்கி வந்த நேரத்திலே சில பிரச்சினைகளால் அந்த முடிவைப் பயன்படுத்திக்கொள்ள முடியாத சூழ்நிலை ஏற்பட்டது என்பது இந்த அவைக்கும் நாட்டுக்கும் நன்றாகத் தெரியும். ஒவ்வொரு கட்டத்திலும் அனைத்துக் கட்சித் தலைவர்களைக் கலந்து பேசி அதிலே குறிப்பாக அன்றைக்கு முன்னாள் முதலமைச்சர்களாக இருந்த பெருந்தலைவர் காமராஜர் அவர்களிடத்திலும், பெரியவர் பக்தவத்சலம் அவர்களிடத்திலும், நான் இந்தப் பிரச்சினைகளுக்காக மற்ற மாநில முதலமைச்சர்களோடு கலந்து பேசச் செல்கின்றபோதெல்லாம், அவர்களை அவர்களுடைய இல்லத்திற்குச் சென்று சந்தித்து அவர்களுடைய கருத்துரைகளையும் கேட்டு, ஆலோசனைகளையும் பெற்று பேச்சுவார்த்தை நடைபெற்று முடிந்த பிறகு மீண்டும் அவர்களுடைய இல்லம் சென்று அவர்களிடத்திலே நடைபெற்றவைகளை விளக்கி, அன்றைய சட்டமன்றக் கட்சித் தலைவர்களை எல்லாம் அழைத்துப் பேசித்தான் ஒவ்வொரு முடிவும் எடுக்கப்பட்டது. ஒரு கட்டத்திலே நாம் உச்சநீதிமன்றத்திலே தொடர்ந்திருந்த வழக்கைக்கூட பிரதமர் இந்திரா காந்தி அவர்களுடைய வேண்டுகோளின்படி திரும்பப் பெற்றபோதுகூட, 'subject to the condition' மீண்டும் எப்போது வேண்டுமானாலும் அந்த வழக்கைப் போடலாம் என்ற அளவிலே—அந்த வழக்கைத் திரும்பப் பெற்றபோதுகூட, திரும்பப் பெறலாம் என்ற அந்த முடிவு அனைத்துக் கட்சித் தலைவர்களை அழைத்து வைத்துப் பேசித்தான் எடுக்கப்பட்டது.

[கலைஞர் மு. கருணாநிதி] [1996 ஜூலை 24

முற்பகல் 9-55

இந்தப் பிரச்சினையில் என்னுடைய செல்வாக்கைப் பயன்படுத்த வேண்டும் என்று இங்கே நம்முடைய ஞானசேகரன் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்தப் பிரச்சினையிலே தமிழக அரசு தீவிரமாக இருக்கின்றது என்பதை டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். இதில் செல்வாக்கைப் பயன்படுத்துவது என்பதல்ல, நிலைமையை கர்நாடக மாநிலம் புரிந்துகொள்ள வேண்டும். நான் நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருப்பதைப் போல, இது இரு நாடுகளுக்கிடையே உள்ள பிரச்சினை அல்ல. ஒரே நாட்டில், இரண்டு மாநிலங்களுக்கிடையிலேயான பிரச்சினை. இந்தப் பிரச்சினையை ஊதிவிட்டு, அதன் காரணமாக, கர்நாடகத்திலிருக்கிற தமிழர்களுக்கு ஒரு அவதியை உருவாக்கக் கூடாது என்று ஆளும் கட்சியிலே இருக்கிற நேரத்திலே மாத்திரமல்ல, நான் எதிர்க் கட்சியிலே இருந்த நேரத்திலேகூட, அப்படி ஒரு நிலை ஏற்படாமல், பாதுகாப்பதிலே மிகுந்த, சர்வ ஜாக்கிரதையாக இருந்தேன் என்பதை எல்லோரும் அறிவார்கள். இன்றைக்கு, இந்த நிலையை, பெரிய அளவிற்கு பூதாகாரமாக ஆக்க நான் முனையவில்லை. ஆனால், தஞ்சை, திருச்சி, காவிரி வட்டாரத்தில் விவசாயிகளுடைய பிரச்சினை பரிதாபத்திற்குரிய பிரச்சினை என்பதை கர்நாடக மாநிலத்திலே உள்ளவர்கள் உணர வேண்டும் என்பதை நான் மீண்டும் இந்த அவையின் மூலமாகத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இதிலே மத்திய அரசு தலையிடுவது தவறல்ல; தலையிட வேண்டும். பேச்சுவார்த்தை என அதிலே ஈடுபடுவது என்று வருகிறபோது, ஏதோ நாம் எல்லா உரிமைகளையும் விட்டுவிட்டு, அவர்களோடு பேசப் போவதைப் போல சிலபேர் கற்பனை செய்துகொண்டு, இதை ஒரு அரசியலாக்க எண்ணுகின்றனர். அப்படியல்ல. நடுவர் மன்றத்தினுடைய அந்த வரையறைக்குட்பட்டுத்தான் பேச்சுவார்த்தை என்று திருப்பித் திருப்பிச் சொன்னாலும் கூட, அந்த வாக்கியத்திலே உள்ள 'அந்த நடுவர் மன்றத்தினுடைய வரையறைக்குட்பட்டு' என்ற பகுதியை நீக்கிவிட்டு, 'ஆஹா, பேச்சுவார்த்தை, பேச்சுவார்த்தை' என்று சிலபேர் இன்றைக்கு அரசியலிலே லாபம் தேடிக் கொண்டிருக்கின்றார்கள். இந்தப் பிரச்சினையிலே திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவனாக இருக்கின்ற எனக்கும், தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினுடைய தலைவராக இருக்கின்ற அன்பிற்குரிய மூப்பனார் அவர்களுக்கும்,—'எல்லோரையும்விட' என்று சொன்னால், சில பேருக்கு கோபம் வரலாம்; இரண்டு பேருமே தஞ்சாவூர்க்காரர்கள் என்ற

முறையில்—அதிக அக்கறையுண்டு என்பதை அவையிலே உள்ள உறுப்பினர்களும், நாட்டு மக்களும், தஞ்சைத் தரணியிலும், திருச்சித் தரணியிலும் வாழ்கின்ற காவிரி டெல்டாவினுடைய விவசாயிகளும் மிக நன்றாக அறிவார்கள். இதுபற்றி நாங்கள் இருவரும் பேசியிருக்கிறோம். இருவரும் பேசவேண்டிய இடத்திலே பேசியிருக்கிறோம். பேச வேண்டிய முறைப்படி பேசியிருக்கிறோம். உரிமைகளை விட்டுக் கொடுத்துவிட்டு, விவசாயிகளுடைய வாழ்விலே ஒரு பெரிய துயரத்தை உருவாக்கிவிட்டு அதை வேடிக்கை பார்த்துக் கொண்டு இருக்க, இந்த அரசு ஒருக்காலும் சம்மதிக்காது என்ற உறுதியை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

நடுவர் மன்றத்தை உருவாக்குவதற்குக் காரணமாக இருந்ததே திராவிட முன்னேற்றக் கழக அரசுதான். தேசீய முன்னணி ஆட்சி பிரதமர் திரு. வி.பி. சிங் அவர்களுடைய தலைமையிலே நடைபெற்ற போதுதான் நடுவர் மன்றம் அமைக்கப்பட்டது. நடுவர் மன்றம் அமைக்க வேண்டுமென்று தஞ்சை விவசாயிகள் சார்பாக ஒரு வழக்கு போடப்பட்டது. அந்த வழக்கில், தமிழக அரசு தன்னையும் இணைத்துக் கொண்டு, அந்த வழக்கை விரைவுபடுத்தியது. அந்த நேரத்திலே கேட்கப்பட்ட கேள்வி, டெல்லியின் முக்கியமான கேள்வி, 'இனி பேச்சுவார்த்தைக்கு இடம் இல்லையா' என்பதுதான். அப்போது பிரதமர் திரு. வி.பி.சிங் அவர்கள் தொலைபேசியிலே என்னைத் தொடர்பு கொண்டு கேட்டார்கள். அன்றைக்கு இம்மன்றம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. 'இனி பேச்சுவார்த்தைக்கு இடம் இல்லையா' என்று கேட்டார்கள். இடம் உண்டு என்று சொன்னால், நடுவர் மன்றம் கிடைக்காது என்று எனக்கு நன்றாகத் தெரியும். எனவே, நான் திரு. வி.பி.சிங் அவர்களிடத்திலே சொன்னேன் 'இடமில்லை' என்று. அப்படிச் சொன்னது மாத்திரமல்ல, உடனடியாக இந்த அவையிலே, ஒரு தீர்மானத்தை, இனி பேச்சுவார்த்தைக்கு இடமில்லை, நடுவர் மன்றம் ஒன்றுதான் வழி என்ற தீர்மானத்தை, நிறைவேற்றி அதை 'பேக்ஸ்' செய்தி மூலம் அன்றைய பிரதமர் திரு. வி.பி. சிங் அவர்களுக்கு அனுப்பி வைத்தோம். அதை அரசாங்க வழக்குரைஞர் நீதிமன்றத்திலே எடுத்துச் சொன்ன பிறகு, நடுவர் மன்றத்திற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. திரு. வி.பி. சிங் அவர்கள் தயக்கமின்றி உடனடியாக நடுவர் மன்றத்தை அமைத்துக் கொடுத்தார்கள். அதற்கு, தேசீய முன்னணி அரசும், இங்கிருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசும், இந்த அரசுக்கு உறுதுணையாக இருந்த அனைத்துக் கட்சியினுடைய

தலைவர்களும்தான் அன்றைக்குக் காரணம் என்பதை நான் என்றைக்கும் மறக்க மாட்டேன்.

இன்றைக்கு நடுவர் மன்றத்திலே ஒரு தொய்வு ஏற்பட்டிருக்கிறது. அதைத்தான் திரு. கிருஷ்ணசாமி அவர்கள் இங்கே சுட்டிக் காட்டியிருக்கின்றார்கள். நடுவர் மன்றத்தின் தலைமை நீதிபதியாக இருந்த சித்ததோஷ் முகர்ஜி அவர்கள் நீண்ட விடுப்பிலே சென்றுவிட்டார், அல்லது பதவி விலகி விட்டார் என்ற செய்தியின் அடிப்படையில் நாம் கோருவது எல்லாம் உடனடியாக அவரையே அந்தப் பொறுப்பில் நீடிக்கச் செய்ய பிரதமர் அல்லது மத்திய அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்; அல்லது அவருக்குப் பதிலாக வேறு ஒருவரை நியமிக்கவேண்டும்; அப்போதுதான் நடுவர் மன்றம் முழுமைபெற்றதாக ஊனம் இன்றி இருக்கிறது என்று பொருள். அப்போதுதான் நடுவர் மன்றத்தை நாம் பயன்படுத்திக்கொள்ள முடியும் என்ற நிலை. எனவே, உடனடியாக அந்தக் குறையைப் போக்கவேண்டும் என்று மத்திய அரசை, இந்தத் தீர்மானத்தை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொண்டு, இந்த அவையின் மூலமாக நான் கேட்டுக்கொள்கிறேன். ஜூலை திங்களுக்குள்ளாக அப்படி அந்த நீதிபதி நியமிக்கப்படாவிட்டால் ஆகஸ்ட் திங்களில் இந்த மாமன்றத்திலே அது குறித்து ஒரு தீர்மானமே நிறைவேற்றி டெல்லிக்கு அனுப்பலாம் என்று இருக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

முற்பகல் 10-00

***திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காவிரிப் பிரச்சினை சம்பந்தமாக (குறுக்கீடுகள்) இதையொட்டித்தான் பேசுகிறேன். நானும் தீர்மானம் கூட கொடுத்திருக்கிறேன்; அதையொட்டித்தான் பேசுகிறேன். (குறுக்கீடுகள்) நல்லதற்காகத்தான் பேசுகிறேன். எல்லோருக்கும் பொதுவான பிரச்சினை. நான் விகற்பமாக ஒன்றும் பேசவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது நீங்கள் அதற்கு விளக்கம் கொடுக்க வேண்டாம், விவரத்திற்கு வாருங்கள்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவரத்தைச் சொல்கிறேன். அதாவது காவிரி நடுவர் மன்றத் தீர்ப்புக்கு உட்பட்டுப் பேச வேண்டும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இப்போது சொல்கிறார்கள். அது

சரியல்ல. பேச்சுவார்த்தையை மீண்டும் தொடங்காது, நடுவர் மன்றத் தீர்ப்புக்கு உட்பட்ட சட்ட நடவடிக்கைதான் நமக்குத் தேவை. அந்த நடவடிக்கை எதுவென்றால், 1956-ஆம் ஆண்டைய 2 மாநிலங்களுக்கு இடையேயான நதி நீர் தாவா சட்டம் என்ற அந்த சட்டப்படியான நடவடிக்கைதான் தேவை. அந்த நடவடிக்கை எடுப்பதற்கு, இந்தச் சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றும்போது இதையும் சேர்த்து நிறைவேற்ற வேண்டும். அப்படி நிறைவேற்றி விட்டு மத்திய அரசில் நமது மந்திரிகள் 4 பேர் இருக்கிறார்கள். எப்படி திரு. வாழப்பாடி அவர்கள் ராஜினாமா செய்தார்களோ, காவிரி நீர்ப் பிரச்சினைக்காக, அதேமாதிரி நம் ஆதரவை வாபஸ் பெறுவதற்கும் நடவடிக்கை எடுத்து நமது உணர்வைக் காட்ட வேண்டும். அப்படி வாபஸ் வாங்குவார்களா என அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அ.இ.அ.தி.மு.க.வினருக்கு காவிரிப் பிரச்சினைகூட முக்கியம் அல்ல. (சிரிப்பு) தமிழ்நாட்டைச் சேர்ந்த 8 பேரில் 4 பேர் கேபினட் அமைச்சர்களாக இருப்பதும், 4 பேர் அங்கே ஸ்டேட் மினிஸ்ட்டர்களாக இருப்பதும்தான் கண்ணை உறுத்திக் கொண்டிருக்கிறது. எனவே, ராஜினாமா செய்யுங்கள், ராஜினாமா செய்யுங்கள் என்று சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள். ராஜினாமா செய்வது என்பது சாதாரணமான ஒன்றுதான். அது ஒன்றும் பெரிய விவகாரம் அல்ல. இந்த அரசு கொள்கைக்காக இரண்டு முறை ஆட்சியையே இழந்த அரசு என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) திரு. தாமரைக்கனி அவர்களுக்கு ஞாபகப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப்படியான நடவடிக்கை வேண்டும்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அனுமதி கொடுக்கவில்லை, நீங்கள் உட்காருங்கள்.

திரு. இரா. தாமரைக்கனி: காவிரி நீர்ப் பிரச்சினையில் சட்டப்படியான நடவடிக்கை வேண்டும்; பேச்சுவார்த்தை வேண்டாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள் என்று சொல்லியிருக்கிறேன் நான்.

திரு. இரா. தாமரைக்கனி: சரி.

[1996 ஜூலை 24

(இ) தனியார் மருத்துவக் கல்லூரிகளில் கல்விக் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் இன்னும் ஒரு சிறப்புக் கவன ஈர்ப்புக்கு அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள்.

"தனியார் மருத்துவக் கல்லூரிகளில் எம்.பி.பி.எஸ். பிரிவு மாணவர்களுக்கு திடீரென்று கல்விக் கட்டணம் ரூபாய் 8 ஆயிரமாக இருந்தது 20 ஆயிரமாக உயர்த்தப்பட்டதால் படிப்பை மேற்கொண்டு தொடர முடியாமல் அவதியுறும் மாணவர்கள் நிலை குறித்து" மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வர அறிவிப்பு கொடுத்துள்ளார்.

அறிவிப்பிலுள்ள வாசகத்தை நானே படித்து விட்டேன். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவக் கல்லூரிகளிலே மாணவர்களைச் சேர்ப்பதைப் பொறுத்தவரையிலே அரசு கல்லூரிகளிலே தகுதி அடிப்படையில்தான் மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள். அவர்களுக்கு ஆண்டுதோறும் 4 ஆயிரம் ரூபாய் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. தனியார் மருத்துவக் கல்லூரிகளிலே மாணவர்களை நிரப்பும்போது உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பின்படி மாணவர்களை அரசாங்கம் ஒதுக்கித் தருகிறது. 50 சதவீதம் கூடுதல் கட்டணம் இல்லாத இடங்கள் அதாவது Free Seats. 35 சதவீதம் Payment seats, அதாவது கட்டணம் செலுத்துகின்ற இடங்கள். இப்படி உச்சநீதிமன்றத்தினுடைய தீர்ப்பின்படி இடங்களை ஒதுக்கித் தருகின்ற நேரத்தில் அவர்களிடம் எவ்வளவு கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும் என்பதற்கும் உச்ச நீதிமன்றம்தான் உத்தரவிட்டிருக்கிறது. 1993-94-ஆம் ஆண்டில் கூடுதல் கட்டணம் இல்லாத இடங்களுக்கு. அதாவது Free Seats பொறுத்தவரை தனியார் கல்லூரிகளில் ஆண்டு ஒன்றுக்கு 8 ஆயிரம் ரூபாய் என்றும் Payment Seats பொறுத்தவரை, கட்டணம் செலுத்துகின்ற இடங்களுக்கு ஒரு லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் என்றும் உச்சநீதிமன்றம் ஆணை பிறப்பித்தது. ஆனால் 1995 ஆகஸ்ட் 11-ஆம் தேதி அதே உச்ச நீதிமன்றம் இன்னொரு ஆணையைப் பிறப்பித்திருக்கிறது. தனியார் மருத்துவக் கல்லூரிகளிலே ஆண்டு ஒன்றுக்கு கட்டணம் Free Seats ஆக இருந்தால் 20,000 ரூபாய் என்றும் கட்டணம் செலுத்தக் கூடிய இடங்களாக இருந்தால் ரூ. 75,000 என்றும் வசூலிக்க வேண்டுமென்று ஆணை பிறப்பித்திருக்கிறது. உச்சநீதிமன்றம் பிறப்பித்த ஆணையைத்தான் இந்த அரசாங்கம் அமல்படுத்துகிறதே தவிர அரசாங்கம் தனியாக

எங்கேயும் கட்டணத்தை உயர்த்தவில்லை.

முற்பகல் 10-05

***டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றத்தினுடைய ஆணையால் பாதிக்கப்படக் கூடியவர்கள், தகுதி வாய்ந்த மாணவர்கள். திடீரென ரூ.8,000-லிருந்து 20,000 ரூபாயாக உயர்த்தப்படுகின்ற காரணத்தினால் அதைச் செலுத்த முடியாமல் பல மாணவர்கள் மருத்துவப் படிப்பைத் தொடர முடியுமா என்ற ஒரு நிலை உருவாகி இருக்கிறது. எனவே, பாதிக்கப்படக் கூடிய மாணவர்களை அரசுக் கல்லூரிகளுக்குள்ளேயே எடுத்துக் கொள்ள வாய்ப்பு இருக்கிறதா என்பதை அமைச்சரிடத்திலேயிருந்து நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவரவர்களே, இதிலே அரசாங்கம் தலையிட முடியாது. அது மட்டுமல்ல, கடந்த ஆண்டு 1993-94-இல் Payment Seats-க்கு ரூ.1,40,000 ஆக இருந்ததை ரூ. 75,000 ஆகக் குறைத்திருக்கிறார்கள். அதேநேரத்திலே Free Seats-க்கு ரூ. 8,000 என்பதை ரூ.20,000 ஆக உயர்த்தியிருக்கிறார்கள். இதில் சம்பந்தப்பட்ட மாணவர்கள்தான் உச்ச நீதிமன்றத்திடம் முறையிட்டு தங்களுக்கு நியாயம் கேட்க வேண்டுமே தவிர தமிழக அரசாங்கம் இதிலே ஒன்றும் செய்ய முடியாது.

3. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, 1996

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, அரசினர் சட்டமுன்வடிவு, அறிமுகம் செய்தல். 1996-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. வே. தங்கபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

"1996-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சரவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் ஆம் என்க. (ஆம்)

மறுப்போர் இல்லை என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. வே. தங்கபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

4. தகவல் கோரல்

(அ) பெரியாறு பிரதானக் கால்வாய்ப் பாசன விவசாயத்திற்குத் தண்ணீர் திறந்து விடுதல் குறித்து

திரு. என். ஆர். அழகர்ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இங்கே சிறிது நேரத்திற்கு முன்னால் பேசிய காவிரிப் பிரச்சினையைப் போன்று, அங்கே பெரியாறு நீர்ப்பாசனத் திட்டத்தில் சுமார் 15,000 ஏக்கர் நிலத்தில் நடவு செய்ய முடியாமல் அங்கே இருக்கக்கூடிய விவசாயிகள் அவதிப்பட்டுக் கொண்டு இருக்கின்றார்கள். தற்சமயம் மழை அதிகமாகப் பெய்து பெரியாறு நீர்ப் பாசனத் திட்டத்தினுடைய அணையில் நீர் மட்டம் உயர்ந்து இருக்கக்கூடிய இந்த நிலையில் பிரதான கால்வாய்களிலும், மற்றக் கிளை வாய்க்கால்களிலும் தண்ணீர் திறந்து விட அரசு உடனடியாக ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவரவர்களே, உறுப்பினர் அழகர்ராஜா அவர்கள் வைத்த கோரிக்கையைப் போன்றுதான், பெரியாறு பிரதானக் கால்வாயில் பாசனம் பெறுகிற விவசாயிகளிடத்தில் இருந்தும் தண்ணீர் பிரதானக் கால்வாயிலே திறந்து விட வேண்டுமென்று கோரிக்கை வந்திருக்கிறது. அதேபோன்ற கோரிக்கையை மதுரை மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் வைத்திருக்கிறார்கள். இந்தக் கோரிக்கையைக் குறித்து இராத்திரியே

இரவு 12 மணிக்கு மேல், நம்முடைய மாவட்ட ஆட்சித் தலைவரையும், அங்கே இருக்கிற ரீஜினல் சீஃப் இன்ஜினியரையும் கலந்து பேசினேன். இப்பொழுது பெரியாறு அணையில் நீர் மட்டம் சற்று திருப்தியளிக்கக்கூடிய வகையில் இருக்கிறது. பருவ மழையின் அறிகுறியும் தென்படுகிறது. வரத்தும் சற்றுப் பெருகி இருக்கிற காரணத்தால் நிலக்கோட்டை, வாடிப்பட்டி, மதுரை போன்ற தாலுக்காக்களிலே உள்ள 45,000 ஏக்கர்கள் பாசனம் பெறும் வகையில் பெரியாறு பிரதானக் கால்வாயில் தண்ணீரைத் திறந்து விடுவதற்கு அரசு உத்தேசித்திருக்கிறது. இது கள்ளந்திரி வரையிலே செல்லும். எனவே, 26-ஆம் தேதி தண்ணீர் திறப்பதற்கு வேண்டிய நடவடிக்கையை அரசு எடுத்திருக்கிறது என்ற செய்தியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு. என்.ஆர். அழகர்ராஜா: தற்சமயம் பெரியாறு அணையினுடைய நீர்மட்டம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

HON. THIRU DURAI MURUGAN: 4.2 tmc.

முற்பகல் 10-10

(ஆ) 10-6-1996 அன்று எதிர்க்கட்சித் தலைவர் தொகுதி உறுப்பினரை அழைக்காமல் காமராஜர் மாவட்ட ஆட்சித் தலைவரைச் சந்தித்தது குறித்து

***திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 10-6-1996-ஆம் தேதி நமது எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு திரு. சோ. பாலகிருஷ்ணன் அவர்கள் காமராஜர் மாவட்டத்திற்கு வருகை தந்திருக்கிறார்கள். வி.ஐ.பி. என்கிற முறையில் மாவட்டத்திலுள்ள எல்லா அதிகாரிகளுக்கும் அழைப்பிதழ் விடப்பட்டிருக்கிறது. குடிநீர்ப் பிரச்சினை, ரேஷன் கடைப் பிரச்சினை, சுகாதாரப் பிரச்சினை சம்பந்தமாக ஆய்வு செய்கிற கூட்டம். எதிர்க்கட்சித் தலைவரும் எனக்குத் தகவல் கொடுக்கவில்லை, மாவட்ட ஆட்சித் தலைவரும் எனக்குத் தகவல் கொடுக்கவில்லை. மந்திரி அந்தஸ்து எதிர்க்கட்சித் தலைவருக்கு இருக்கிறது. ஆனால், ஆய்வு செய்வதற்கு எதிர்க்கட்சித் தலைவருக்கு ஏதாவது விதிமுறை இருக்கிறதா? எம்.எல்.ஏ-வுக்குத் தகவல் சொல்லக் கூடாது என்று ஏதாவது விதிமுறை இருக்கிறதா?

அதுமட்டுமல்ல, கூட்டம் முடிந்தவுடன் மாவட்ட வளர்ச்சி மன்றக் கட்டிடத்திலேயே பத்திரிகை நிருபர்கள் கேட்கின்ற கேள்விகளுக்கு, அரசியல் கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லியிருக்கிறார்கள். காவிரி

நீர் 5 டி.எம்.சி. கொண்டு வந்ததே மூப்பனார் என்று பதில் சொல்லியிருக்கிறார்கள். முன்னாள் முதலமைச்சரைப் பற்றியும் விமர்சனம் செய்திருக்கிறார்கள். இப்படி அரசியல் ரீதியாக, எதிர்க்கட்சித் தலைவர், அந்த வளர்ச்சி மன்றக் கட்டிடத்தின் வளாகத்தில், கேள்விகளுக்குப் பதில் சொல்ல உரிமை இருக்கிறதா, அங்கே எதிர்க்கட்சித் தலைவர் ஆய்வு செய்வதற்கு உரிமை இருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன்.

திரு. சோ. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தாமரைக்கனி அவர்களைக் கேட்காமல் அவர்களுடைய மாவட்டத்திற்குச் சென்றதாக ரொம்ப வருத்தப்படுகிறார். நான் எதிர்கட்சித் தலைவர் என்ற முறையில் அங்கே போய் பெரிய ஆலோசனைக் கூட்டம் எல்லாம் போடவில்லை. நம்முடைய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களைப் பார்த்து, அந்தப் பகுதியின் குடி தண்ணீர்ப் பிரச்சினை, நியாய விலைக்கடை பிரச்சினைகள்—ஏனென்றால் அவை இந்த நாட்டில் இன்று எரிந்துகொண்டிருக்கிற பிரச்சினைகள் என்பதால் குடிநீர்ப் பிரச்சினை, நியாய விலைக்கடைப் பிரச்சினை பிறகு தெருவிளக்கு பிரச்சினை—இவை பற்றியெல்லாம் நம்முடைய அமைச்சர் திரு. கோ. சி. மணி அவர்கள் ஊருக்கு ஊர் சென்று நல்ல, சிறப்பான முறையில், ஒவ்வொரு மாவட்டமாக ஆய்வு நடத்தியிருக்கிறார்கள். என்னுடைய மாவட்டத்திற்கும் வந்தார்கள். ஆகவே, அந்த மாவட்டத்திற்குச் சென்ற நேரத்தில் 'இவையெல்லாம் இங்கே சிறப்பாக நடைபெறுகிறதா, அல்லது ஏதாவது புதிய ஆலோசனை இருக்கிறதா' என்று மாவட்ட ஆட்சித் தலைவரைக் கேட்டேன். அவர், சம்பந்தப்பட்ட அதிகாரிகளையெல்லாம் அழைத்து வந்து நல்ல சிறப்பான ஆலோசனைகளையெல்லாம் செய்திருக்கிறார், செய்து கொண்டிருக்கிறார் என்பதை நான் அறிந்துகொண்டேன். இவை பற்றியெல்லாம் நாளைக்கு சட்டசபையில், இங்கே பேச இருக்கிறேன். தயவுசெய்து, தாமரைக்கனி அவர்கள் நாளைக்குக் கொஞ்சம் நிதானமாக வந்து, வேறு மாதிரி வந்து பேச்சைக் கேட்காமல் போகக் கூடாது என்று நான் இன்றே கேட்டுக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி:** *(குறுக்கீடு)*

திரு. சோ. பாலகிருஷ்ணன் : நிதானம் என்பதில் ஒன்றும் தப்பில்லை. *(குறுக்கீடு)*

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1996 ஜூலை 24]

திரு. இரா. தாமரைக்கனி : ** *(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாமரைக்கனி உட்கார வேண்டும்.

திரு. இரா. தாமரைக்கனி : ** *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாமரைக்கனி உட்காரவில்லையென்றால் வெளியேற வேண்டும்.

திரு. இரா. தாமரைக்கனி : ** *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாமரைக்கனி உட்கார வேண்டும், *(குறுக்கீடு)* தாமரைக்கனியை இன்று தரக்குறைவாக நடந்ததற்காக அவையிலிருந்து வெளியேற்றுகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* *(குறுக்கீடு)* நான் தீர்ப்புச் சொல்லிவிட்டேன். *(குறுக்கீடு)* தாமரைக்கனி வெளியேற வேண்டும்.

(திரு. இரா. தாமரைக்கனி அவையிலிருந்து வெளியேறினார்.)

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உரையாற்றும்போது, தாமரைக்கனி அவர்கள் நிதானமாக வர வேண்டுமென்று சொன்னதையும், அதையொட்டி அவர் பேசிய அந்த வார்த்தைகளையும்,—அதையெல்லாம்—நீக்கிவிட்டு, அவரை உட்கார அனுமதிக்கலாம் என்பது என்னுடைய வேண்டுகோள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நிதானம் என்பதில் என்ன தப்பு? *(குறுக்கீடு)* நிதானமாக இருக்க வேண்டும் என்பதில் என்ன தப்பு?

திரு. எஸ். திருநாவுக்கரசு: நிதானமாக உள்ளே வர வேண்டுமென்றால், நிதானமாக நாளைக்கு வரவேண்டுமென்றால், இன்று நிதானமாக வரவில்லையென்று அர்த்தம் ஆகிறதல்லவா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் தப்பாகப் புரிந்துகொள்ளக் கூடாது.

திரு. எஸ். திருநாவுக்கரசு: இல்லை. அதனால், அதையும் நீக்கிவிட்டு, அவர் பேசிய மற்றதையும் நீக்கிவிடலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். வார்த்தைகளைப்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

பல பேர் பயன்படுத்தினாலும், யார் பயன்படுத்துகிறார்கள் என்று பார்த்துதான் நீங்கள் அர்த்தத்தைப் புரிந்துகொள்ள வேண்டும். எதிர்க்கட்சித் தலைவர் முறையாகத்தான் பேசினார் என்று நான் தீர்ப்புக் கூறுகிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

முற்பகல் 10-15

திரு. சோ. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலும் நான் போய் அந்த மாவட்ட ஆட்சித் தலைவரை ஏன் பார்த்தேன் என்று சொன்னால் 1967-ஆம் ஆண்டு காங்கிரஸ் இயக்கம் தோற்று திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த நேரத்தில் நான் அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த திரு. பி.ஜி. கருத்திருமன் அவர்களைப் பார்த்துச் சொன்னேன். 'மதுரையிலே ஆவின் பாலிலே நிறைய ஊழல் நடந்து கொண்டிருக்கிறது. அந்தப் பாலை எல்லாம் தயிர் ஆக்குகிறார்கள், நெய் ஆக்குகிறார்கள், ஆனால், ஒன்றுமே உருப்படியாக இல்லாமல் சாக்கடையில் கொட்டுகிறார்கள்' என்று சொன்னேன். உடனே, மதுரை வந்தவர் அங்கே போய்ப் பார்த்து, எல்லாவற்றையும் குறித்து ஒரு ரிப்போர்ட்டை அப்போது முதலமைச்சராக இருந்த நம்முடைய பேறிஞர் அண்ணா அவர்களுக்கு அனுப்பினார்கள். அதை வைத்து சிறப்பான நடவடிக்கை எடுத்து, இன்று அந்த ஆவின் பால் தமிழகத்திலேயே ஒரு சிறப்பான இயக்கமாக நடந்து கொண்டிருக்கிறது என்றால் அதற்குக் காரணமாக இருந்தவர் திரு. பி.ஜி. கருத்திருமன் அவர்கள். அதை அண்ணா அவர்களே குறிப்பிட்டுப் பாராட்டியிருக்கிறார்கள். அந்த முறையில் அரசுக்கு மேலும் நல்ல வலுவூட்டுவதற்காகவும் இந்த அரசு சிறப்பாக நடைபெற வேண்டும் என்பதற்காகவும் நாம் இங்கே போடுகின்ற சட்டங்களையெல்லாம்—அதிகாரிகள்தான் நிறைவேற்றுகிறார்கள் அவர்கள்—ஒழுங்காக நிறைவேற்றுகிறார்களா என்று பார்ப்பதற் காகவும்தான் சென்றேனே தவிர, திரு. தாமரைக்கனி அவர்களுடைய தலைவராக இருந்த எதிர்க்கட்சித் தலைவர் போல், இங்கே சட்டமன்றத்தில் பட்ஜெட்டையே கிழித்து எறிகின்ற ஒரு எதிர்க்கட்சித் தலைவராக நான் இருக்க மாட்டேன் (மேசையைத் தட்டும் ஒலி) இல்லையென்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது முடிந்த நிகழ்ச்சியில் தாமரைக்கனி அவர்கள் முதலிலே எழுப்பிய பிரச்சினை குறிப்பேட்டிலே இருக்கலாம். எதிர்க்கட்சித் தலைவர் பேச ஆரம்பித்த பிறகு அவர் குறுக்கிட்டுப் பேசியவை அனைத்தையும் குறிப்பேட்டிலேயிருந்து நீக்குகிறேன்.

1996 ஜூலை 24]

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு தவறான தகவலைச் சொன்னார்கள். முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் பட்ஜெட்டைக் கிழித்து எறியவில்லை.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, பட்ஜெட்டைப் பிடுங்கச் சொன்னார்கள், கிழித்து எறியச் சொன்னார்கள், எப்படி அந்தத் திட்டம் தீட்டப்பட்டது என்பதை இந்த அவையில் திருநாவுக்கரசு அவர்களே பேசியிருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மீண்டும் சொல்கிறேன், எதிர்க்கட்சித் தலைவர் 'முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் மாதிரி நான் பட்ஜெட்டைப் பிடுங்கிக் கிழித்து எறியமாட்டேன்' என்று சொன்னார். அதற்குத்தான் நான் பதில் சொன்னேன். முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அல்லது முன்னாள் முதல்வர் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது பட்ஜெட்டைப் பிடுங்கி அதைக் கிழித்து எறியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தப் பிரச்சினை நீண்டுகொண்டே போகிறதே !

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, திருநாவுக்கரசு அவர்கள் வார்த்தையை ஜாக்கிரதையாகச் சொல்கிறார்கள். அந்த எதிர்க்கட்சித் தலைவர், செல்வி ஜெயலலிதா அவர்கள் பட்ஜெட்டைப் பிடுங்கிக் கிழித்து எறியவில்லை என்று சொல்கிறார்கள். அதில், ஆளும்கட்சிக்காரர்களையே அன்றைக்கு மிரட்டுகிற வகையிலும், என்னைத் துன்புறுத்துகின்ற வகையிலும் என் கையிலே உள்ள பட்ஜெட்டைப் பிடுங்கிக் கிழித்து எறியுங்கள் என்று அவருடைய கட்சிக்காரர்களுக்கு அன்றைய எதிர்க்கட்சித் தலைவர் ஜெயலலிதா ஆணையிட்டதெல்லாம் குறிப்பிலே இருக்கிறது. அந்தக் குறிப்புகள் எல்லாம் மாற்றப்பட்டாலும்கூட அப்படி மாற்றப்பட்ட நிகழ்ச்சியெல்லாம், தலைவர் அவர்களே, தங்களுடைய அனுமதியோடு மீண்டும் மாற்றப்பட வேண்டும் என்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி). எனவே, அந்தத் திட்டம் எப்படித் தீட்டப்பட்டது, போயஸ் கார்டனிலே திட்டம் எப்படித் தீட்டப்பட்டது, அந்தத் திட்டம் தீட்டப்படும்போது அதை திருநாவுக்கரசு எந்தவகையிலே எல்லாம் மறுத்திருக்கிறார் என்று நடந்த விஷயங்களை

திருநாவுக்கரசு அவர்கள் இதே அவையில், 'நான் இதய தெய்வமாக வணங்குகின்ற எம்.ஜி.ஆர். மீது ஆணையாக, தாய் மீது ஆணையாக இந்த உண்மைகளைச் சொல்கிறேன்' என்று கோர்ட்டிலே வேதப் புத்தகத்திலே கை வைத்து சத்தியம் செய்வதைப் போல தாய் மீது, எம்.ஜி.ஆர். மீது ஆணை என்று சத்தியம் செய்து அந்த உண்மைகளை அன்றைக்கு திருநாவுக்கரசு அவர்கள் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஜெயலலிதா அவர்கள் கிழித்து எறியவில்லை என்றாலும்கூட கிழித்து எறியச் சொன்னார் என்பதை அவர் மறுக்கமுடியாது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

5. வரவு-செலவுத் திட்டம், 1996-97, பொது விவாதம்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நிதிநிலை அறிக்கை மீது பொது விவாதம். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் வே. ஆல்பன்.

டாக்டர் வே. ஆல்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னை இந்தப் பேரவையின் உறுப்பினராகத் தேர்வு செய்த திருவட்டாறு தொகுதி வாக்காளர்களுக்கும், அதற்குப் பாதை அமைத்துத் தந்த கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், கழகத் தலைமைக்கும் எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்து எனது உரையைத் தொடங்குகிறேன்.

ஜூலைத் திங்கள் 17-ஆம் நாள் இந்தப் பேரவையில் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் தாக்கல் செய்த 1996-97ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை தமிழகத்தின் அனைத்து தரப்பு மக்களும் மனமகிழ்ச்சியோடு வரவேற்கின்ற முறையில் அமைந்துள்ளது.

முற்பகல் 10-20

தேர்தல் நேரத்தில் எதைச் செய்ய முடியுமோ அதை வாக்குறுதியாக அளித்து அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையில் நிதிநிலை அறிக்கையிலும் உட்படுத்தி அதைச் செயல்படுத்த முன்வந்திருக்கிறார்கள்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

குறிப்பாக, தமிழை மைய ஆட்சி மொழியாக ஏற்க முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டத்திற்கான தொகை ரூ.5,000-லிருந்து ரூ. 10,000-ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித் திட்டத்திற்கான தொகை ரூ.300-லிருந்து ரூ.500-ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. ஒரு குடும்பத் தலைவர் இறந்தால், குடும்பநல உதவியாக வழங்கும் தொகை ரூ. 5000-லிருந்து ரூ.7,500-ஆக உயர்த்தப்பட்டுள்ளது. விபத்தில் இறப்போருக்கு நிதியுதவி ரூ.10,000-லிருந்து ரூ.15,000-ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. ஊழலற்ற ஆட்சியை உருவாக்குவோம் என தேர்தல் நேரத்திலே கூறப்பட்டுள்ளது. ஊழலற்ற ஆட்சியை உருவாக்குவதற்காக, காவல் துறை, உள்ளாட்சித் துறை, வருவாய்த் துறை ஆகிய துறைகளில் கீழ் மட்டத்திலே ஊழலை ஒழித்துவிட்டால், 75 விழுக்காடு ஊழல் ஒழிந்துவிடும். ஏனென்றால், இந்தத் துறைகள் சாதாரண மக்கள் தினந்தோறும் சந்திக்கின்ற துறைகளாகும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

சென்னை மாநகரத்தை அனைத்து மொழிகளிலும் 'சென்னை' என்று அழைக்க நிதிநிலை அறிக்கையில் அறிவிப்புச் செய்திருப்பது வரவேற்கத்தக்கது. புதிதாக பல தொழிற்சாலைகளை உருவாக்கி படித்தவர்களுக்கும், உடலால் உழைப்பவர்களுக்கும் வேலைவாய்ப்பை உருவாக்கியிருப்பது பாராட்டத்தக்கது. அத்தியாவசியப் பொருட்களுக்கு வரிக் குறைப்பின் மூலம் விலைவாசி கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. குளச்சல், கன்னியாகுமரி துறைமுகங்களை மேம்பாடு செய்வதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 69 விழுக்காடு ஒதுக்கீடு பெற உதவியாக இருப்பதற்கு நன்றி கூறுகிறேன்.

இறுதியாக என்னுடைய மாவட்டத்தின் தேவைகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் கனிவான பார்வைக்கும், நல்ல முடிவுக்கும் வைக்கிறேன். 1989-ஆம் ஆண்டு டாக்டர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோது ரூ.300 கோடி முதலீட்டில் ஒரு ரப்பர் தொழிற்சாலையை அமைப்பதாக வாக்குறுதி அளிக்கப்பட்டது. 1995-ஆம் ஆண்டு இறுதியில் முந்தைய அரசு ரூ.500 கோடி முதலீட்டில் ரப்பர் தொழிற்சாலை அமைப்பதாக வாக்குறுதி அளித்தது. ஆனால், இதுவரையிலும் அதற்கான எந்த ஆக்கப் பணிகளும் செய்யப்படவில்லை. குறிப்பாக, குமரி மாவட்டத்தில் உற்பத்தி ஆகின்ற ரப்பர்,

இந்தியாவிலேயே முதல்தரமான ரப்பர் ஆகும். அந்த ரப்பர் விற்பனை வரி கொடுக்கப்படாமல் கல்கத்தாவுக்கு கடத்தப்படுவதைத் தடுத்து, குமரி மாவட்டத்தில் ஒரு ரப்பர் தொழிற்சாலையை அமைத்திட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, குமரி மாவட்டத்தில் எந்தவிதமான அரசுக் கல்லூரியும் இதுவரையிலும் ஆரம்பிக்கப்படவில்லை. எனவே, வாழையூத்துவயல் என்ற இடத்தில் இருக்கிற சுமார் 900 ஏக்கர் நிலத்தில் கால்நடை மருத்துவக் கல்லூரியை அமைத்துத் தரும்படி மிகப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். மேலும், குளச்சல், கிள்ளியூர் ஆகிய நகரங்கள் இதுவரையிலும் ஒரு கால்நடை மருந்தகம் கூட இல்லாத நகரங்களாக இருக்கின்றன. அந்த குளச்சல் நகரத்திற்கு ஒரு கால்நடை மருத்துவமனையையும், அதேபோன்று கிள்ளியூர் ஒன்றியத்தில் ஒரு கால்நடை மருத்துவமனையையும் அமைத்துத்தரக் கேட்டுக்கொள்கிறேன்.

நீர் வளமும், நில வளமும் நிறைந்த பேச்சிப்பாறையில் தற்போது ஒரு வேளாண்மை ஆராய்ச்சி மையம் அமைக்கப்பட்டிருக்கிறது. அங்கே ஒரு தோட்டக்கலைக் கல்லூரியை அமைத்துத் தருவதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

தேசிய நெடுஞ்சாலை—47 எப்போதுமே போக்குவரத்து நிறைந்த சாலையாகும். எனவே கன்னியாகுமரி—கொல்லங்கோடு சாலை அமைத்தால் போக்குவரத்து நெரிசலைத் தடுப்பதற்கு அது உதவியாக இருக்கும்.

குமரி மாவட்டத்தில் பல பாலங்கள் சீரழிந்து கிடக்கின்றன. குறிப்பாக, குழித்துறை, கல்லுப்பாலம் ஆகிய பாலங்கள் செப்பனிடப்படாமல் சீரழிந்து மரணப் பாலங்களாகக் காட்சியளிக்கின்றன. அந்தப் பாலங்களைப் புதிய பாலங்களாகக் கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-25

புதியதாக, குழித்துறை ஆற்றில் திக்குறிச்சி என்ற இடத்திலும், கணபதியான்கடவு என்ற இடத்திலும் பாலம் அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும், கீழ்மணக்குடி, மேல்மணக்குடி ஆகிய இரு மீனவ கிராமங்களை இணைக்கின்ற வகையில் ஒரு பாலத்தினை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அனைத்து ஊராட்சிகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க ஆவன செய்ய வேண்டுகிறேன். மேலும் தார்ச் சாலைகளை அமைத்துத் தரும்படி பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

பத்மநாபபுரம் குடிநீர்த் திட்டம் தமிழக முதலமைச்சர், டாக்டர் கலைஞர் அவர்களால் 1989-ல் அனுமதிக்கப்பட்டது. அந்தத் திட்டத்திற்காக ரூபாய் பத்து கோடி ஒதுக்கப்பட்டு திட்டமும் நிறைவேற்றப்பட்டு திறப்பு விழாவும் நடைபெற்றிருக்கிறது. ஆனால் இதுவரையிலும் நகராட்சிகளுக்கு தண்ணீர் வந்து சேரவில்லை. அந்தத் திட்டத்தினை சீரமைத்து குடிநீர் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குமரி மாவட்டம் 1956ஆம் ஆண்டு வரையிலும் திருவாங்கூர் கொச்சி சமஸ்தானத்தில் இருந்தது. இந்தப் பகுதிகளை தமிழகத்தோடு இணைக்கப் போராடிய தலைவர்களுக்கு, மொழிப்போர் தியாகிகளுக்கு, இதுவரை மானியம் வழங்கப்படவில்லை, உதவிகள் எதுவும் செய்யப்படவில்லை. உண்மையான தியாகிகளுக்கு உதவித் தொகை அளிப்பதற்கு ஓர் உயர்மட்டக் குழுவை, அதாவது முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஒருவரை தலைவராகக் கொண்ட ஓர் உயர்மட்டக் குழுவை அமைத்து, உண்மையான தியாகிகளுக்கு அந்த நிதி உதவி கிடைக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குமரி மாவட்டத்திலிருந்து அரிசி கேரள மாநிலத்திற்குக் கடத்தப்படுகிறது. அதைத் தடை செய்தால் குமரி மாவட்டத்தில் அரிசிப் பிரச்சினை இருக்காது. அதைப்போன்றே, குமரி மாவட்டத்திலிருந்து ரப்பர் கல்கத்தாவிற்கு விற்பனை வரி செலுத்தப்படாமல் கடத்தப்படுகிறது. அதையும் தடை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

போக்குவரத்துக் கழகங்கள் தேசியமயமாக்கப்பட்டபோது குமரி மாவட்டத்திலும், நீலகிரி மாவட்டத்திலும் (மணியடிக்கப்பெற்றது) உள்ள அனைத்து போக்குவரத்துக் கழகங்களும் தேசியமயமாக்கப்பட்டன. ஆனால் இன்று நேசமணி போக்குவரத்துக் கழகம் ஒரு 'சிக் யூனிட்டாக' சீரழிந்த நிலையில் இருக்கின்ற நிலையைக் காண்கிறோம். அதனைச் சீராக்கி, நல்ல முறையிலே செயல்படுகின்ற ஒரு போக்குவரத்துக் கழகமாக மாற்றித் தர வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

குமரி மாவட்டத்தில் பல முந்திரித் தொழிற்சாலைகள் இருக்கின்றன. அங்கு பணியாற்றுகின்ற பணியாள சகோதரர்களுக்கு சம்பளம் சரியாகக் கொடுப்பது இல்லை. ஊதியம் கொடுப்பது இல்லை. எனவே, தொழிலாளர் நலச் சட்டத்தின்படி அவர்களுக்கு ஊதியம் வழங்க ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன். குமரி மாவட்டம், குழித்துறையைப் பின்தங்கிய பகுதியாக அறிவித்து தொழில் துவங்க சலுகைகளை அளிக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

1992ஆம் ஆண்டு புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும், 1996ஆம் ஆண்டு ஏற்பட்ட புயலால் வாழை, தென்னை மற்றும் ரப்பர் மரங்கள் அழிந்ததால், சுமார் 4½ கோடி ரூபாய் அளவுக்கு நஷ்டம் அடைந்தவர்களுக்கும் மானியத்துடன் கடன் வழங்கி அவர்கள் மீண்டும் வளம்பெற, இழந்த வீடுகளைக் கட்டிக் கொள்ள, ஆவன செய்யும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

இன்று பரளியாறு மின்சாரத் திட்டம் ஆய்வில் இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) அந்த மின்சாரத் திட்டத்தினை செயல்படுத்தினால் 30 மெகாவாட் அளவுக்கு மின்சாரம் உற்பத்தியாகும். அதையும் செயல்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நிர்வாக வசதிக்காகவும், ஜனத்தொகை கூடியிருப்பதாலும், பரப்பளவு அதிகமாக இருப்பதாலும் கல்குளம் தாலுகாவைப் பிரித்து குலசேகரத்தைத் தலைநகராகக் கொண்ட தாலுகாவை உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக, தமிழகத்தில் மாத்திரம் அல்ல, இந்தியத் துணைக் கண்டத்திலேயே எந்த ஒரு முதல்வரும் தந்திராத ஓர் அப்பழுக்கற்ற நிதிநிலை அறிக்கையைத் தந்த மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்து, வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, திரு. ரவி அருணன். இன்றைக்கு முன் வரிசைத் தலைவர்கள் நிறைய பேர் பேச இருக்கிறார்கள். எனவே, பேசுகின்ற உறுப்பினர்கள் சுருக்கமாக தங்களுடைய பேச்சை முடித்துக் கொள்ளவும்.

***திரு. கு. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1996-97ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது பேசுகின்ற வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்த தென்காசி

தொகுதி மக்களுக்கும், எங்கள் நெஞ்சங்களிலெல்லாம் நிறைந்திருக்கின்ற அன்புத் தலைவர் திரு. மூப்பனார் அவர்களுக்கும், தோழமைக் கட்சியைச் சேர்ந்த தலைவர்களுக்கும், நண்பர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-30

இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்பதோடு, நெல்லை மாவட்டத்தில் வருகின்ற கல்வி ஆண்டிலேயே சட்டக் கல்லூரி ஏற்படுத்தப்படும் என்று அறிவித்திருப்பதை வரவேற்கின்றேன். தென்காசி தொகுதியைப் பொறுத்தவரையில், அங்கே ஆண்கள் கல்லூரி கிடையாது. ஆகவே, புதிதாகத் தொடங்க இருக்கின்ற சட்டக் கல்லூரியை தென்காசி அல்லது குற்றாலத்தில் அமைக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

புதிதாகப் பொறுப்பேற்றுள்ள அரசிடம் மக்கள் நிறைய எதிர்பார்க்கின்றார்கள். நாங்கள் சுற்றுப்பயணம் மேற்கொள்ளுகின்ற போதெல்லாம் அங்கே ஆயிரக்கணக்கான பேர் மனு கொடுக்கின்றார்கள். நாங்கள் அவைகளையெல்லாம் பிரித்து மாவட்ட அளவில் உரிய துறைகளுக்கு அனுப்பி, பல நாட்கள் ஆகியும்கூட, அந்த மனுக்களுக்கான இடைக்கால பதில்கள்கூட சம்பந்தப்பட்ட துறைகளால் அளிக்கப்படுவதில்லை. ஆகவே, சட்டமன்ற உறுப்பினர்கள் அனுப்புகின்ற கடிதங்களுக்கு, முடிவான பதில்களை அவர்கள் அளிக்காவிட்டாலும்கூட, இடைக்கால பதிலையாவது உடனடியாகத் தெரிவிக்க சம்பந்தப்பட்ட துறைகளுக்கு உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தென்காசி நகருக்கு கடனா நதியிலிருந்து குடிநீர் வழங்குவதற்காக 1989ஆம் ஆண்டு ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டது. ஆனால், அந்தத் திட்டம் கடந்த 7 ஆண்டுகளாகக் கிடப்பில் போடப்பட்டுள்ளது. சுற்றுலா ஸ்தலமான தென்காசி நகரின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, அந்தத் திட்டத்தை விரைவில் நிறைவேற்றிட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

உள்ளாட்சி நிறுவனங்களில், முந்தைய ஆட்சிக் காலத்தில் வாங்கிய குழல் விளக்குகளும், 'சோக்கு' களும் தரம் குறைந்து காணப்படுகின்றன. அந்தச் 'சோக்கு' களும், குழல் விளக்குகளும்தான் தற்சமயம் பொருத்தப்படுகின்றன. இதனால் கிராமங்களிலே தெருவிளக்குகள்

சரியாக எரிவதில்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முந்தைய ஆட்சிக் காலத்தில் வாங்கிய தரம் குறைந்த குழல் விளக்குகளையும், 'சோக்கு'களையும் பொருத்துவதைத் தடை செய்துவிட்டு, புதிதாக ஐ.எஸ்.ஐ. முத்திரை பதித்துள்ள 'சோக்கு'களையும், குழல் விளக்குகளையும் தெருவிளக்குகளுக்குப் பொருத்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உள்ளூர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ஒரு கோடி ரூபாய் வழங்கப்பட்டு வருகின்றது. அதை வைத்து, அவர்கள் தொகுதியிலுள்ள சிறுசிறு குறைகளைப் போக்குவதற்காக நல்லமுறையில் பயன்படுத்தி வருகிறார்கள். அந்தத் திட்டம் மக்களிடையே நல்ல வரவேற்பையும் பெற்றுள்ளது. ஆகவே, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உள்ளூர் வளர்ச்சி திட்டத்தின்கீழ் ஒரு கோடி ரூபாய் வழங்கப்படுவதைப்போல, சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் உள்ளூர் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் குறைந்த பட்சம் ரூ.25 இலட்சமாவது வழங்குவதற்கு தமிழக அரசு பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தென்காசி தாலுகா மிகவும் பிற்படுத்தப்பட்ட பகுதி என்று அறிவிக்கப்பட்டு, அங்கே புதிய தொழில் தொடங்குவோருக்கு மானியம் வழங்கப்பட்டு வந்தது. ஆனால், அந்தத் தொகை வழங்கப்படாமல் சமீப காலமாக நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் எங்கள் பகுதியில் புதிதாகத் தொழிற்சாலைகள் அமைக்கப்படுகின்ற வாய்ப்புகள் பாதிக்கப்பட்டுள்ளதால், மீண்டும் தென்காசி தாலுகாவை தொழிலில் பின்தங்கிய பகுதி என்று அறிவிக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாவட்டங்களை நிர்வாக வசதிக்காகப் பிரிப்பதைப்போல, ஊராட்சி மன்றங்களையும் நிர்வாக வசதிக்காகப் பிரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், என்னுடைய தொகுதியில், வல்லம் கிராமத்தில் மூன்று ஊராட்சி மன்றப் பகுதிகள் இருக்கின்றன. கடையம் ஊராட்சி ஒன்றியத்தை எடுத்துக் கொண்டால், அங்கே வெங்காடம்பட்டி ஊராட்சியிலே 30 கிராமங்கள் இருக்கின்றன. ஆகவே, அந்தப் பகுதியிலுள்ள மக்களின் நிர்வாக வசதிக்காக, ஊராட்சி மன்றங்களைப் பிரிப்பதற்கு ஒரு குழு அமைத்து, அந்தக் குழுவினுடைய பரிந்துரையின்பேரில் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1996 ஜூலை 24] [திரு. கு. ரவி அருணன்]

1990-ஆம் ஆண்டு மறைமலைநகர் இரயில் நிலையத்திற்குப் பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய பெயரைச் சூட்டவேண்டும் என்பதற்காக, காங்கிரஸ் கட்சியின் சார்பில் போராட்டம் நடத்தப் பட்டது.

அந்தப் போராட்டத்தில் ஈடுபட்ட நெல்லை மாவட்ட காங்கிரஸ் பேரியக்கச் செயல்வீரர்கள்மீது போடப்பட்ட வழக்குகள் இன்னும் நிலுவையில் உள்ளன. அந்த வழக்குகளையெல்லாம் வாபஸ் பெறுவதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் *10-35*

நெல்லை மாவட்டத்தில், மேற்குத் தொடர்ச்சி மலையில் களக்காடு, அம்பாசமுத்திரம் பகுதிகளில் மிக உயர்ந்த வைரக் கற்கள் கிடைப்பதாகக் கூறப்படுகிறது. கடந்த ஆட்சிக் காலத்தில், அந்த வைரக் கற்களையெல்லாம் சட்டவிரோதமாக அப்புறப்படுத்தி, பெல்ஜியம், ஹாலந்து, ஜெர்மனி போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது. அதுகுறித்து விசாரணை செய்து, தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

செங்கோட்டை நகராட்சிப் பகுதியில், கடுமையான குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. அங்கே குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்குவதற்காக, கருங்கல் ஓடைத் திட்டத்தை விரைவாக நிறைவேற்ற வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, அம்பாசமுத்திரம் பகுதியில், கூட்டுறவு முறையிலே சர்க்கரை ஆலை அமைக்கப்படும் என்று பல ஆண்டுகளுக்கு முன்னால் அறிவிக்கப்பட்டது. ஆனால், அந்தத் திட்டம் பல ஆண்டுகளாகச் செயல்படுத்தப்படாமல் கிடப்பில் உள்ளது. ஆகவே, அப்பகுதியிலுள்ள விவசாயிகளின் நன்மையைக் கருதி, அங்கே கூட்டுறவு முறையில், விரைவில், சர்க்கரை ஆலையை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தற்சமயம், கூட்டுக் குடிநீர்த் திட்டங்களைப் பராமரிப்பதற்கான பொறுப்பு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. ஒரு சிறிய பழுது ஏற்பட்டாலுங்கூட, அதைப் பழுதுநீக்கம் செய்ய பல

நாட்கள் ஆகின்றன. ஏற்கெனவே, பொதுமக்கள் தங்களுடைய குறைகளை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்புள்ள இடம் ஊராட்சி ஒன்றிய அலுவலகமாகும். ஆகவே, கூட்டுக் குடிநீர்த் திட்டப் பராமரிப்புகளையும், மீண்டும் ஊராட்சி ஒன்றியத்திடமே விட வேண்டுமென்ற பரிசீலனையை அமைச்சர் அவர்கள் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இரண்டு, மூன்று ஊராட்சிகளுக்கென்று சேர்த்துத் தயாரிக்கப்படுகிற கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் இன்றையதினம் பெரும்பாலான கிராமங்களில் செயலற்றுதான் இருக்கின்றன. நீர் பங்கிடுவதிலும், கிராமங்களிலே தகராறுகள் வருகின்றன. இதனால், வீண் பிரச்சினைகள் வருகின்றன. ஆகவே, கிராமங்களிலே நிறைவேற்றப்படும் குடிநீர்த் திட்டங்கள், கூட்டுக் குடிநீர்த் திட்டமாக இல்லாமல், சம்பந்தப்பட்ட கிராமப் பகுதிகளுக்கு மட்டும் அமைய, அமைச்சர் அவர்கள் இனிமேல் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வேலைவாய்ப்பு அலுவலகத்திலே இதுவரை பதிவு செய்து 35 இலட்சம் இளைஞர்கள், வேலையில்லாமல் இருப்பதாகக் கூறப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்த நிதிநிலை அறிக்கையிலே, மதுவிலக்குப் பிரச்சாரத்திலே ஈடுபடுத்துவதற்காக 25 ஆயிரம் பெண்களையும், மக்கள் நலப் பணியாளர்களாக 35 ஆயிரம் பேர்களையும் நியமித்து, அவர்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்தித் தருவதாக அறிவித்திருப்பது, வரவேற்கத்தக்கது. அரசு நியமனங்களில் ஒழுங்கீனங்களும், முறைகேடுகளும் நடைபெறாமல் தடுக்க, வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்த முன்னுரிமையின் அடிப்படையிலேயே ஆசிரியர்கள் பணியில் அமர்த்தப்படுவார்கள் என்ற முன்னுதாரணத்தை ஏற்படுத்திய இந்த அரசு, மதுவிலக்குப் பிரச்சாரத்தில் ஈடுபடுத்தப்படும் பெண்களை நியமிக்கும்போதும், மக்கள் நலப் பணியாளர்களை நியமிக்கும்போதும், அதே முறையைப் பின்பற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ் நாட்டில், அதிகாரபூர்வமாக மின்வெட்டு அறிவிக்கப் படவில்லையென்றாலும், தினமும் பலமணி நேரம் நகர்ப்புறங்களிலும், கிராமப்புறங்களிலும் மின்வெட்டு இருந்து வருகிறது. அதைப் போக்க, எந்தெந்தப் பகுதியில் மின்வெட்டு ஏற்படப் போகிறது என்பதை முன்கூட்டியே பத்திரிகை மூலம் தெரியப்படுத்தினால், அந்தந்தப் பகுதிகளிலுள்ள தொழிற்சாலைகளும், மக்களும் தெரிந்து கொண்டு, அதற்குரிய முன்னேற்பாட்டுடன் தயாராக இருப்பார்கள் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, எனக்கு இங்கே பேச வாய்ப்பளித்த மாண்புமிகு

பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மு.க. ஸ்டாலின்.

* **திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996-97-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மீதான என்னுடைய கருத்துக்களை, இந்த அவையிலே எடுத்து வைப்பதற்கான வாய்ப்பினை வழங்கிய ஆயிரம் விளக்கு தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

1996-97-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை, இந்த அவையிலே தாக்கல் செய்யப்பட்டு, இன்று ஐந்தாவது நாளாக விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றி ஒரே வரியில் சொல்ல வேண்டுமென்று சொன்னால், சமூக நீதியை நிலைப்படுத்துகின்ற, சமப்படுத்துகின்ற அறிக்கைதான் இந்த நிதிநிலை அறிக்கையாகும்.

'பற்றாக்குறை பட்ஜெட்டால் வளமான தமிழகத்தை உருவாக்க முடியுமா'—இது பட்ஜெட் குறித்த முன்னாள் முதலமைச்சரின் கருத்துக்கு பத்திரிகைகள் தந்திருக்கக்கூடிய தலைப்பாகும். கடந்த ஆண்டுகளில் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் அரசு நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்தபோது அவை பற்றாக்குறை பட்ஜெட்டா, இல்லையா? 'முதலமைச்சர் 1038 கோடி ரூபாய் பற்றாக்குறையைச் சரிக்கட்ட என்ன வழியைக் கையாளப் போகிறார்'—இதுவும் அம்மையார் எழுப்பிய கேள்விதான். 1038 கோடி ரூபாய் பற்றாக்குறை என்பது வருவாய்க் கணக்கிலே உள்ள பற்றாக்குறை மாத்திரம்தான், இறுதிப் பற்றாக்குறை என்பது 851.01 கோடி ரூபாய் என்று நிதிநிலை அறிக்கையிலே தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது,

'விலைவாசி ஏற்றத்தைப் பற்றி முதலமைச்சர் கவலைப்பட்டதாகவோ, அதற்குரிய நடவடிக்கை எடுத்ததாகவோ பட்ஜெட்டில் எந்த அறிகுறியும் தெரியவில்லை'—இதுவும் அம்மையாரின் குற்றச்சாட்டுதான். விலையைக் குறைப்பதற்காகத்தான் மிளகாய், தனியா, மஞ்சள், புளி, சீரகம், வெங்காயம், வெல்லம், சீயக்காய் போன்ற சாதாரண ஏழை எளிய மக்கள் பயன்படுத்தும் பொருட்களுக்கு முழுமையான வரி விலக்கு தரப்பட்டுள்ளது. அது மாத்திரம் அல்ல. கையால் செய்யப்பட்ட தீக்குச்சிகள், நொய் அரிசி போன்ற பொருட்களுக்கும் வரி விலக்கு

தரப்பட்டுள்ளது. நடுத்தர மக்களுக்குப் பெரிதும் பயன்படக்கூடிய சமையல் எரிவாயுவுக்கு ஒட்டுமொத்தமாக வரி விகிதம் 11.6 சதவீதத்திலிருந்து 8 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. சமையல் 'கேஸ்'க்கு மத்திய அரசு விலையை உயர்த்தியபோது, குறைக்கவேண்டும் என்று நம்முடைய முதல்வர் வேண்டுகோள் வைத்தார். மத்திய அரசு விலையைக் குறைக்காத நிலையில், மாநில அரசு தன்னால் முடிந்த அளவுக்கு குறைந்தபட்சம் சிலிண்டர் ஒன்றுக்கு 4 ரூபாய் குறையத்தக்க அளவுக்கு வரி குறைக்கப்பட்டுள்ளது. டீசல் மீதான வரியானது 19.2 சதவீதத்திலிருந்து 18 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. மூலப்பொருட்களின்மீது விதிக்கப்படும் வரி யாவும் 3 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. இதனால் மட்டும் சுமார் 200 கோடி ரூபாய் அளவுக்கு அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படும். மேலும் 55 கோடி ரூபாய் இழப்பை ஏற்றுக்கொண்டு மின் ஆற்றலைக் கொண்டு இயங்கும் கருவிகளுக்குச் சலுகைகள் தரப்பட்டுள்ளன. மொத்தத்தில் வணிகர்களுக்கு மட்டும் 306 கோடி ரூபாய் அளவுக்குச் செய்யப்பட்டுள்ள சலுகைகள் யாவும் விலைவாசியைக் குறைப்பதற்காகத்தான். எல்லாத் தரப்பு மக்களும் சமையலுக்காக வாங்கி உபயோகிக்கும் அரிசி, கோதுமை, பருப்பு, உளுந்து, புளி, மல்லி, மிளகாய், நல்லெண்ணெய், கடலெண்ணெய் ஆகிய 10 பொருட்களுக்காவது வரியைக் குறைக்கவேண்டும் என்கிறார் முன்னாள் முதலமைச்சர். நிதிநிலை அறிக்கையை முழுவதும் படிக்காமலேயே அவர் அறிக்கை விட்டிருக்கிறார் என்று நான் கருதுகிறேன். அவர் குறிப்பிட்ட அந்த 10 பொருட்களில் பருப்பு, புளி, மிளகாய், மல்லி, வெல்லம் ஆகிய பொருட்களுக்கு முழு வரி விலக்கு தரப்பட்டிருக்கிறது. வரியைக் குறைத்தால் தானாக விலை குறையும் என்பது அவருக்கு தெரியாதது விந்தையாக இருக்கின்றது.

'தேர்தல் நேரத்தில் அறிவித்த திட்டங்கள் எங்கே' என்று கேட்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்றால் தரைவரி நீக்கப்படும் என்று வாக்குறுதி வழங்கப்பட்டது ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், அது முதல் ஆணையாகப் பிறப்பிக்கப்பட்டது. திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்றால் உள்ளாட்சித் தேர்தல்கள் நடைபெறும் என்று உறுதிமொழி வழங்கப்பட்டது. தேர்தல் நடைபெறப் போகிறதா, இல்லையா? திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றிபெற்றால் கூட்டுறவுத் தேர்தலை நடத்துவோம் என்று எடுத்துச் சொன்னோம்; தேதி அறிவிக்கப்பட்டிருக்கிறதா, இல்லையா? சென்னைக்கு கிருஷ்ணா நதி நீரைக் கொண்டு வருவோம் என்று

எடுத்துச் சொன்னோம்; இந்த ஆண்டு இறுதிக்குள்ளாக சென்னைக்கு கிருஷ்ணா நதி நீர் வரப்போகிறது. கர்ப்பிணிப் பெண்களுக்கான உதவித் தொகை ரூ. 300/-லிருந்து ரூ.500/- ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. குடும்பத் தலைவர் இறந்துபோனால் கொடுக்கப்படக்கூடிய உதவிப் பணம் ரூ. 5000/-லிருந்து ரூ.7500/-ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. விபத்திலே இறந்து போகக்கூடிய குடும்பத்தலைவரின் குடும்பத்திற்குத் தரப்படக்கூடிய உதவிப் பணம் ரூ.10,000/-லிருந்து ரூ.15,000/-ஆக உயர்த்தித் தரப்பட்டிருக்கிறது.

முற்பகல் 10-45

திருமணத்திற்குத் தரப்படும் உதவித் தொகை உயர்த்தப்படும் என்று தேர்தல் நேரத்தில் அறிவிக்கப்பட்டது. 1989-ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது, நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, ஏழை எளிய குடும்பத்தில் பிறந்த ஒரு பெண்ணுக்குத் திருமணம் செய்யவேண்டுமென்று சொன்னால், அந்தப் பெண்ணைப் பெற்றெடுத்த பெற்றோர்கள் நண்பர்களைத் தேடலாமா, உறவினர்களை நாடலாமா, வங்கிக்குப் போகலாமா, மார்வாடிக் கடைகளுக்குச் செல்லலாமா, வாங்குகிற கடனை வட்டியோடு நம்மால் திருப்பிச் செலுத்த முடியுமா, வீட்டை விற்கலாமா, நிலத்தை விற்கலாமா அல்லது வீட்டிலே இருக்கக்கூடிய தட்டுமுட்டுச் சாமான்களை விற்றாவது திருமணத்தை நடத்தலாமா என்கிற ஏக்கப் பெருமூச்சோடு தவித்துக் கொண்டிருந்த குடும்பங்களின் கொடுமைகளை அறிந்த காரணத்தால்தான் அன்றைக்கு நம்முடைய தலைவர் கலைஞர் 1989-ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், திருமண உதவித் தொகையாக ரூ.5,000 வழங்கினார்கள். அதன்படி ஏறத்தாழ 35 ஆயிரம் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டது. ஆனால் கடந்த கால ஆட்சியில் என்ன நடந்தது? அந்தத் திட்டம் சீர்குலைக்கப்பட்டது. அதற்கு நேர்மாறாக வளர்ப்பு மகன் திருமணம் நடைபெற்றது. பல கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டு அந்தத் திருமணம் நடைபெற்றது. அதை மூடி மறைப்பதற்காக திருச்சியிலே 5004 திருமணங்கள், சிதம்பரத்திலே 1008 திருமணங்கள் என்று நடத்தப்பட்டன. அந்தத் திருமணங்கள் எல்லாம் எப்படி நடைபெற்றன என்பது நாட்டிற்கு நன்றாகத் தெரியும். ஏற்கெனவே திருமணம் முடிந்தவர்களுக்கு எல்லாம் திருமணம் நடந்தது. குழந்தை பெற்றவர்களுக்கு எல்லாம் திருமணம் நடந்தது. திருச்சியிலே ஒரு பள்ளியிலே படித்துக்கொண்டிருந்த ஒரு மாணவன் தன்னுடைய

ஆசிரியரிடம் சென்று விடுப்பு கேட்டிருக்கிறான். எதற்காக விடுப்பு கேட்கிறாய் என்று அந்த ஆசிரியர் கேட்டபோது, அந்த மாணவன் சொல்லியிருக்கிறான். 'நாளையதினம் அப்பாவுக்கும் அம்மாவுக்கும் கல்யாணம், அந்தக் கல்யாணத்திற்குப் போகவேண்டும்' என்று சொல்லியிருக்கிறான். ஆக, இப்படி எல்லாம் அசிங்கமான முறையிலே மக்களுடைய வரிப்பணத்தைப் பாழடிக்கக்கூடிய வகையிலே கடந்த கால ஆட்சியில் திருமணங்கள் நடந்திருக்கின்றன. அதை எல்லாம் ஒழிக்கவேண்டுமென்று முடிவு எடுத்து, இந்த நிதிநிலை அறிக்கையில் திருமணம் நடைபெறப் போகும் பெண்ணுக்கு 5 ஆயிரம் ரூபாய் என்று வழங்கப்பட்ட உதவித் தொகை தற்போது 10 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது.

அடுத்து, மது விற்பனையிலே எங்கேயோ போய்க்கொண்டிருந்த 75 கோடி ரூபாய் இப்போது அரசு கஜானாவிற்குத் திருப்பி விடப்பட்டிருக்கிறது. எங்கே திசை மாறிப் போனது? கொடநாடு எஸ்டேட் வாங்கப் போனதா? அல்லது டான்சி நிலம் வாங்கப் போனதா? அல்லது மகாத்மா காந்தியார் தங்கிய வீட்டை விலைக்கு வாங்கப் போனதா?

அடுத்து, வேலைவாய்ப்பை எடுத்துக் கொண்டால், 1988-ஆம் ஆண்டு வரையிலே வேலை கேட்டுப் பதிவு செய்தவர்களின் எண்ணிக்கை 26,07,026 ஆகும். 1995-ஆம் ஆண்டு கணக்கின்படி வேலை கேட்டுப் பதிவு செய்தவர்களின் எண்ணிக்கை 34,79,202 ஆகும். அதிலே வேலை கிடைத்தவர்களின் எண்ணிக்கையைக் கணக்கிட்டுப் பார்த்தால், 1988-ஆம் ஆண்டின் கணக்குப்படி வேலை கிடைத்தவர்களின் எண்ணிக்கை 54,388. 1995-ஆம் ஆண்டு கணக்குப்படி வேலை கிடைத்தவர்களின் எண்ணிக்கை 16,592. ஆகவே வேலை இல்லாத நிலையைப் போக்க வேண்டும், உடனடியாக நாட்டிலே இருக்கக்கூடிய இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கித் தந்திட வேண்டுமென்ற தூய உள்ளத்தோடு 35 ஆயிரம் இளைஞர்களை மக்கள் நலப் பணியாளர்களாக நியமிக்கப் போகிறோம் என்று இந்த நிதிநிலை அறிக்கையில் நம்முடைய முதல்வர் அவர்கள் எடுத்து வைத்திருக்கிறார்கள்.

1989-ஆம் ஆண்டு நம்முடைய கழகம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது, நம்முடைய தலைவர் கலைஞர் அன்றைக்கு முதலமைச்சராக இருந்தபோது, இதே அவையிலே எங்களைப்போன்ற ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் நம்முடைய

முதலமைச்சரிடத்திலே ஒரு கோரிக்கையை எடுத்து வைத்தோம். அ.இ.அ.தி.மு.க. ஆட்சி நடந்து கொண்டிருந்தபோது சத்துணவு அமைப்பாளர்கள் என்று நியமிக்கப்பட்டவர்களை உடனடியாக நம்முடைய ஆட்சி போக்கிவிட வேண்டும், அவர்களை வேலையிலிருந்து நீக்கிவிட வேண்டுமென்று அன்றைக்கு நாங்கள் எல்லாம் குரல் கொடுத்தோம். இதே இடத்தில் அமர்ந்திருந்த நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் அன்றைக்கு எழுந்து எங்களுக்குப் பதில் சொன்னார்கள். அ.இ.அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நியமிக்கப்பட்ட சத்துணவு அமைப்பாளர்கள் எல்லாம் நிரந்தரம் இல்லாத ஊழியர்களாக இருக்கிறார்கள், நான் இந்த ஆட்சியிலே அவர்களையெல்லாம் நிரந்தரமாக்கப்பட்ட ஊழியர்களாக அறிவிக்கிறேன் என்று அன்றைக்கு எடுத்துச் சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அது நம்முடைய ஆட்சியின் பெருந்தன்மை. 1989-ஆம் ஆண்டு நாம் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது அன்றைக்கு 35,000 மக்கள் நலப் பணியாளர்களை நியமித்தோம். அதற்குப் பிறகு ஜெயலலிதா தலைமையில் அ.இ.அ.தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு என்ன செய்தது என்று சொன்னால், ஆட்சிப் பொறுப்பேற்ற அடுத்த நாளே அந்த 35,000 மக்கள் நலப் பணியாளர்களையும் வேலையிலிருந்து நீக்கம் செய்து, அவர்களையெல்லாம் வீட்டுக்கு அனுப்பி, நடுத்தெருவிலே நிற்க வைத்தது. அது அந்த ஆட்சியினுடைய பெருந்தன்மை என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 10-50

நடப்பு ஆண்டில் 18 கோடி ரூபாய் செலவில் 300 தொடக்க சுகாதார நிலையங்கள் தொடங்கப்படும் என்று இந்த நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கதாகும். நான் இந்த நேரத்திலே பணிவோடு ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்றைக்கு தனியார் மருத்துவமனைகள் பெருகிக் கொண்டிருக்கின்றன. தடுக்கி விழுந்தால் தனியார் மருத்துவமனை என்ற அளவில் இன்றைக்கு தனியார் மருத்துவமனைகள் நாட்டில் உருவாகிக் கொண்டிருக்கின்றன. '24 மணிநேர கிளினிக்', 'டே அண்ட் நைட் கிளினிக்' என்றெல்லாம் வந்துகொண்டிருக்கக்கூடிய நிலையினைப் பார்க்கிறோம். உயிருக்குப் போராடிக்கொண்டிருக்கும் ஒரு நோயாளிக்குத் தனியார் மருத்துவமனையில் அறுவை சிகிச்சை செய்துகொண்டிருக்கும்போது திடீரென்று மின்தடை ஏற்பட்டு, ஜெனரேட்டர் இல்லாத காரணத்தினால், அந்த நோயாளியினுடைய உயிரே பறிக்கப்பட்டு

விடுகிறது. ஆக, இந்த நிலைமையில் தனியார் மருத்துவமனைகள் இருந்து கொண்டிருக்கின்றன. அது மாத்திரமல்ல, சில தனியார் மருத்துவமனைகளை ஒரு தொழிற்சாலையைப் போல் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். போதை ஊசிகளை விற்கக்கூடிய அளவிற்கு சில தனியார் மருத்துவமனைகள் மிகக் கொடுமையான நிலையில் இருந்துகொண்டு இருக்கின்றன.

ஒரு வீடு கட்டவேண்டுமென்று சொன்னால், அல்லது கட்டிடங்கள் கட்டவேண்டுமென்று சொன்னால் மாநகராட்சியிலோ அல்லது எம்.எம்.டி.ஏ. என்று சொல்லக்கூடிய அந்த அமைப்பிலோ நாம் அனுமதியைப் பெறுகிறோம். சில விதிமுறைகளைக் கடைப் பிடித்தால்தான் ஒரு வீடு கட்டமுடியும்., கட்டிடங்கள் கட்டமுடியும். அதுபோல ஒரு தனியார் மருத்துவமனை தொடங்கப்படவேண்டும் என்று சொன்னால் அதற்கென்று சில சட்டதிட்டங்களை இயற்ற வேண்டும் என்று நான் நம்முடைய அரசை மிகுந்த பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சென்னை மாநகர் மேம்பாட்டிற்காக 200 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. சென்னை, நம்முடைய தமிழகத்தின் தலைநகராக இருக்கக்கூடிய பகுதி. இந்த சென்னையிலே கூவம் ஒரு பெரிய பிரச்சினை. நேற்றைக்குக்கூட நமது பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களை, என்னுடைய தொகுதியில் இருக்கக்கூடிய பல பகுதிகளுக்கு அழைத்துச் சென்று அங்கெல்லாம் பார்வையிட்டோம். கூவத்தை உடனடியாகச் சீர்ப்படுத்தக் கூடிய நிலையிலே இந்த ஆட்சி ஈடுபட வேண்டுமென்று நான் சென்னை மாநகர மக்களின் சார்பிலே அன்போடு கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். சென்னையிலே சிறு மழை பெய்தால்கூட, எங்கு பார்த்தாலும் தண்ணீர் தேங்கி விடுகிறது. அந்தத் தண்ணீர் வடிய வேண்டுமென்று சொன்னால், ஏறக்குறைய நான்கு நாட்கள், ஐந்து நாட்கள் அல்லது ஒருவார காலம்கூட ஆகிவிடுகிறது. ஆகவே, மழை நீர் வடியக்கூடிய அளவிற்கு, வடிகால்களையெல்லாம் சுத்தப்படுத்த வேண்டும்; சீர்ப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த ஆண்டு இறுதிக்குள் கிருஷ்ணா நதிநீர் நம்முடைய சென்னை மாநகரத்திற்கு வரப்போகிறது என்ற மகிழ்ச்சியான செய்தி தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது. அந்த கிருஷ்ணா நதிநீரை, சென்னையில் இருக்கக்கூடிய மக்கள் எல்லோரும் அனுபவிக்க வேண்டுமென்று சொன்னால், அந்தத் தண்ணீரைக் குடிக்க வேண்டுமென்று சொன்னால்,

ஏற்கெனவே இருக்கக்கூடிய குடிநீர்க் குழாய்களைச் சீர்ப்படுத்த வேண்டும்; அல்லது புதிதாக அமைத்திட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில், சென்னை நகரம் என்றுகூட சொல்லக்கூடாது, முக்கிய நகரப் பகுதியைப் பொறுத்தவரையிலே, முக்கியமான பிரச்சினை என்னவென்று சொன்னால் இன்றைக்கு நம்முடைய சென்னை நகர மேம்பாட்டிற்காக 200 கோடி ரூபாயை இந்த அரசு ஒதுக்கியிருக்கிறது. இதை சென்னை நகர மக்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும், அனுபவிக்க வேண்டுமென்று சொன்னால்—சாலை போடப்படுகிறது. சாலை போடப்பட்டு ஒரு வாரம் கழித்து மின்சாரக் கோளாறு என்று சொல்லி, மின்சார வாரிய ஊழியர்கள் வருகிறார்கள், சாலையைத் தோண்டிவிட்டு அவர்கள் அந்த வேலையை முடித்துவிட்டு அப்படியே சென்று விடுகிறார்கள். இன்னொரு 5 நாட்கள் கழித்து தொலைபேசிக் கோளாறு என்று சொல்லி தொலைபேசித்துறை ஊழியர்கள் வருகிறார்கள். அவர்கள் ஒரு பக்கம் வந்து தோண்டிவிட்டு அந்தப் பணியை பாதியிலே விட்டுவிட்டுச் சென்று விடுகிறார்கள். அதற்குப் பிறகு ஒரு வாரம் கழித்து குடிநீர் வடிகால் வாரியத்தினுடைய ஊழியர்கள் வருகிறார்கள். அவர்களும் தோண்டி எடுத்துவிட்டு, அதை அப்படியே விட்டுவிட்டுச் சென்று விடுகிறார்கள். ஆகவே, இதை நான் பணிவோடு எடுத்துச் சொல்வதற்குக் காரணம் என்னவென்று சொன்னால், உண்மையிலே இந்த 200 கோடி ரூபாய் ஒதுக்கினால் மாத்திரம் போதாது. சென்னை நகரத்தினுடைய மேம்பாட்டிற்காக சாலைகளைச் சீர்செய்வதற்காக ஒரு கோ-ஆர்டினேஷன் கமிட்டியைக்கூட அமைக்கலாம். தொலைபேசி இலாகா, கழிவுநீர் இலாகா, மாநகராட்சி அதிகாரிகள் ஆக இந்த அதிகாரிகளை எல்லாம் ஒருங்கிணைத்து ஒரு ஒருங்கிணைப்புக் குழுவை நீங்கள் தயவு செய்து அமைத்திட வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, மாணவர்களுக்காக இலவச பஸ்பாஸ் வழங்கப் பட்டிருக்கிறது. 10-ஆம் வகுப்புவரை படிக்கின்ற மாணவர்களுக்கு மாத்திரம்தான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. நான் மாணவர்களின் சார்பிலே அன்போடு கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். படித்தவர்களுக்கு சலுகை அளித்துக் கொண்டிருக்கக்கூடிய இந்த அரசு, படித்துக் கொண்டிருக்கக்கூடிய மாணவர்களுக்கும் சலுகையைத்

தரவேண்டுமென்ற எண்ணத்தோடு அதை சற்று உயர்த்தி, பிளஸ்-2 வரை படிக்கக்கூடிய மாணவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) இந்த இலவச பஸ் பாஸ் வழங்கக்கூடிய ஒரு நிலையை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையின் முடிவுரையிலே, நம்முடைய முதல்வர் அவர்கள் இந்த 'அறிக்கை ஏழையெளிய மக்களின் வேதனையாம் வெப்பம் குறைக்க அவர்தம் கையில் தரப்படும் பனை ஓலை விசிறி மட்டுமல்ல; அது பாட்டாளி மக்களுக்குக் கிடைத்திருக்கும் குற்றால அருவியின் வீச்சு; ஏழையெளிய மக்களின் வீடுகளில் ஏற்றிவைக்கப்படும் அகல் விளக்கு' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

'அகல் விளக்கு மட்டுமல்ல, அவர்தம் வாழ்வின் அணையா விளக்கு. மகளிர்க்கு, மாணவர்க்கு, படித்து வேலையற்றுத் திரியும் இளைஞர் சமுதாயத்திற்கு ஒரு மின்னல் வெளிச்சம்' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். மின்னல் வெளிச்சம் மட்டுமல்ல, அவர்களின் இன்னல் போக்கிட ஒளிர்விடப் போகும் உதயசூரியன். (மேசையைத் தட்டும் ஒலி)

நன்றி, வணக்கம், அமைகிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ.வ. அப்துல் நாசர்.

***திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய அரசின் 1996-97 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை தமிழகத்தின் அனைத்துத் தரப்பு மக்களாலும் வரவேற்கப்படுகின்ற, பாராட்டப்படுகின்ற, அவர்களை நிம்மதி கொள்ள வைக்கின்ற அறிக்கையாக உள்ளது. திருக்குறள் போல் ஒரு சிறிய கவர்னர் உரையையும் அதற்குத் தெளிவுரைபோல விரிவான நிதி நிலை அறிக்கையையும் தந்திருக்கின்ற இந்த அரசை, நான் சார்ந்துள்ள இந்திய தேசிய லீக் கட்சியின் சார்பில் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். தேர்தல் அறிக்கையில் அறிவித்தவைகளை எந்தவிதமான விளம்பரமுமின்றி செயலாக்கிக் கொண்டிருப்பது பாராட்டத்தக்கது. இதுவே சென்ற ஆட்சிக் காலமாக இருக்குமேயானால் அரசு செலவில் பல இலட்சம் ரூபாய்க்கு செய்தித் தாள்களில் பக்கம் பக்கமாக விளம்பரங்கள் வந்திருக்கும். ஆனால் அவற்றைத் தவிர்த்திருப்பதனால் இந்த அரசு பல இலட்சம் ரூபாய்களை

மிச்சமாக்கியிருக்கிறது. அதற்காக நான் என்னுடைய பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மக்கள் அளித்த மாபெரும் தீர்ப்பின் காரணமாக உருவான இந்த வலிமையான அரசு, கடந்த ஐந்தாண்டுகளில் நடைபெற்ற, ஊழல் ஆட்சியாளர்களால் கொள்ளையடிக்கப் பெற்ற பணத்தையும், சேர்த்துள்ள சொத்துக்களையும் உறுதியோடு நடவடிக்கை எடுத்து கைப்பற்றி, அரசின் கஜானாவில் சேர்க்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

குடும்ப அட்டைக்கு வழங்கப்படுகின்ற மாதம் 20 கிலோ அரிசி முழுமையாக மக்களுக்குக் கிடைக்க ஆவன செய்வதோடு, கிலோ அரிசி 2 ரூபாய்த் திட்டத்தில் வழங்கப்படுகின்ற அரிசி எங்கள் மாவட்டத்தில் மிகவும் தரம் குறைந்ததாக உள்ளது. எனவே, இந்த அரசு பரிவோடு இதைக் கவனித்து, தரமுள்ள அரிசியாக வழங்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன். குடும்ப அட்டை தேவை என விண்ணப்பித்துள்ள, தகுதி உள்ள அனைவருக்கும் கால நிர்ணயம் இன்றி, உடனே குடும்ப அட்டை வழங்க வேண்டுமென நான் இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன். அரசு, மாதம் முழுவதும் ரேஷன் கடைகளைத் திறந்திருக்க வேண்டும், எல்லாப் பொருள்களும் எல்லா நேரங்களிலும் கிடைத்திட வேண்டும் என்ற உத்தரவைப் பிறப்பித்துள்ள போதிலும், இன்னும் அது அமலுக்கு வரவில்லை. ரேஷன் கடைகளை மாதம் முழுவதும் திறக்காதவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்தியாவிலேயே தமிழகத்தில் இரண்டாம் பசுமைப் புரட்சியை உருவாக்கும் எண்ணத்துடன் வல்லுநர் குழு அமைத்த இவ்வரசிற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே வேளையில் அக்குழுவின் பரிந்துரைகளைப் பெற்றவுடனேயே செயலாக்கத்திற்குக் கொண்டு வந்திட ஆவன செய்ய வேண்டும் எனவும் இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

வணிக ரீதியான பூச்செடிகள் வளர்ப்புக் கொள்கையை அறிவித்திருக்கும் இந்த அரசிற்கு எனது பாராட்டைத் தெரிவிக்கும் வேளையில், எனது தொகுதியான புவனகிரி பகுதியில் ஏற்கெனவே வணிக ரீதியாக மல்லிகைச் செடி வளர்ப்பு உள்ளதால், அதனை அதிகப்படுத்த தக்க உதவியினை இந்த அரசு வழங்க வேண்டுமென நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

பாசன வசதியை விரிவாக்கும் வகையில் எனது தொகுதியில் உள்ள கத்தாழை ஏரிக்கு, அதன் மிக அருகே உள்ள நெய்வேலி நிலக்கரிச் சுரங்க நீரைத் திருப்பி விடுவதன் மூலம் சுமார் 20,000 ஏக்கர் விளை நிலங்களில் மூன்று போக சாகுபடி செய்ய முடியும். எனவே, இந்தத் திட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிவோடு கவனித்து, நிறைவேற்றித் தந்திட வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன். அதோடு ஆதிவராக நல்லூரிலிருந்து அரியகோஷ்டி வரை குஞ்சான் ஓடை வாய்க்கால் வெட்டப்பட வேண்டும் எனவும் வடகுப்பம் வாய்க்கால் தூர்வாரப்பட வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதியில் உள்ள வேளங்கிப்பட்டு, கிள்ளை, எறும்பூர் மற்றும் பி. முட்லூர் ஆகிய இடங்களில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளிக்கூடங்களில் கட்டிட வசதி குறைவாக உள்ளது. இதனால் அங்கு படிக்கும் மாணவர்கள், மரத்தடியிலும், வெய்யிலிலும் படித்து வருகின்றனர். சிறிது மழை வந்தாலும் பள்ளிக்கு விடுமுறை அளிக்க வேண்டியுள்ளது. எனவே, கட்டிட வசதியோடு, பரிசோதனைக் கூடமும் கட்டித்தர வேண்டுமாய் மாண்புமிகு அமைச்சர் அவர்களை இம்மாமன்றத்தின் வாயிலாகக் கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதியில் டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகத்திற்குட்பட்ட ஒரு சட்டக் கல்லூரி அமைத்திட வகை செய்யும்படி மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழுக்கென தனி அமைச்சகத்தை ஏற்படுத்திய இந்த அரசு அதற்கு முக்கியத்துவம் அளிக்கின்ற வகையில், மாவட்ட, வட்ட அளவிலான தலைநகரங்களில் தமிழ் வளர்ச்சி மன்றங்கள் அமைக்கலாம் என்பதை அரசின் பரிசீலனைக்கு வைக்கின்றேன்.

புவனகிரி ஆரம்ப சுகாதார நிலையத்தை மீண்டும் அரசு பொது மருத்துவமனையாக மாற்றித் தந்திட மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வதோடு, கோவிலான்பூண்டி மற்றும் பின்னத்தூரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11-00

எனது தொகுதியில் உள்ள அனைத்து கிராமச் சாலைகளுமே மிகவும் மோசமாக உள்ளன. குறிப்பாக சிதம்பரத்திலிருந்து கிள்ளை, முடசல் ஓடை சாலைகளில் உள்ள குழிகளில், நீச்சல் குளம் அமைக்கலாம்போல் உள்ளது. இந்தச் சாலைகளையெல்லாம் சீர்

செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வளையமாதேவியிலிருந்து, நெய்வேலி செல்லும் சாலை முழுமையாகச் செப்பனிடப்படாமல் உள்ளது. சிதம்பரத்திலிருந்து, அண்ணாமலை நகர் வழியாக பின்னத்தூர் செல்லும் சாலை, மேல்புவனகிரியிலிருந்து குறிஞ்சிப்பாடி செல்லும் சாலை, பி. முட்லூரிலிருந்து பரங்கிப்பேட்டை வழியாக சாமியார்பேட்டை செல்லும் சாலை ஆகிய இவை எல்லாம் மிகவும் மோசமாக உள்ளன. அனைத்துச் சாலைகளையும் உடனடியாகப் புதுப்பிக்க ஆவன செய்ய வேண்டுமாய் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். பரங்கிப்பேட்டையுடன் பொன்னன்திட்டை இணைக்கும் வெள்ளாற்றுப் பாலம் அப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக உள்ளது. அதனை, இந்த நல்ல அரசு, மக்களின் தேவைகளை உணர்ந்த முதல்வரைக் கொண்டிருப்பதனால். விரைவில் நிறைவேற்றித் தந்திட வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

கடலூர் ஓ.டி.-யிலிருந்து ஆலப்பாக்கம் பாலம், அய்யம்பேட்டை, சாமியார்பேட்டை வழியாக பரங்கிப்பேட்டைக்குப் புதிய பேருந்துகள் இயக்கிட வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

சிதம்பரம், தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின், போக்குவரத்து டெப்போவிற்குக் கூடுதலாக 5 மாற்றுப் பேருந்துகளை வழங்கவேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன். அரசுப் பேருந்துகளில் மழைக் காலத்தில் பேருந்துகளில் உள்ளே இருக்கக்கூடியவர்கள் குடை பிடித்து அமர வேண்டிய நிலை உள்ளது. வருகின்ற மழைக் காலத்திற்குள்ளாவது, பேருந்துகளின் கூரைகளின் பழுது நீக்கி மக்களுக்கு உதவிட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

பத்தாம் வகுப்பு வரையிலும் பயிலுகின்ற மாணவர்களுக்கு இலவச பஸ் பாஸ் வழங்கியிருப்பதைப் பாராட்டுகின்ற, மகிழ்வுறுகின்ற அதே வேளையில், அரசுப் பேருந்து நடத்துனர்கள், பள்ளிக்கு மாணவர்கள் செல்லும் நேரத்தில் ஓசி டிக்கட் என்று கருதி ஏற்றாமல் அவர்களை விட்டு விட்டுச் சென்று விடுகின்றார்கள். அப்படிப்பட்ட நிலையை மாற்றி, பஸ் பாஸ் பெற்ற அனைத்து மாணவர்களையும் கண்டிப்பாக ஏற்றிச் செல்ல வேண்டுமென்று ஒரு கண்டிப்பான உத்தரவு பிறப்பிக்க வேண்டுமாய் இந்த மாமன்றத்தின் வாயிலாகக் கேட்டுக் கொள்கிறேன்.

ராஜீவ் காந்தி போக்குவரத்துக் கழக சொகுசுப் பேருந்துகளில் டி.வி.க்கள் வேலை செய்வது இல்லை. இது ஜெ. ஜெ. கழகமாக இருந்தபோதே கடந்த 1½ வருடமாக இப்படித்தான் உள்ளது என்று

கூறுகின்றார்கள். ஆனால் அதற்கு டிவி., வி.சி.ஆர். மெயின்டனன்சுக்காக தனியாக கான்ட்டிராக்டர்கள் உள்ளனர். ஆனால் ரிப்பேர் செய்யாமலேயே வெறும் பில்கள் மட்டும் போட்டு தொகை பெற்று வந்திருக்கின்றனர். இது சமீப காலம் வரை நீடித்து இருக்கின்றது. அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதோடு மீண்டும் நல்லமுறையில் அவற்றை இயங்கச் செய்ய ஆவன செய்ய வேண்டுமென இம்மாமன்றத்தின் வாயிலாக நான் கேட்டுக் கொள்கிறேன்.

விற்பனை வரி மற்றும் அதனை வசூலிப்பது தொடர்பான நடைமுறைகள் எளிதாக்கப்பட்டுள்ளதற்கு, அடிப்படையில் நான் ஒரு வணிகக் குடும்பத்தைச் சேர்ந்தவன் என்ற முறையில் பெரிதும் நன்றி பாராட்டுகிறேன்.

கள்ளச் சாராயம் எனது தொகுதியில் ஆறாக ஓடுகின்றது. குறிப்பாக கிள்ளை, பரங்கிப்பேட்டை, புதுச்சத்திரம், சேத்தியாதோப்பு பகுதிகளில் அதிகமாக உள்ளது. காவல் துறையின் உயர் அதிகாரிகளின் எச்சரிக்கையையும் மீறி இத்தொழில் அமோகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதற்குத் தீர்வு காண காவல் துறையில் உள்ள கலால் பிரிவை முழுவதும் நீக்கிவிடலாம் என்ற யோசனையை இந்த அவையில் முன்னே வைக்கின்றேன். ஏனென்றால் கலால் துறை மாதந்தோறும் குறிப்பிட்ட தொகையை அபராதமாக வசூலிக்க வேண்டுமென்ற இலக்கு உள்ளதால், அதற்காக கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களையும் ஊக்குவித்து, தங்களுக்கு மாமூலையும், அரசுக்கு அபராதத் தொகையையும் பெற்றுக் கொண்டு, அவர்களுக்கு எந்த ஒரு சிறைத் தண்டனையும் பெற்றுத்தரக்கூடிய வகையிலே நடவடிக்கை எடுக்காமல், வழக்குப் போடாமலே விட்டுவிடுகின்றனர். எனவே கலால் பிரிவை நீக்கிவிட்டாலே, கள்ளச் சாராயத்தை ஓரளவு கட்டுப்படுத்தலாம் என்பது எனது கருத்தாகும்.

எனது தொகுதியில் உள்ள ஒரே தொழிற்சாலையான, அனைத்துத் தரப்பு மக்களாலும் பாராட்டப்பெற்ற, புகழப்பெற்ற, திராவிடத் தளபதியான அமரர் எம்.ஆர். கிருஷ்ணமூர்த்தி அவர்களின் நினைவாக, அவரின் பெயரைத் தாங்கிய எம்.ஆர். கிருஷ்ணமூர்த்தி கூட்டுறவு சர்க்கரை ஆலை சென்ற ஆண்டுவரை 27 கோடி ரூபாய் நட்டத்தில் இருந்தது. தற்போதைய நிலவரப்படி அது 44 கோடி ரூபாயாக உயரும் என அச்சப்படுகின்றோம். தனியார் ஆலைகள் மட்டும் பெரும் இலாபத்தில் இயங்கும்போது அரசுத் துறை சர்க்கரை ஆலைகள் மட்டும் ஏன் நஷ்டத்தில் இயங்குகின்றன என்பதைக் கண்டுபிடித்து

நட்டத்தில் இயங்கக்கூடிய அந்த ஆலையை லாபகரமாக நடத்தவும், எனது தொகுதியில் உள்ள ஒரே தொழிற்சாலையான எம்.ஆர். கிருஷ்ணமூர்த்தி கூட்டுறவு சர்க்கரை ஆலை நீடித்து இயங்கவும் வழிவகை காண வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கல்வியிலும், வேலை வாய்ப்பிலும், பொருளாதாரத்திலும் மிகவும் பின் தங்கியுள்ள முஸ்லீம் மக்களுக்கு, மக்கள் தொகை விகிதாச்சாரப்படி இட ஒதுக்கீடு வழங்க வேண்டும் என்று இம்மாமன்றத்தின் வாயிலாகக் கேட்டுக் கொள்கிறேன். வக்ஃப் வாரியத்திற்கு, அரசு புதியவர்களைக் கொண்ட, புதிய குழுவினை அமைத்துச் சீரமைக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ் நாட்டில் சென்ற ஆட்சிக் காலத்தில் அற்ப காரணத்திற்காகக் கூட உள்நோக்கத்தோடு பல முஸ்லீம் இளைஞர்கள், சிறுவர்கள், தடாவில் கைது செய்யப்பட்டு, விசாரணையின்றி சிறையில் வாடிக் கொண்டிருக்கின்றனர். எனவே இந்த அரசு அவர்களின் நிலையைப் புரிந்து, பரிவு காட்டி அவர்களை விடுதலை செய்ய வேண்டும்....

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் ஆர். காந்தி.

உறுப்பினர்களுக்கு ஒரு வேண்டுகோள். இன்று கட்சித் தலைவர்கள் எல்லாம் பேச வேண்டும். ஆகவே, பேசுகின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் 10 நிமிடத்திற்குள்ளே முடிக்க வேண்டும்.

திரு. ஆர். காந்தி: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். எனக்கு இந்தப் பேரவையில் அமர தகுதி தந்த தானைத் தலைவர், தமிழக முதல்வர், டாக்டர் கலைஞர் அவர்களே, உங்களை வணங்கி, என்னைத் தேர்ந்தெடுத்து வாய்ப்பு நல்கிய இராணிப்பேட்டை தொகுதி மக்களுக்கு நன்றி செலுத்தி, அவர்களின் சார்பாக எனது முதல் உரையைத் தொடங்குகிறேன்.

நமது முதல்வர் தந்த நிதிநிலை அறிக்கையைப் பார்த்தால், ஒரு தமிழர் குடும்பத் தலைவர் என்ற அளவில், ஏழை மக்கள் தங்கள் குடும்பத்தில் அன்றாடம் பயன்படுத்தும் அத்தியாவசியப் பண்டங்களுக்கு வரி விலக்கு, மாநிலத்தில் ஒரு குடும்பத்திற்கு 20 கிலோ அரிசி வழங்கும் திட்டம் II, போன்றவற்றை அறிவித்தது ஒரு பண்பட்ட குடும்பத் தலைவரின் உணர்ச்சிகளின் வெளிப்பாடுதான்

என்று ஏழை மக்களும் குடும்பத் தலைவர்களும் உளமாரப் பாராட்டுவதைக் கேட்டு மகிழ்கிறேன்; முதல்வர் அவர்களை வணங்குகிறேன்.

எனது தொகுதியில் உள்ள லால்பேட்டை அரசினர் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகவும் வல்லம்பாக்கம் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகவும் உயர்த்தித் தந்த மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் அவர்களை வணங்கி நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல் அம்மூர் மற்றும் முசிறி ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு கட்டிடங்கள் கட்ட உதவிய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அண்ணன் ஆற்காட்டார் அவர்களை வணங்கி நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுவாக நான் நன்றி சொல்லப்போனபோது, ஒவ்வொரு கிராமத்திலும் கண்ட பொதுவான நிலை என்னவென்றால், அங்குள்ளவர்கள் குடிநீர், சாலை வசதி, பட்டா, குடும்பக் கார்டு— இவைகளைத்தான் எந்த ஊருக்கு போனாலும் கேட்கிறார்கள்; வேறு ஒன்றும் கேட்கவில்லை. பொன்னை கிராமம் மிகவும் பின்தங்கிய கிராமம். அந்த கிராமத்தைச் சுற்றி எந்தப் பக்கமும் ரோடு கிடையாது. உதாரணத்திற்கு பொன்னையிலிருந்து எஸ். எம். காலனிக்கு 4 கிலோ மீட்டர் ரோடு இருக்கிறது. அந்த 4 கிலோ மீட்டரும் நடந்துதான் வர வேண்டும் அல்லது சைக்கிளில்தான் வர வேண்டும். அங்கு ரோடே கிடையாது; பஸ் வசதி கிடையாது. அங்குள்ளவர்கள் ஹாஸ்பிடலுக்கு வர வேண்டுமென்றால் பொன்னைக்குதான் வர வேண்டும். இப்படிப்பட்ட நிலைமை என்னுடைய தொகுதியில் இருக்கிறது. அதனால், முக்கியமாக இந்த சாலை வசதி இல்லாத கிராமத்திற்கு உடனடியாக சாலை வசதி, பஸ் வசதி ஆகியவற்றை கலைஞர் அவர்கள் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் பொன்னையில் ஆதிதிராவிட மக்களுக்கு 4 வருடங்களுக்கு முன்பு தந்த 5 ஏக்கர் நிலம் இருக்கிறது. ஆனால், அந்த நிலச் சொந்தக்காரர் ஸ்டே வாங்கி வைத்து இருக்கிறார். அதனால் அங்கே தொகுப்பு வீடுகள் கட்ட முடியவில்லை. அந்த ஸ்டேயை உடனடியாக ரத்து செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் கொக்கேரி என்ற கிராமத்தின் பக்கத்தில் புண்ணியபுரம் என்று ஒரு ஊர் இருக்கிறது என்பது எனக்கே தெரியாமல் இருந்தது;

நான் வாக்கு கேட்கப் போகும்போது அங்கே போகவில்லை; ஆனால் நன்றி சொல்ல அங்கு போனேன். என்னுடைய தொகுதியில் ஒரு புண்ணியபூமி இருக்கிறது என்று சந்தோஷப்பட்டேன். ஆனால், அங்கே கார் 2 பர்லாங் போனவுடன் ஒரு புதர் வந்தது; அங்கிருந்து போனவுடன் ஒரு பெரிய கால்வாய் வந்தது; அங்கிருந்து மோட்டார் சைக்கிளை எடுத்துக் கொண்டு 2 பர்லாங் தூரம் சென்று அந்த ஊருக்குப் போனோம். அந்த புண்ணியபூமி எப்படி இருக்கிறது என்றால், பேர்தான் புண்ணிய பூமியே தவிர, அங்கே ஒரு வசதியும் கிடையாது. எனவே, கலைஞர் அவர்கள் கருணை காட்டி அந்த ஊருக்கு உடனடியாக ஒரு கல்வெர்ட்டும், ரோடும், மின்சார வசதியும் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல் வள்ளிமலை அங்கே இருக்கிறது. அது முருகர் கோயில். அந்த ஊரில்தான் ஒரு ஜாதிக்கு ஒரு கல்யாண மண்டபம் இருக்கிறது; வேறு எங்கேயும் இப்படிப் பார்க்க முடியாது. அங்கு குடிநீர் வசதியே கிடையாது. அங்கு ஆற்றில் இருந்து உடனடியாக குடிநீர் வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11-10

அடுத்தது 'பெல்' நிறுவனம். அந்த 'பெல்' நிறுவனம் என்னுடைய தொகுதியில், முன்னாள் சட்டமன்ற உறுப்பினராகவும் தற்போது மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சராகவும் இருக்கும் திரு. துரைமுருகன் அவர்களின் பெரு முயற்சியினால் ஆரம்பிக்கப்பட்ட மத்திய அரசின் பொதுத் துறை நிறுவனம், அங்கு உப்பு நீரைக் குடிநீராக ஆக்கும் இயந்திரம் மற்றும் காற்றின் மூலம் மின்சாரம் தயாரிக்கும் இயந்திரம் தயாரிக்கிறார்கள். மாநில அரசு தன் ஆர்டர்களை இந்த நிறுவனத்திற்கு தந்து விரிவாக்கம் செய்து, எனது தொகுதியில் உள்ள படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பைப் பெற்றுத் தருமாறு தமிழக முதல்வர் அவர்களை வேண்டுகிறேன். 10 ஆண்டுக் காலமாக தற்காலிகமாகப் பணிபுரியும் தொழிலாளர்களும், கூட்டுறவு முறையில் பணிபுரியும் கேன்டீன் மற்றும் சிறு தொழிலாளர்களும், 'பெல்' நிறுவனத்தில் நிரந்தரப் பணியாளர்களாக நியமிக்கப்பட மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்த வேண்டுகிறேன். இந்த நிறுவனத்தை அமைப்பதற்காக நிலம் கொடுத்த 1099 பேரில் 550 பேருக்குத்தான் வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது. மீதிப் பேருக்கும் வேலைவாய்ப்பு கிடைக்க நடவடிக்கை எடுக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், என் தொகுதியில் 'சிப்காட்' இருக்கிறது. நவ்லாக் பஞ்சாயத்து அங்கே இருக்கிறது. அந்த நவ்லாக் பஞ்சாயத்தில் ஆறு மாதத்திற்கு முன்பு குடிநீர்ப் பிரச்சினை ஏற்பட்டு, பொதுமக்கள் என் தலைமையில் சாலை மறியல் செய்ய நோட்டீஸ் கொடுத்தார்கள். அப்போதிருந்த ஆட்சியாளர்கள் உடனடியாக அதைச் செய்வோம் என்று சொல்லி, இதுவரைக்கும் செய்யவில்லை. ஆனால் 3 மாதத்திற்கு முன்பு 69 லட்சம் ரூபாய் செலவில் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு அதிகாரிகள் எஸ்டிமேட் போட்டிருக்கிறார்கள். அதிகாரிகள் எப்படியிருக்கிறார்கள் என்றால், முதல்வர் அவர்களே, தாங்கள் ஒரு நாளைக்கு 22 மணி நேரம் கஷ்டப்பட்டுக் கொண்டு மக்களுக்குச் சேவை செய்யவேண்டுமென்று நினைக்கிறீர்கள். ஆனால் அது நிறைவேறுமா என்ற அச்சம் எங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. எதனால் என்றால், நான் சட்டமன்ற உறுப்பினராக வந்தவுடனே அந்தக் குடிநீர் வாரிய அதிகாரிகளைக் கேட்டேன். அது இதுவரைக்கும் நடக்கவில்லை. முன்பு கேட்டபோது அந்த பைல் சி.இ. ஆபிசில் இருக்கிறது என்றார்கள். இப்போது கேட்கிறபோது, அதில் 'கொரி' போட்டு அனுப்பியிருக்கிறார்கள் என்கிறார்கள். இதேமாதிரியாக இரண்டு மாதமாக 'கொரி' போட்டு, 'கொரி' போட்டு திருப்பியனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு சின்ன சந்தேகத்துக்குக் கூட 'கொரி' போட்டு அனுப்பினால், நாம் கொண்டு வருகிற திட்டங்கள் இந்த ஐந்தாண்டுகளுக்குள் எப்படி நிறைவேறும் என்று அச்சமாக இருக்கிறது. அதனால் இன்றைக்கு இருக்கிற அதிகாரிகள்—எல்லோரும் என்று சொல்ல முடியாது—பல பேர் நல்லவர்கள் இல்லை. இதுவரையில் கொள்ளையடித்துக் கொண்டிருந்தவர்கள் இப்போது திடீர் என்று அவர்கள் மாற வேண்டும் என்றால் அவ்வளவு ஈசியாக மாறுவதற்கு சான்ஸ் இல்லை. அவர்களிடம் நான் கேட்கிறபோது ஏதாவது ஒன்றைச் சொல்கிறார்கள். மந்திரியிடம் ஒன்றைச் சொல்கிறார்கள். நார்ம்ஸ் பற்றிச் சொல்கிறார்கள். இதற்கு ஒரு நார்ம்ஸ், அதற்கு ஒரு நார்ம்ஸ் என்று சொல்கிறார்கள். எந்த நார்ம்ஸ் அடிப்படையில் நாம் கேட்பது என்று நமக்குத் தெரியவில்லை. அதே சமயத்தில், இதற்கு முன்பெல்லாம் எந்த நார்ம்சில் செலவு செய்தார்கள் என்று நமக்குத் தெரியவில்லை. இதற்கு முன்னால் அம்மையார் அவர்கள் வந்த உடனேயே, திடீர் என்று ரூ. 50 லட்சம் செலவு செய் என்றால், எந்த நார்ம்சில் பண்ணினார்கள் என்று தெரியவில்லை. ஊருக்கு குடிக்கத் தண்ணீர் வேண்டுமென்று கேட்கிறோம். இதைக் கேட்டால் நார்ம்ஸ் பற்றிப் பேசுகிறார்கள். என்ன இது? இதையெல்லாம் கலைஞர் அவர்கள் மாற்றவேண்டும். நீங்கள் திட்டங்கள் தீட்டினால் மட்டும் போதாது.

அரசியல்வாதிகள் ஆகட்டும், யாராகட்டும், உடனடியாக அதிகாரிகளை அழைத்துப் பேசி, அந்த 'கொரி' போடும் பழக்கத்தை விட்டுவிடச் செய்யவேண்டும். ஒரு பைல் வந்தால் அன்றைக்கே, அது எங்கேயிருந்து வந்தாலும். டிவிஷனல் இன்ஜினியரிடமிருந்து வந்தாலும், சி.இ. யிடமிருந்து வந்தாலும், அதை அன்றைக்கே செயல்படுத்த வேண்டுமென்று ஆர்டர் போட வேண்டும். அதேமாதிரி கலெக்டர்கள் திடீரென்று ஆர்டர் பண்ணியிருக்கிறார்கள். முனிசிபாலிட்டியில் வேலை ஆவதே கஷ்டம். இப்போது ஸ்பெஷல் ஆபீசர் போட்டிருக்கிறார்கள். எதைச் செய்ய வேண்டுமானாலும் எஸ்.ஓ.தான் செய்யவேண்டுமாம். நவ்லாக்கில் போர்வெல் ஒன்று போய் விட்டது. அதைக் கேட்டோம். போர்வெல் போட கலெக்டரிடம் பர்மிஷன் வாங்கவேண்டுமென்று சொல்கிறார்கள். கலெக்டர் பர்மிஷன் கொடுக்க இரண்டு மாதமாகும். போரைக் கழட்டி வைத்து விட்டு, பைப்பை மாற்ற இரண்டு மாதமாகிவிட்டது. இப்படியிருந்தால் நாம் போடுகிற திட்டங்கள் எப்படி நிறைவேறும்? பி.டி.ஓ.-வைக் கேட்டால், கலெக்டரிடம்தான் பைல் போய் வரவேண்டுமென்று சொல்கிறார்கள். முன்பாவது கமிஷனருக்கு கொஞ்சம் கொஞ்சம் பவர் இருந்தது. அது இல்லாமல், இப்போது ஸ்பெஷல் ஆபீசரையும் போட்டுவிட்டார்கள். 1000 ரூபாய் செலவு செய்யவேண்டுமானால் கூட, முனிசிபாலிட்டியில் செய்ய முடியாது. ஸ்பெஷல் ஆபீசரிடம்தான் போய்வர வேண்டும். கலெக்டருக்கு இவ்வளவு அவ்வளவு என்று அதிகமான வேலை இருக்கிறது. ஆகவே எந்த முறையில் இவை எல்லாம் செயல்படும் என்ற சந்தேகம் ஏற்பட்டு இருக்கிறது. உள்ளாட்சித் தேர்தல்கள் வருகிற நேரம். எப்படி செய்வது என்று சந்தேகமாக இருக்கிறது. அந்த 69 லட்சம் ரூபாய் குடிநீர்த் திட்டத்தை உடனடியாகச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, நவ்லாக் கிராமத்தில் விவசாயப் பண்ணை இருக்கிறது. அங்கே சுமார் 700 ஏக்கர் நிலம் இருக்கிறது. தேவையான வசதிகள் இருக்கின்றன. அங்கே விவசாயக் கல்லூரி அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு விவசாய அமைச்சர் வீரபாண்டி அவர்களிடம் சொன்னேன். செய்வதாகச் சொன்னார்கள். அதை விரைவில் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், சிப்காட்டில் திருமலை கெமிக்கல்ஸ் என்று ஒரு கம்பெனி இருக்கிறது. அங்கே கெமிக்கல்ஸ் தயார் செய்கிறார்கள். அதனால் அங்கே உள்ள கிராம மக்களுக்கு பீதி ஏற்பட்டிருக்கிறது. ஜெர்மனியில் இருந்த ஒரு கம்பெனியை, அங்கே டிஸ்மாண்டில்

பண்ணிய கம்பெனியை, அங்கே உதவாத கம்பெனியை, பொலூட்டட் என்று சொல்லி அனுப்பிய அந்த கம்பெனியை, இப்போது போன வாரம் நான் போய்ப் பார்த்தேன். இதனால் பொலூஷன் இல்லை என்று சொன்னார்கள். பொலூஷன் டைல்யூட்டாகி விட்டது என்று சொன்னார்கள். அங்கே உள்ளவர்களை அழைத்துக்கொண்டு போய்ப் பார்த்தேன். அங்கே போனவுடன் நம் ஆபீசர்கள் நமக்கு எதுவும் சொல்லமாட்டேன் என்கிறார்கள். கிட்டத்தட்ட 150 கோடி ரூபாய் செலவில் ஜெர்மனியிலிருந்து அதை எடுத்துக் கொண்டு வந்து இங்கே அமைக்கிறார்கள். சுற்றுப்புறத்தில் இருப்பவர்கள் எல்லாம், இது மீண்டும் ஒரு போபால் கேஸ் விபத்து மாதிரி ஆகிவிடும் என்று பயப்படுகிறார்கள். எல்லோருக்கும் ஒரு பீதி இருக்கிறது. ஆனால் யாருக்கும் என்ன கெமிக்கல்ஸ் என்று சரியாகத் தெரியவில்லை. பொலூஷன் போர்டில் கேட்டாலும் நமக்குச் சரியாகச் சொல்வதில்லை. இதற்கு மத்திய அரசிடம் அனுமதி வாங்கவேண்டுமென்று சொல்கிறார்கள். ஆனால் அங்கே இருக்கிற சிலர் அது முன்னாள் பிரசிடெண்ட் வெங்கடராமனுக்குச் சம்பந்தப்பட்டது என்று சொல்கிறார்கள். அதனால் எது, என்ன என்று தெரியவில்லை.

அங்கே சுற்றுப்பட்டில் இருக்கின்ற கிராமங்களுக்குக் குடிப்பதற்குத் தண்ணீர் கிடையாது. பாரதி நகர், சத்யா நகர், வானூம்பாடி, செங்குத்தாங்கல் போன்ற ஐந்தாறு கிராமங்களுக்குக் குடிக்கத் தண்ணீர் இல்லை. *(மணியடிக்கப் பெற்றது)* நான் மாமூலாகப் பேசுவதில்லை. உங்களுக்குத் தொந்தரவும் கொடுப்பதில்லை. கருணை அடிப்படையில் இன்னும் கொஞ்ச நேரம் நீட்டித்துக் கொடுக்க வேண்டும். தினமுமா பேசுகிறேன்? என்றைக்குமா கேட்கிறேன், குறைகள் சொல்கிறேன். கருணை அடிப்படையில் கொஞ்ச நேரம் கொடுங்கள்.

முற்பகல் 11 -15

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் வீட்டிலே பேசுகிற மாதிரி பேசிக் கொண்டிருந்தீர்கள், அதனால் மறந்து விட்டீர்களோ என்று நினைத்தேன். *(சிரிப்பு)*

மாண்புமிகு திரு. துரைமுருகன் : படிப்பதை விட இது பரவாயில்லை. *(சிரிப்பு)*

திரு. ஆர். காந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக அந்த 4 கிராமங்களுக்கும் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை உடனடியாக இந்த ஆண்டே முதல்வர் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல இராணிப்பேட்டை நகரத்தை கிரேட்-1 முனிசிபாலிட்டியாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அங்கே பஸ் ஸ்டாண்ட் ஒன்று இருக்கிறது. அந்த பஸ் ஸ்டாண்ட் செயல்படுவதே கிடையாது. அங்கே ஒரு ஏரி இருக்கிறது. அந்த ஏரியில் மண் நிரப்பி ஒரு மாடர்ன் பஸ் ஸ்டாண்ட் அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தோல் தொழிற்சாலைகளைப் பற்றி சொல்வதானால் மூடிக் கிடக்கின்றன என்பது தலைவர் அவர்களுக்குத் தெரியும். நேற்றையதினம் தோல் தொழிற்சாலைகளைப் பற்றி பேசினார்கள். இருந்தாலும் உடனடியாக நடவடிக்கையெடுத்து மூடிக் கிடக்கிற தொழிற்சாலைகளைத் திறக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வாலாஜாவில் என். எச். 4-ல் ஒரு ஆஸ்பத்திரி இருக்கிறது. அரக்கோணம் போய் விட்டு வரும்போது நிச்சயமாக அதை மாடர்ன் ஆஸ்பத்திரியாக ஆக்குவேன் என்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதை முதல்வர் அவர்களிடம் சொல்லி நிச்சயமாக மாடர்ன் ஆஸ்பத்திரியாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கல்வி என்றாலே வேதனையாகி விட்டது. ஒரு ஸ்கூலுக்குப் போய்ப் பார்த்தேன். ஸ்கூலில் எவ்வளவு வாத்தியார்கள் என்றால் ஒரு வாத்தியார் கூட இல்லை. அதைப் பார்த்து விட்டு பக்கத்திலே சத்துணவுக்கூடம் என்று சொல்கிறார்களே, அதைப் பார்க்கலாம் என்று அங்கே போனேன். அது கிரிபாக்கம் என்ற கிராமம். அங்கே சத்துணவு பண்ணி வைத்திருந்தார்கள். சாதத்தைப் பார்த்தபோது ஸ்மெல் வந்தது. அரிசியை வாஷ் பண்ணவே இல்லை. ஏன் என்று கேட்டால் பாத்திரம் இல்லையென்று சொன்னார்கள். பாத்திரம் இல்லையென்றால் சாதத்தைக் குழந்தைகள் எப்படி சாப்பிடுவார்கள் என்று கேட்டேன். அங்கே இன்னொரு அம்மா இருந்தார். ரிஸ்ட் வாட்ச் கட்டிக் கொண்டு, நல்ல சாரி கட்டிக் கொண்டு இருந்தார். அவர் வாத்தியாராக இருப்பார் என்று நினைத்தேன். அவர் அங்கேயிருக்கிற ஆயா போலிருக்கிறது. அவர் ஒருவர்தான் நன்றாக ஸ்டைலாக இருந்தாரே தவிர வேறு ஒன்றும் கிடையாது. (சிரிப்பு) இதை சிரிப்பதற்காக நான் சொல்லவில்லை. கவர்ன்மெண்டிலே சத்துணவிற்கு நாம் எவ்வளவு செலவு பண்ணுகிறோம், அங்கே எவ்வளவு போய்ச் சேர்கிறது என்று பார்க்கிறபோது 30 சதவீதம் கூட சத்துணவிற்குப் போய்ச் சேரவில்லை. எதற்கு இதைச் சொல்கிறேன் என்றால் அம்மூரில் ஒரு ஸ்கூலுக்கு போனேன். எவ்வளவு கே.ஜி. அரிசி என்றால் 56 கே.ஜி. என்று சொன்னார்கள். அந்த பாத்திரம் எவ்வளவு பிடிக்கும் என்றால் 30 கே.ஜி. என்றார்கள். அதிலே

போட்டிருப்பது 25 கே.ஜி. தான் இருக்கும். அந்த மாதிரி கொள்ளை அடிக்கிறார்களே தவிர வேறல்ல. அரசியல்வாதிகள் கொள்ளையடிப்பதில் முதலில் எதிலே அடிக்கிறார்கள் என்றால் ஏழைகளுக்கு எது போய்ச் சேர்கிறதோ அதிலேதான் அடிக்கிறார்கள். போன கவர்ன்மென்டிலே சத்துணவிலே கொள்ளை, இலவச வேட்டி, சேலை வழங்கியதிலே கொள்ளை, எல்லாம் அதிலேயும் கொள்ளையடித் திருக்கிறார்கள். நாம் திட்டங்களைத் தீட்டுகிறோம் என்றாலும், அதிலே நாம் கண்டிப்பாக இருந்தால்தான் நம் ஆட்சியிலே நல்ல பெயர் எடுக்க முடியும். அதனாலே கலெக்டரிடம் சொல்லி யார் தவறு பண்ணினாலும் அவர்கள் மீது உடனடியாக சத்துணவைப் பொறுத்தவரையில் ஆக்ஷன் எடுக்க வேண்டும். அதுதான் முக்கியம்.

அடுத்து தொகுப்பு வீடுகள் என்கிறார்கள். அந்தத் தொகுப்பு வீடுகளை நான் பார்த்தேன். (மணியடிக்கப் பெற்றது) நம்முடைய கவர்ன்மென்டில் கட்டியதையும் பார்த்தேன், போன கவர்ன்மென்டில் கட்டியதையும் பார்த்தேன், முழுவதும் கட்டுவதற்கு முன்னாலேயே தண்ணீர் ஒழுகுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உரையை முடியுங்கள்.

திரு. ஆர். காந்தி: இந்தத் தொகுப்பு வீடுகளில் ஜனங்களை ஏமாற்றுகிறோம். அந்தத் தொகுப்பு வீட்டிலே போய் யாரும் குடி இருக்க முடியாது. அந்த அளவுக்கு இருக்கிறது. *21,000* ரூபாயிலே வீடு கட்டுகிறோம் என்கிறார்கள். அதிலே *4,500* ரூபாய் அந்த வீட்டுக்காரர்களிடம் வாங்குகிறார்கள். ஆக்ச்சுவலாக யாருக்கு வீடு போய் சேர வேண்டுமோ அவருக்குச் சேர்வதில்லை. எதனால் சொல்கிறேன் என்றால் *4,500* ரூபாய் கேட்கிறபோது அதிலே யார் வசதியானவராக இருக்கிறாரோ அவர்தான் அந்த வீட்டுக்கு கொடுக்கிறார். வசதி இல்லாதவர்களுக்கு வீடு கிடையாது. கடந்த ஐந்தாண்டு கால ஆட்சி இந்த நிலைமையிலேதான் போனது. இப்போது *21,000* ரூபாயிலே வீடு கட்டினால் சரியாக வராது. ட்ரெயினேஜ் போதாது, லெட்ரின் வசதி கிடையாது. அதனால் *21,000* ரூபாயாக இருப்பதை *30,000* ரூபாயாக்க வேண்டுமென்று, மாண்புமிகு கலைஞர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அதை நல்லமுறையில் கட்டினால்தான் பயன்படும். ஏதோ பெயருக்குக் கட்டுகிறோம் என்று கட்டினால் அது வீண்தான். கவர்ன்மென்ட் பணம் வேஸ்ட் ஆகிவிடும். அதனால் நீங்கள் இன்ஜினியர்களைக் கேட்டால், உண்மையை கலைஞர் அவர்களிடம் நிறைய பேர் சொல்வது கிடையாது. கலைஞர் அவர்களிடம் உண்மையைச் சொன்னால்தான் அது நிறைவேறும். கலைஞர் மாதிரி உலகத்தில் ஒருவர் இருக்கிறாரா என்றால் யாரும்

கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே அவரிடம் உண்மையைச் சொல்ல வேண்டும். ஆனால் உண்மையைச் சொல்வதற்கு யாரும் இல்லை. பயப்படுகிறார்கள். அதனாலே பொதுவாகவே இந்தத் திட்டத்தைக் கலைஞர் அவர்கள் நல்ல முறையில் நடைமுறைப் படுத்துகிற வகையில் கொண்டு வர வேண்டும்.

பிற்பகல் 11-20

அதேபோல வாலாஜா முனிசிபாலிட்டியிலே பணமே கிடையாது. ஒவ்வொரு முனிசிபாலிட்டியிலும் பணம் இருந்தால்தான் ஜெனரேட்டர் வாங்கலாம். இன்றைக்கு வாட்டர் போர்டிலே உள்ள ஒவ்வொரு பம்பிங் ஸ்டேஷனிலும் 24 மணி நேரமும் மின்சாரம் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 15 நிமிடங்கள் ஆகிவிட்டன. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவையினரே உங்கள் பேச்சை ரசிக்கிறார்கள். அதனாலே கூடுதலாக நேரம் கொடுக்கச் சொல்லி, எல்லோரும் எனக்கு வேண்டுகோள் விடுக்கிறார்கள்.

திரு. ஆர். காந்தி: உடனடியாக முதலமைச்சர் நிதியிலிருந்து ஜெனரேட்டரை வாங்கிக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து கூணமேடு, வாலாஜா அணைக்கட்டுப் பகுதியில் ஒரு தரைப்பாலம் இருக்கிறது. என்னைவிட மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களுக்கு இராணிப்பேட்டை தொகுதியைப் பற்றி அதிகமாகத் தெரியும். அவர்கள் அடிக்கடி சொல்வார்கள். என்னை ஆளாக்கியது இராணிப்பேட்டை தொகுதி என்று சொல்வார்கள். அதைக் கவனத்தில் கொண்டு, பொதுப் பணித்துறையிலே எந்தெந்த வேலைகள் பாக்கி இருக்கின்றனவோ அந்த வேலைகளை எல்லாம் பூர்த்தி செய்து தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் விஷாரம் பகுதி முஸ்லீம்கள் இருக்கின்ற பகுதி. அங்கேயுள்ள தாய்மார்கள் எல்லாம் சைக்கிள் ரிக்ஷாக்களில்தான் போகிறார்கள். அங்கேயுள்ள மலையடிவாரத்திலிருந்து தண்ணீர் வந்து விழுவதால், தெருக்களில் எல்லாம் ஒரே மணலாகத்தான் இருக்கிறது. இதனால் சைக்கிள் போக முடியாது. ஆட்டோ-ரிக்ஷா போக முடியாது. அந்த அளவிற்கு நிலைமை இருக்கிறது. எனவே, இதற்கு உடனடியாக சிமெண்ட் ரோடு போட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பஞ்சாயத்திலே பணம் கிடையாது. இதற்கும் தலைவர்தான் கொடுக்க வேண்டும்.

அதேமாதிரி பஸ் ரூட் நிறைய இருக்கிறது. அதைப்பற்றி முழுமையாகப் பேச முடியவில்லை, இருந்தாலும் பஸ் ரூட் தேவைகளை உடனடியாகப் பூர்த்தி செய்து தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

வரும் 5 ஆண்டுக் காலத்தில், இந்தியாவிலே உள்ள மாநிலங்களிலே நம்முடைய தமிழ்நாட்டை முதல் ஸ்டேட்டாக, ஒரு மாடர்ன் ஸ்டேட்டாக ஆக்க வேண்டும். அதற்காக, உதாரணத்திற்கு இந்த வருடம் என்னுடைய இராணிப்பேட்டை தொகுதியை தத்து எடுத்து, உடனடியாக எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, பேச வாய்ப்பு அளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ந. கருப்பண்ண உடையார்.

***திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னை இந்த மாமன்றத்திற்கு முதன் முறையாக அனுப்பி வைத்த, மரியாதைக்கும் வணக்கத்திற்கும் உரிய தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர், மக்கள் தலைவர் ஜி. கே. மூப்பனார் அவர்களுக்கும், தேர்தல் நேரத்திலே என்னுடைய தொகுதிக்கு வருகை தந்து எனக்கு ஆதரவு அளித்த மாண்புமிகு முதல்வர், டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், எனக்கு வாக்களித்து, சட்டமன்றம் அனுப்பிவைத்த எனது தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் எனது நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு, எனது உரையைத் தொடங்குகிறேன்.

தமிழக அரசின் 1996-97 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையினை வரவேற்று, ஏழை மக்கள் அன்றாடம் உபயோகப்படுத்தக் கூடிய ஒன்பது பண்டங்களுக்கு வரி விலக்கு அளித்து இருப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பள்ளிகளில் 10-ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு இலவச பேருந்து பாஸ் அளித்ததற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையில் 1405-ஆம் பசலி ஆண்டுக்கு நில வரி ரூ. 22.30 கோடி அளவுக்குத் தள்ளுபடி செய்ததற்கு விவசாயிகள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகத்தில் இந்த ஆண்டு ஆதிதிராவிடர்களுக்கு 60 ஆயிரம் இலவச கான்கிரிட் வீடுகள் கட்டுகின்ற திட்டத்தைப் பாராட்டுகிறேன். தமிழகத்தில் அரசு மூலம் பல ஆண்டுகளில் கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளில் பல ஆயிரக்கணக்கான வீடுகள் குடியிருக்கத் தகுதியில்லாமல் இருக்கிறது. மேற்படி வீடுகளை அரசு மூலம் சீர் செய்து கொடுக்க நிதி உதவி அளிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

1996 ஜூலை 24] [திரு. ந. கருப்பண்ண உடையார்]

தமிழகத்தின் வறட்சியைப் போக்கவும், வட இந்தியாவில் வெள்ளக் கொடுமையைத் தவிர்க்கவும், நீண்ட காலமாகப் பேசப்பட்டு வருகிற கங்கை-காவிரி இணைப்புத் திட்டத்தை நிறைவேற்ற, மத்திய அரசில் நாம் இருவரும் அங்கம் வகிப்பதால், தகுந்த சமயம் இது என்பதைக் கருத்தில் எடுத்துக் கொண்டு, தமிழக அரசு மூலம் தீர்மானத்தை நிறைவேற்றி, மைய அரசுக்கு அனுப்பி, இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

தஞ்சை மாவட்ட மக்கள் முழுமையாக விவசாயத்தை நம்பி இருப்பதால், மாவட்டத்தின் மையப் பகுதியாக இருக்கும் எனது தொகுதியான பாபநாசத்தில் அரசு மூலமாக விவசாயக் கல்லூரி ஒன்றை ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பாபநாசம் தொகுதியில் அரசினர் தொழில் பயிற்சி நிலையம் ஒன்றை இந்த ஆண்டே தொடங்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பாபநாசம் தொகுதியில் ஈச்சங்குடியிலிருந்து சேங்கனூர் வரை 50 கிலோ மீட்டருக்கு இடைப்பட்ட சுவாமிமலைப் பகுதியில் ஒரு துணை மின்நிலையம் ஏற்படுத்திக் கொடுத்து, அப்பகுதியிலுள்ள விவசாயிகளுக்குத் தங்குதடையின்றி மின்சாரம் கிடைக்கவும், தடைப்படாமல் தெருவிளக்குகள் எரியவும், துணை மின் நிலையம் ஒன்றை ஏற்படுத்தித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11-25

பாபநாசம் தொகுதியில் கடந்த தங்களது அரசில் விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பு கொடுத்ததுபோல் இதுநாள் வரையில் இலவச மின் இணைப்பு கிடைக்காமல் காத்திருப்போருக்கு மீண்டும் தங்களது அரசு மூலம் போர்க்கால அடிப்படையில் இலவச மின் இணைப்பு வழங்குமாறு விவசாயிகள் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் விவசாயிகளிடம் அரசு கொள்முதல் செய்யும் நெல்லுக்கு ஊக்கத் தொகையாக ரூ. 50 கொடுப்பதை உயர்த்தி குவிண்டாலுக்கு ரூ. 100 வீதம் ஊக்கத் தொகையை கொடுக்குமாறு விவசாயிகள் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

பாபநாசம் தொகுதியில் உள்ள பள்ளிகளில் ஆசிரியர் பற்றாக்குறை அதிகம் காணப்படுகிறது. இதனால் மாணவர்களின் கல்வித் திறன் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையைப் போக்க இந்தக் கல்வியாண்டிலேயே தேவையான ஆசிரியர்களை நியமித்துத் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் மூலம் கடந்த ஆட்சிக் காலத்தில் ரூ. 300 கோடி நட்டம் ஏற்பட்டுள்ளதாக நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு ஏற்பட்டுள்ள நட்டத்தைச் சரி செய்வதற்கு ஒரு குழு அமைத்துப் பரிசீலிப்பதோடு, நட்டத்திற்கு உடந்தையாக இருந்தவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதோடு, கிராமப் பகுதிகளுக்கு நகரப்பேருந்துகள் தடையின்றி சென்று வருவதற்கு ஏற்பாடு செய்து தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

எங்களது பாபநாசம் தொகுதியில் பல கிராமங்களில் தெரு விளக்கு இல்லாத நிலையுள்ளது. இவற்றைப் போக்கிடவும் ஆதிதிராவிடர்களுக்கும், வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள ஏழைகளின் குடிசைகளுக்கும், ஒரு விளக்குத் திட்டத்தின்கீழ் மின் விளக்குகள் அமைத்துக் கொடுக்கும்படியும் கேட்டுக் கொள்கிறேன்.

எனது பாபநாசம் தொகுதியில், பாபநாசம் தாலுக்கா தொழில் துறையில் பின்தங்கிய தாலுக்காவாக அறிவிக்கப்பட்டு இருந்ததை முந்தைய ஆட்சியாளர்கள் நீக்கியுள்ளார்கள். மீண்டும் முன்புபோலவே பாபநாசம் தாலுக்காவை பின்தங்கிய தாலுக்காவாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பாபநாசம் தொகுதியில் விவசாயிகளுக்கு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி மூலம் பயிர்ப் பாதுகாப்புத் திட்டம் என்ற பெயரில் இன்சூரன்ஸ் தொகை வசூலிக்கப்பட்டு, அது விவசாயிகளுக்குப் பயன்படாத நிலையில் உள்ளது. விவசாயிகள் உண்மையிலேயே பயனடையவேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில் இத்திட்டத்தை முழுமையாகச் செயல்படுத்துமாறு அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

கரும்பு உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு சர்க்கரை ஆலை மூலம் டிசம்பர், ஜனவரி மாதங்களில் வழங்கப்படும் ஊக்கத் தொகையைப் போல் மற்ற எல்லா மாதங்களுக்கும் ஊக்கத் தொகையை வழங்குமாறு அரசு மற்றும் தனியார் சர்க்கரை ஆலைகளுக்கு ஆணை பிறப்பிக்குமாறும், மேலும் நடப்பாண்டிற்கு கரும்பு விவசாயம் செய்யும் விவசாயிகளுக்கு கரும்புக்கு டன் ஒன்றுக்கு விலை ரூ. 1000/-வீதம் வழங்க வேண்டுமென்றும் விவசாயிகளின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

பாபநாசம் தொகுதியில் உள்ள அனைத்துப் பாசன வாய்க்கால்கள் மற்றும் வடிகால் இடங்களில் உள்ள சீமைக் காட்டாமணக்குச் செடிகளை புல்டோசர் மூலம் அகற்றி சிக்கனமாக பாசன வசதிகளை நடைமுறைப்படுத்துவதற்கு வழிவகை செய்து தரும்படி அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

1996 ஜூலை 24] [திரு. ந. கருப்பண்ண உடையார்]

திருமண்டங்குடியில் உள்ள சர்க்கரை ஆலைக்கு கும்பகோணம்-திருவையாறு செல்லும் நெடுஞ்சாலை வழியாகத்தான் தினந்தோறும் நூற்றுக்கணக்கான லாரிகளில் கரும்பு ஏற்றிச் செல்கிறார்கள். இந்தச் சாலையை அகலப்படுத்தி தார்ச் சாலையாக மாற்றியும், இச்சாலையில் இருபுறத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றியும் போக்குவரத்திற்கு உதவி செய்யுமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

மறைந்த எங்களது அருமைத் தலைவர் ராஜீவ் காந்தி பெயரால் போக்குவரத்துக் கழகம் அமைத்துத் தந்த தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு நான் சார்ந்து இருக்கும் தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாக எங்களுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, கடந்த ஆட்சியில் பெருந்தலைவர் காமராஜர் பெயரில் போக்குவரத்துக் கழகம் அமையும் என்ற அறிவிப்பை மட்டும் வெளியிட்டார்கள். தாங்கள் பெருந்தலைவர் காமராஜர் பெயரில் போக்குவரத்துக் கழகம் அமையும் என்ற அறிவிப்பை இந்தக் கூட்டத் தொடரிலேயே அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பாபநாசம் தொகுதி வழுத்தூரில் 15-5-1996-ஆம் தேதியன்று 20 கடைகளும் 5 வீடுகளும் தீப்பிடித்து எரிந்துவிட்டன. மொத்த நட்டம் சுமார் ரூபாய் 6 இலட்சம் ஏற்பட்டுள்ளது. 5 வீடுகளுக்கு மட்டும் அரசு நிவாரணம் கிடைத்துள்ளது. கடைகளுக்கு ஏற்பட்ட நட்டத்திற்கு நிதிநிலையில் குறிப்பிட்டதுபோல, அரசு நிவாரணம் வழங்குமாறு மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

ஆறுபடை வீடுகளில் ஒன்றான சுவாமிமலை திருத்தலம் எனது பாபநாசம் தொகுதியில் உள்ளது. இத்திருத்தலத்திற்கு வரும் பக்தர்கள் எண்ணிக்கை நாள்தோறும் அதிகரித்து வருகிறது. பக்தர்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி ஏற்படுத்தித் தருவதற்கு மேலும் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்கவும், பக்தர்கள் தங்கியுள்ள விடுதிகளை செப்பனிட்டுத் தேவையான வசதிகளைச் செய்து கொடுக்கவும், புதிய தங்கும் விடுதி அமைத்துக் கொடுக்கவும் ஆவன செய்யக் கேட்டுக் கொள்கிறேன்.

கள்ளச் சாராயம் கொள்ளிடம் ஆற்றின் வழியாகக் கடத்தப்பட்டு, எனது பாபநாசம் தொகுதியில் சில ஊர்களில் விற்பனை செய்வதாகத் தெரிய வந்துள்ளது. அவ்வாறு விற்கப்படும் சாராயத்தை அறவே ஒழிப்பதற்கு மேலும் அதிகக் காவலர்களை நியமித்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11-30

பாபநாசம் தொகுதி மக்கள் தலைவர் மூப்பனார் அவர்களின் சொந்தத் தொகுதியாகும். தமிழகத்தில் அது ஒரு மாதிரி தொகுதியாக அமைய அனைத்து வசதிகளைச் செய்து கொடுத்து, ஒரு சிறப்பினை ஏற்படுத்தித் தருமாறு மாண்புமிகு முதல்வர் அவர்களை வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன்.

எனது பாபநாசம் தொகுதியில் தாலூகா தலைநகராக உள்ள பாபநாசத்தில் அரசு மருத்துவமனையில் விசேஷ மருத்துவப் பிரிவுகள், தோல் மருத்துவப் பிரிவு, இ.என்.டி. பிரிவு, கண் பிரிவு போன்றவைகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். பிளட் பாங்க் மற்றும் விபத்துக்கள் பிரிவும் அமைக்க வேண்டுகின்றேன். பாபநாசம் தொகுதியில் உள்ள புள்ள பூதங்குடி கிராமத்தில் உள்ள துணை ஆரம்பச் சுகாதார நிலையத்தை பிரதம சுகாதார நிலையமாக உயர்த்திக் கொடுக்குமாறு வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. கொ.வி. நன்னன்.

***திரு. கொ. வி. நன்னன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையில், இந்த நிதிநிலை அறிக்கையின் மீது கன்னிப் பேச்சைப் பேச வாய்ப்பளித்த தங்களுக்கும், எனது தொகுதியான செங்கம் தொகுதியில் நான் நின்று வெற்றி பெற்று, இந்த மாமன்றத்தில் அமர்கின்ற வாய்ப்பினை நல்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், வாக்களித்து வெற்றிவாகை சூட்டி இந்தப் பேர்வைக்கு அனுப்பி வைத்த எனது செங்கம் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

'காடு, மேடு, பள்ளம் எங்கும் நீர் வழிந்து,
கரம்புத் தரை வயல்கள் எல்லாம் நெல் விளைத்து,
வீடுகளில் பண்டங்கள் நிறைந்தெறும்பு
வளைகளிலும் ஒரு பதக்கு விதை இருக்க,
மாடு, மனை, மக்கள் முதல் மற்றுமுள்ள,
மரம், செடிகள், கொடிகள் யாவும் செழித்து வாழ,
வாடுகின்ற ஏழைக்கெல்லாம் வழி பிறக்க,
மலர்ந்ததுதான் தமிழகத்தில் கலைஞராட்சி',

என்ற வகையில் எல்லோராலும், நல்ல இதயம் கொண்ட அனைத்துத் தரப்பு மக்களாலும், மனமகிழ்ச்சியோடும், எழுச்சியோடும், ஏற்றுக்கொள்ளப்பட்ட, பாராட்டப்படுகின்ற, போற்றப்படுகின்ற, அழகமைந்த, ஒரு அற்புதமான, அபூர்வமான, மிக, மிக அவசியமான நிதிநிலை அறிக்கைதான் மாண்புமிகு முதல்வர் அவர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த நிதிநிலை அறிக்கை. பொதுவாக, மொத்தத்தில் எல்லோராலும் பாராட்டப்படுகின்ற வகையில், ஏழை எளியோர், ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், நடுத்தர மக்கள், சிறுபான்மையினர், தாய்மார்கள், அரசு ஊழியர்கள், ஓய்வுபெற்ற அரசு ஊழியர்கள், மாணவ மாணவியர்கள், வணிகர்கள், விவசாயப் பெருமக்கள், திரைப்படக் கலைஞர்கள், தொழிலாளர்கள், நெசவாளர்கள், மீனவர்கள், பத்திரிகையாளர்கள் என அனைத்துத் தரப்பு மக்களின் குறைகளைத் தீர்க்கும் அமுதசுரபி போன்றதுதான் இந்த நிதிநிலை அறிக்கை என்பதை நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

எனது மாவட்டத்தைப் பற்றியும், எனது செங்கம் தொகுதியைப் பற்றியும் சொல்ல விரும்புகிறேன். எங்கள் திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டம். அது இன்றைய் மாண்புமிகு முதல்வர் அவர்களால் அன்றைக்கு உருவாக்கப்பட்ட மாவட்டம். இந்த மாவட்டத்திற்கு பிரதிநிதித்துவம் தர பல ஆண்டுகளுக்குப் பிறகு மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் அவர்களை நியமனம் செய்தமைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு கோடானுகோடி நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மாவட்டத்தின் வளர்ச்சியிலே மிக, மிக அக்கறை கொண்டு, முதற்கட்டமாக போளூர் வட்டம் செண்பகத்தோப்பு நீர்தேக்கத் திட்டம் அறிவித்திருப்பது மிகவும் வரவேற்கத்தக்கது, பாராட்டத்தக்கதாகும். அதற்காக மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

என் தொகுதியாகிய செங்கம் தொகுதியில் குப்பநத்தம் நீர்த்தேக்கத் திட்டத்தை அடுத்த நிதிநிலை அறிக்கையில் இணைக்க வேண்டுமென மாண்புமிகு முதல்வர் அவர்களை மிகப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். மேற்கண்ட குப்பநத்தம் அணைத் திட்டம், 1989ல் நடந்த கழக ஆட்சிக் காலத்தில் பரிசீலனை செய்யப்பட்டது. மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களும் வந்து

பார்வையிட்டார்கள் என்பதைத் தங்களின் மேலான கவனத்திற்குக் கொண்டுவர கடமைப்பட்டிருக்கிறேன்.

எனது தொகுதி ஏராளமான குறைகளைக் கொண்டது. எங்கள் மாவட்டம் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது. அதிலும் நான் சார்ந்து இருக்கும் செங்கம் தொகுதி மிக மிகப் பின்தங்கிய நிலையில் உள்ளது. எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் எனது தொகுதியின் மீது தனிக் கவனம் செலுத்தி, குறைகளை உடனடியாகத் தீர்க்க வேண்டுமாய்க் கேட்டுக் கொண்டு, சிலவற்றை இங்கே கோடிட்டுக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

மேல் செங்கம், மத்திய மாநில விவசாயப் பண்ணையில் விவசாயக் கல்லூரி அமைத்து நலிந்துள்ள விவசாய மக்களின் நலனுக்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பழச்சாறு தொழிற்சாலை ஒன்றையும் அமைத்துத்தரக் கேட்டுக்கொள்கிறேன். திருவண்ணாமலை, செங்கம், காஞ்சி ஆகிய வட்டாரங்களிலுள்ள விவசாயிகள், கரும்பு விளைந்த பின்பும் வெட்டு ஆணை கிடைக்காமல் அவதிப்படுகின்றனர். இந்த விவசாயிகளின் கவலையைப் போக்க கூட்டுறவு கரும்புத் தொழிற்சாலை ஒன்றையும் உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த மாவட்டத்திலுள்ள இளைஞர்களும், பொதுமக்களும் விவசாயம் தவிர வேறு தொழில் எதிலும் முன்னேற்றம் இல்லாதவர்கள். தொழில் வளத்தில் மிகவும் பின்தங்கி இருப்பவர்கள். சென்னையில் ஏற்படுத்தும் தொழிற்சாலை போல் ஒரு பெரிய தொழிற்சாலையை எங்களுக்கு வழங்கினால் பல மக்களின் வேலைவாய்ப்புக்கு அது வழிவகுக்கும் என்பதையும், மாவட்ட முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் என்பதையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குக் கோரிக்கையாக வைக்கிறேன்.

முற்பகல் 11-35

செங்கம் தொகுதியிலுள்ள செங்கம் ஒன்றியத்தில் கால்நடைகள் அதிகமாக இருக்கின்றன. ஆனால் கால்நடை மருத்துவமனை ஒன்றுதான் இருக்கிறது. அதனால் பாச்சல் கிராமத்தில் ஒரு கால்நடை மருத்துவமனையையும், இளங்குன்னி கிராமத்தில் ஒரு கால்நடை மருத்துவமனையையும் ஏற்படுத்தினால் சுற்றியுள்ள எல்லா கிராமங்களிலும் உள்ள கால்நடைகளுக்கு மருத்துவ வசதி ஏற்பட வாய்ப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

செங்கம் தொகுதியிலுள்ள அனைத்து ஏரிகளும் செப்பனிடப்பட வேண்டும். அவைகளைச் செப்பனிட்டு சீர் செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

1996 ஜூலை 24] [திரு. கொ. வி. நன்னன்]

தென்பெண்ணை ஆற்றின்மீது அமைந்துள்ள சாத்தனூர் அணை நீர் உபரியாக வரும்போது வீணாகக் கடலில் கலந்து விடுகிறது. பருவக் காலங்களில் பெய்கின்ற மழையால் பெருக்கெடுத்து வருகின்ற பெரு வெள்ளம் வீணாவதைத் தடுக்க தென்பெண்ணை, செய்யாறு இடையே பாசனக் கால்வாய் இணைப்பு அமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வீணாகக் கடலில் கலக்கும் நீரைக் கால்வாய் அமைத்துத் திருப்பி விட்டால் குடிநீருக்கும், விவசாயத்திற்கும் வளம் பெறச் செய்ய முடியும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இரண்டு ஆறுகளுக்கு இடையே சுமார் 15 கிலோ மீட்டர் தொலைவில் கால்வாய் அமைக்கலாம் என பழைய ஆய்வாளர்கள், பொறியியல் வல்லுநர்கள் ஆய்வு செய்திருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. கங்கை-காவிரியை இணைப்பதற்கு நமக்கு வசதி இல்லை என்றாலும் இதன் மீது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தி ஆவன செய்யவேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் சாத்தனூர் அணையிலிருந்து மேல் மட்டக் கால்வாய் மூலம் திருவண்ணாமலை சமுத்திரம் வரையில் சில ஏரிகளில் நீர் சேர்க்க நந்தன் கால்வாய்த் திட்டத்தை நிறைவேற்ற ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த நீர் குடிநீருக்கும், விவசாயத்திற்கும் பலன் கொடுக்கும். குடிநீர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு ஏதுவாக இருக்கும் என்பதைக் கவனத்திற்குக் கொண்டு வந்து இதைக் கோரிக்கையாக வைக்கிறேன்.

எங்கள் தொகுதியில் செங்கம் ஒன்றியத்திலும், புதுப்பாளையம் ஒன்றியத்திலும் குடிநீர்ப் பிரச்சினை மிக மிக அதிகமாக இருக்கிறது. தாய்மார்கள் குடிநீருக்காக அவதிப்படும் நிலையைக் காணும்போது கவலைப்படாமல் இருக்க முடியாது. இந்தப் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு காண மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் தொகுதியில் பல கிராமங்களில் பேருந்து வசதி இல்லாமல், சாலை வசதி இல்லாமல் மக்கள் அவதிப்படுகின்ற நிலை இருக்கிறது. மேலும் ஏற்கெனவே இருக்கும் தடங்களுக்குக்கூட பேருந்து அதிகமாக விட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். முக்கியமாக என் தொகுதியில் பிழைப்பைத் தேடி பெங்களூருக்கு சென்று வரும் ஏழை மக்கள் அதிகம். அவர்கள் செங்கம் நகரத்திலிருந்து லாரிகள் மூலமும், இருக்கை வசதி இல்லாமல் பேருந்துகளில் நின்று கொண்டும்

அவதிப்பட்டுக்கொண்டு பயணம் செய்யக்கூடிய நிலை இருக்கிறது. எனவே, செங்கத்திலிருந்து பெங்களூர் வரை பேருந்து வசதி ஏ படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதில் தனிக் கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

புதுப்பாளையம் நகரத்தில் வாழும் மக்களுக்கு போதிய மருத்துவமனை வசதி இல்லாமல் மக்கள் அவதிப்படும் நிலை இருக்கிறது. எனவே அங்கே அரசு பொது மருத்துவமனை அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குப்பநத்தம் வி.3 முதல் கிளையூர் செல்லும் வழியில் செய்யாற்றின் குறுக்கே பாலம், செங்கம் முதல் திருவண்ணாமலை செல்லும் பாதையில் முறையார் பாலம் ஆகியவை பழுதடைந்து இருப்பதைச் சீர் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கொட்டக்குளம் செய்யாற்றின் குறுக்கே பாலம் கட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். செய்யாற்றின் குறுக்கே பெலாகுர் பகுதியை இணைக்க பாலம் கட்டவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அல்லியேந்தல், வாசுதேவப்பட்டியை இணைக்கும் பாலம், காரப்பட்டு முதல் கோ. புதுப்பட்டு சாலையில் புதிய பாலம் போன்றவற்றை கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எங்கள் தொகுதியில் (மணியடிக்கப்பெற்றது) ஜவ்வாது மலைப்பகுதியில் வாழும் மக்களுக்கு உரிய நேரத்தில் ஜாதிச்சான்றிதழ் வழங்கப்படுவது இல்லை. அதில் தாமதம் ஏற்படுகிறது. அதை உடனடியாக வழங்க உத்தரவிட வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் உள்ள பள்ளிகளில் போதுமான ஆசிரியர்கள் இல்லை. பல பாடத் திட்டங்களுக்கு ஆசிரியர்கள் இல்லாமல் மாணவர்கள் கல்வியில் பின்தங்கியிருக்கிறார்கள். செங்கம் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் மாணவிகளுக்கு விளையாட்டு மைதானம் இல்லை. மாணவியர் எண்ணிக்கைக்கு ஏற்ப வகுப்பறைகள் இல்லை. இதை உடனடியாகக் கவனித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உதவி செய்யவேண்டுமென்று •கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு ஆர். சக்ரபாணி, இருக்கையில் இல்லை. அடுத்து திரு. வி.ஜி. தனபால்.

திரு. வி. ஜி. தனபால்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மாமன்றத்தில் உறுப்பினராகப் பணியாற்ற எனக்கு வாய்ப்பு அளித்த எங்கள் தானைத் தலைவர், தமிழ்நாட்டின் விடிவெள்ளி, தமிழ் சமுதாயத்திற்காக அல்லும் பகலும் அயராது பாடுபட்டுக் கொண்டிருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், எங்கள் இளைய தளபதி திரு மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும், பல்லாயிரக்கணக்கான வாக்குகளை அளித்து என்னை இந்தப் பேரவைக்கு உறுப்பினராக அனுப்பிய குடியாத்தம் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்கி, என் உரையைத் தொடங்குகின்றேன்.

முற்பகல் 11-40

தேர்தல் நேரத்தில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை மனதிற்கொண்டு, இந்த நிதிநிலை அறிக்கையிலேயே அவற்றை நிறைவேற்றி, தொழிலாளர்கள், வணிகர்கள், நெசவாளர்கள், அரசு அலுவலர்கள், பொதுவாக அனைத்துத் தரப்பு மக்களாலும் போற்றப்படும் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நிதிநிலை அறிக்கையை எனது சார்பிலும், என் தொகுதி மக்களின் சார்பிலும் வரவேற்கிறேன்.

குடிசைத் தொழிலான தீப்பெட்டிக்கு விற்பனை வரியை விலக்கியதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். எங்கள் குடியாத்தம் வரலாற்றுச் சிறப்பு மிக்கது. கர்ம வீரர் மாண்புமிகு காமராஜ் அவர்களை இப்பேரவையின் உறுப்பினராக ஆக்கி, முதலமைச்சராக்கிய பெருமை கொண்டது. அத்தகைய தொகுதியிலிருந்து, நீண்ட இடைவெளிக்குப் பின் நான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளேன்.

எங்கள் தொகுதியானது எல்லா வகையிலும் மிகவும் பின்தங்கிய பகுதியாகும். பீடித் தொழிலாளர்கள், தீப்பெட்டித் தொழிலாளர்கள், மில் தொழிலாளர்கள், விவசாயத் தொழிலாளர்கள் நிரம்பிய பகுதியாகும். இன்னும் இத்தொகுதி மக்களுக்கு அடிப்படை வசதிகள்கூடக் கிடைக்கவில்லை என்பதை மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெயரளவிற்குத்தான் குடியாத்தம் முதல்நிலை நகராட்சியே தவிர அதற்கான தகுதியுள்ள நகராட்சியாக அது செயல்படவில்லை. நகர் முழுவதும் சாக்கடைக் கால்வாய்கள் சரியில்லாத காரணத்தால், மழை பெய்தால் மழை நீரும், சாக்கடை நீரும் ஒன்று சேர்ந்து வெள்ளமாக சாலை, தெருக்களின் மீது புரண்டு, கூவத்தைப்போலக் காட்சியளிக்கின்றன. சுகாதாரக் கேடு ஏற்பட்டு எங்கள் மக்கள் பெரிதும் கஷ்டப்படுகிறார்கள். சாக்கடைக் கால்வாய்கள் மீது கட்டிடங்களைக் கட்டி, ஆக்கிரமிப்பு செய்துள்ளதால் கால்வாய்கள் அடைக்கப்பட்டு மேற்கொண்டும் சுகாதாரக் கேடு ஏற்பட்டுள்ளது. இதைப்போக்க, பாதாள சாக்கடைத் திட்டத்தை ஏற்படுத்த வேண்டுமாய்ப் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

குடியாத்தம் தொகுதி சுமார் நான்கு இலட்சம் மக்களைக் கொண்டது. இந்நகரத்தில் அரசினர் பொது மருத்துவமனை ஒன்று உள்ளது. இந்த மருத்துவமனைக் கட்டிடம் பல வருடங்களுக்கு முன் கட்டப்பட்டது. அது மிகவும் பழுதடைந்து உள்ளது. பழங்கால இடமானதால் தாழ்வடைந்து விட்டது. மழைக் காலங்களில் நோயாளிகள் படுக்கை அறை மற்றும் பிரசவ வார்டுகள் தண்ணீரில் ஒரு அடி வரை மூழ்கி விடுகிறது. எனவே, புதிய கட்டிடம் ஒன்று கட்டித் தரும்படி மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

நகரில் அமைந்துள்ள அரசினர் மருத்துவமனையில் போதிய படுக்கை வசதிகள் இல்லை; போதிய மருத்துவர்களும் இல்லை; போதிய வசதிகள் இல்லாமல் ஆப்பரேஷன் தியேட்டரும் செயல்படவில்லை; எக்ஸ்ரே பிரிவும் சரியாகச் செயல்படவில்லை. மருத்துவமனைக்குப் போதிய கட்டிட வசதிகளும் இல்லை. எனவே, மருத்துவமனை நன்கு செயல்பட போதுமான வசதிகள் செய்து தருமாறு கோருகிறேன்.

குடியாத்தம் நகரில் பேருந்து நிலையம் ஒன்று உள்ளது. அது குறுகிய இடத்தில் எந்தவிதமான வசதியும் இல்லாமல் இருக்கிறது. தினமும் 200-க்கும் மேற்பட்ட பேருந்துகள் இங்கிருந்தும், வெளியிலிருந்தும் வந்து செல்கின்றன. இந்த நிலையில் போதிய இடவசதியின்றி, சாலைகளில் அவை நிறுத்தப்படுகின்றன. அதனால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அரசு பொது மருத்துவமனைக்கு எதிரில் நகராட்சிக்குச் சொந்தமான மேல்நிலைப் பள்ளிக் கிளைக் கட்டிடத்தை இடித்து அங்கு தற்காலிகப் பேருந்து நிலையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அங்கு நிரந்தரப் பேருந்து

நிலையம் கட்டுவதற்கான எந்த ஏற்பாடும் செய்யப்படவில்லை. நகரத்தின் மையப் பிரச்சினையாக உள்ள இப்பேருந்து நிலையத்தைக் கட்டித்தர அரசு ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

நகரத்திற்குப் பாலாற்று நீர் சப்ளை செய்யப்படுகிறது. அது போதுமானதாக இல்லை. பாலாற்றில் மேலும் கிணறுகள் தோண்டி அதிகப்படியான தண்ணீரை நகரின் மேட்டுப் பகுதியான தரணம்பேட்டை பகுதிக்கும் மேல்நிலைத் தொட்டிகளின் மூலம் சப்ளை செய்ய அரசு ஆவன செய்ய வேண்டுகிறேன்.

அடிக்கடி மின்வெட்டின் காரணமாகத் தண்ணீர்ப் பம்புகள் செயல்பட முடியாத நிலை ஏற்பட்டு வருகிறது. பம்பிங் ஸ்டேஷனுக்கு ஒரு டிரான்ஸ்பார்மரைப் பொருத்தி, தட்டுப்பாடு இல்லாமல் மின்சாரம் கிடைக்குமாறும், ஒரு ஜெனரேட்டரைப் பொருத்தி தடையில்லாமல் பம்பிங் ஸ்டேஷனைச் செயல்படுத்த வேண்டுமாயும் கேட்டுக்கொள்கிறேன்.

75 சதவீதத்திற்கு மேல் பீடி, தீப்பெட்டி, நூற்பாலைத் தொழிலாளர்கள் நிரம்பிய பகுதி குடியாத்தம் தொகுதி ஆகும். இந்த நகரத்தில் உள்ள இ.எஸ்.ஐ. மருத்துவமனை வாடகைக் கட்டிடத்தில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதில் படுக்கை வசதியும், போதிய மருத்துவர்களும் இல்லை. நகரத்தில் தனியார் வசம் உள்ள, ஆஞ்சநேயர் கோயிலுக்குச் சொந்தமான நிலத்தை, கோவில் நிர்வாகம் புதிய இ.எஸ்.ஐ. மருத்துவமனை கட்ட இலவசமாக வழங்க முன்வந்துள்ளது. மேற்கண்ட நிலத்தில் நிரந்தரமாக அரசு இ.எஸ்.ஐ. மருத்துவமனையைக் கட்டித் தருமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் தொகுதி மிகவும் பின்தங்கிய பகுதியாகும். எங்கள் பகுதியில் தொழிற்பேட்டை அமைத்து, வேலைவாய்ப்பினை ஏற்படுத்தித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் தொகுதியின் நீண்ட நாள் கோரிக்கை, மகளிர் கல்லூரி ஏற்படுத்த வேண்டுமென்பதாகும். இங்கிருந்து 60 கிலோமீட்டர் வாலாஜா சென்றுதான் மகளிர் கல்லூரியில் சேர்ந்து படிக்க வேண்டியுள்ளது. இது மிகவும் சிரமமானது. எனவே, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கருணைகூர்ந்து எங்கள் ஊரில் ஒரு அரசினர் மகளிர் கல்லூரியை அமைத்துத் தருமாறு மிகவும் சிரம் தாழ்த்திக் கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் பகுதியில் இன்னும் பல கிராமங்களுக்கு சாலை வசதிகளும், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதியும், விளக்கு வசதியும் செய்து

தரப்படவில்லை. இந்த அடிப்படை வசதிகளை உடனே செய்து தருமாறு மிகவும் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

ஏழை நெசவாளர்களுக்கு அரசு இலவச குடியிருப்பும், இலவச மின்சாரத் திட்டமும் ஏற்படுத்தித்தர ஆவன செய்ய வேண்டுகிறேன். கைத்தறி நெசவுக்குப் பயன்படுத்தப்படும் சிட்டா நூலுக்கு விதிக்கப்பட்டுள்ள இரண்டு சதவீத வரியை நீக்கி, கைத்தறி நெசவாளர்களுக்கும், உற்பத்தியாளர்களுக்கும் வாழ்வு அளிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11-45

எங்கள் நகரில் தொன்மை வாய்ந்த அரப்பளீஸ்வரர் ஆலயம் ஒன்று உள்ளது. அது சரிவர பராமரிக்கப்படாமல் உள்ளது. மேலும், ஆண்டுதோறும் நடைபெறும் தேர்த் திருவிழா மாவட்டத்திலேயே பெரியது. 3 ஆண்டுகளாக அது நடைபெறாத நிலை உள்ளது. ஓடாத திருவாரூர் தேரை ஓடச் செய்த தாங்கள் இதையும் ஓடச் செய்ய வேண்டுமென்று நகர மக்கள் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன். எங்கள் தொகுதியில் மோர்தானா அணைக்கட்டு திட்டத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1975-ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டினார்கள். அதற்குப் பின்பு ஏற்பட்ட ஆட்சியில் அது கிடப்பில் போடப்பட்டது. மீண்டும், 1989-ல் ஏற்பட்ட கழக ஆட்சியில், எங்கள் மாவட்ட மந்திரியும், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சருமான அண்ணன் துரைமுருகன் அவர்களின் சீரிய முயற்சியால் அணைக்கட்டுத் திட்டம் மீண்டும் உயிர்பெற்று கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டன. மீண்டும், அது, பின்னால் வந்த அ.இ.அ.தி.மு.க. அரசால் போதிய நிதி ஒதுக்கீடு செய்யப்படாமல் கவனிப்பாரற்று இருந்தது. அதை விரைவுபடுத்தி, கட்டி முடித்து, என் தொகுதி மக்களும் காட்பாடி தொகுதி மக்களும் பயன்பெற வழிவகை செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் நகரில், நீண்டகாலக் கோரிக்கையான சப்-கோர்ட் அமைக்க வேண்டுமென்று, பார் அசோசியேஷன் மூலமாகவும், பொது மக்கள் சார்பாகவும், அரசுக்கு முறையீடு செய்யப்பட்டு, அது அரசின் பரிசீலனையில் உள்ளது. அதை அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் முன்சீப் கோர்ட் வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. முன்சீப் கோர்ட் அமைக்க இடம் தேர்வு செய்யப்பட்டு, கட்டுவதற்கு

அரசு ஆணை எதிர்பார்க்கப்படும் நிலையில் உள்ளது. அதையும் புதியதாக கட்டிக் கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

குடிசைத் தொழிலான தீப்பெட்டித் தொழிற்சாலையில் ஒரே ஒரு நபர் வேலை செய்தாலும், தொழிற்சாலை சட்டத்தின் கீழ் பதிவு செய்ய வேண்டுமென்ற அரசாணையிலிருந்து சிறு தீப்பெட்டித் தொழிற்சாலைகளுக்கு விதிவிலக்கு அளிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். மேலும் தொழிற்சாலைகளுக்கான சட்டத்தில் தீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழிற்சாலைகளுக்கும் சேர்த்து சட்டம் இயற்றப்பட்டுள்ளது. இவற்றை தனித்தனிப் பிரிவுகளாகப் பிரித்து, அதற்கேற்றவாறு விதிகளை அமைத்து உத்தரவிடுமாறு பணிவுடன் கேட்டுக்கொண்டு, இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று என் உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கணேசன்.

***திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் 1996-97-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்தபோது, பேரறிஞர் அண்ணா அவர்களை நினைவு கூர்ந்தார். பாவேந்தர் பாரதிதாசன் கவிதையோடு நிதிநிலை அறிக்கை ஏழைப் பாட்டாளிகளுக்கு நம்பிக்கை பிறக்கும் வகையில் அமைந்திருக்கிறது என்பதனை அனைத்துத் தரப்பு மக்களும் பாராட்டுகிறார்கள். தெளிவான நெஞ்சுரம் கொண்டவர்கள் பாராட்டுகிறார்கள். எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சியினுடைய நிறுவனர் டாக்டர் ஐயா அவர்கள் இந்த பட்ஜெட்டை வரவேற்று முறையாக அவர்கள் கூறியிருக்கிற கருத்து, வான் மழையை எல்லோரும் வரவேற்பார்கள், அதுபோன்று, பொன் மலர் பூமணம் வீசுவது போல் இந்தப் பட்ஜெட் சிறப்பாக அமைந்திருக்கிறது என்று குறிப்பிட்டிருந்தார். அடுத்தது, இதிலே விடுபட்டுள்ள, ஸ்டேன்டர்ட் மோட்டார் தொழிற்சாலை, மேட்டூர் மில் போன்ற தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளதைத் திறக்க வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை தமிழக முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்து, இந்தப் பிரச்சினையைத் தீர்த்துக் கொடுக்குமாறு அன்புடன் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல, கலை பிறந்த மாவட்டத்தில் பிறந்த தமிழக முதல்வர் அவர்களின் அரசு கிராமங்களிலே உலாவரும் கரகம், காவடி,

ஒயிலாட்டம், மயிலாட்டம், பரதம், தோல் பொம்மை கூத்து போன்றவற்றையும் மற்றும் லவ குசா, ஹரிச்சந்திரா, வன்னியர் புராணம் போன்ற பல்வேறு நாடகங்களையும் உயிர்ப்பிக்க ஏனோ மறந்துவிட்டது. கோடிக்கணக்காக பணம் புரளும் சினிமாவுக்கு பால் ஊற்றுவதைப் போல, இந்தக் கிராமக் கலைக்குக் கஞ்சியாவது ஊற்ற வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள், சேலம் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்தார்கள். அப்படிப் பிரிக்கிறபோது, எடப்பாடி தொகுதியை பிரிக்காமல் சேலம் மாவட்டத்திலேயே இருக்கச் செய்ததற்கு எனது எடப்பாடி தொகுதி மக்கள் சார்பாக மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களை உளமாரப் பாராட்டுகிறேன்.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் 1776-ஆம் ஆண்டு எடப்பாடி தாலுக்காவாகச் செயல்பட்டுள்ளது. அது தங்கள் ஆட்சிக் காலத்திலே 1996-ல் மீண்டும் தாலுக்காவாக வர வேண்டுமென்றும் சரியாக 200 ஆண்டுகளுக்குப் பிறகு எடப்பாடியை தாலுக்காவாக ஆக்கி எடப்பாடி நகரைத் தலைநகரமாக ஆக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். அப்படி செய்தால் எடப்பாடியின் வரலாற்றில் நிலைத்து நிற்கும் நிலை தங்களுக்கு, தமிழக முதல்வருக்கு கிட்டும் என்று நான் அன்போடு சொல்லிக்கொள்கிறேன்.

முற்பகல் 11-50

எடப்பாடி நகரைப் பொறுத்தவரை, மொத்தம் 4 இலட்சம் மக்கள் வாழ்கிறார்கள். எடப்பாடி தொகுதியிலே வாக்காளர்களே 2 இலட்சத்து ஓராயிரத்து 500 பேருக்கு மேலே உள்ளார்கள். 32 ஆண்டுகளுக்கு முன்னால் துவக்கப்பட்ட நகராட்சியும், எடப்பாடி ஒன்றியமும், கொங்கணாபுரம் ஒன்றியமும், மகுடஞ்சாவடி ஒன்றியமும், அதோடு பூலாம்பட்டி பேரூராட்சியும், கொங்கணாபுரம் பேரூராட்சியும், இடங்கனிசாலை பேரூராட்சியும் கொண்ட பகுதிதான் எடப்பாடி தொகுதி என்பதாகும். எடப்பாடி தொகுதியை தாலுக்காவாக ஆக்குவதற்குச் சகல வசதிகளும் உள்ளன. தாலுக்கா அலுவலகத்திற்காகக் கட்டிடங்கள் கட்டுவதற்காக ஏற்கெனவே வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக கிட்டத்தட்ட 500 ஏக்கர் அளவிற்கு மேலே நிலத்தை அரசினர் கையகப்படுத்தியிருக்கிறார்கள். அந்த 500 ஏக்கர் நிலத்திலே ஒரு குறிப்பிட்ட அளவிற்குத்தான் வீட்டுவசதி வாரியம் கட்டியிருக்கிறது.

1996 ஜூலை 24] [திரு. இ. கணேசன்]

இன்னும் கிட்டத்தட்ட 300 ஏக்கர் நிலம் மீதி இருக்கிறது. அந்த நிலத்திலே தாலுக்கா அலுவலகங்கள் கட்டலாமென்று மிகுந்த பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். தாலுக்கா அலுவலகங்கள் கட்டுவதற்காக அங்கு இடவசதியும் உள்ளது, நல்ல காவிரி குடிநீர் வசதியும் உள்ளது மற்றும் துணை மின் நிலையமும் உள்ளது. நகரம் முழுவதும் சென்றுவர நகரப் பேருந்துகள் இருக்கின்றன. ஆகையால், தயவுகூர்ந்து டாக்டர் கலைஞர் அவர்கள் மனது வைத்து எடப்பாடி தொகுதியைத் தாலுக்காவாக மாற்றிக் கொடுக்க வேண்டும் என்று பணிவோடு நான் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதோடு, நீரின்றி அமையாது உலகு என்ற தமிழ்ப் பாட்டிற்கு ஒப்ப இந்த நிதிநிலை அறிக்கையில் குடிநீர் வசதியற்ற குடியிருப்புகளே இல்லையென்ற நிலையை உருவாக்க வேண்டிய அளவிற்கு நிதி ஒதுக்கீடு இந்த நிதிநிலை அறிக்கையிலே, ஆறாவது பக்கத்திலே இருக்கிறது. இந்த நிதிநிலை அறிக்கையிலே என்னை மிகவும் கவர்ந்த பகுதி இதுதான். என்னை மட்டுமல்லாமல் இந்த மாமன்றத்தில் இருக்கக்கூடிய அத்தனை உறுப்பினர்களையும், ஏன், ஏழை, எளிய பாட்டாளி மக்கள் அத்தனை பேரையும் கவர்ந்த பகுதி இந்த குடிநீர் பற்றிய பகுதி. எடப்பாடித் தொகுதியைப் பொறுத்தவரையில் குடிநீருக்காக நான் ஏற்கெனவே சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது மாண்புமிகு முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவரிடத்திலே 1977-லேயிருந்து 1984 வரை வாதாடி, வாதாடி குடிநீரை எடப்பாடி தொகுதிக்குக் கொடுக்க வேண்டும் என்று பல முறை பேசியும், விண்ணப்பங்கள் கொடுத்தும் அந்தக் காவிரி குடிநீரைக் கொடுப்பதற்காக (மணியடிக்கப்பெற்றது)

இப்பொழுதுதான் சார், ஆரம்பித்தேன். காவிரி குடிநீருக்காக புரட்சித் தலைவர் அவர்கள் இதே மாமன்றத்தில் கிட்டத்தட்ட 10½ கோடி ரூபாயை ஒதுக்கியிருந்தார்கள். அந்த 10½ கோடி ரூபாய் எடப்பாடி தொகுதிக்கு குடிநீர் வழங்க 1982-லே ஒதுக்கியது. ஆனால், கிட்டத்தட்ட 14 ஆண்டுகாலமாக அந்தத் திட்டம் நிறைவேற்றப்படாமல் கட்டிடங்கள், தொட்டிகள் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களே, எடப்பாடி தொகுதியிலே இப்போது அந்தக் குடிநீர் திட்டமானது, எடப்பாடி-இராசிபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டமாக அறிவிக்கப்பட்டு, எடப்பாடி தொகுதியில் இருக்கக்கூடிய ஒரு மூலைப் பகுதிக்குச் சென்று கொண்டிருக்கிறது. தயவுசெய்து, ஏற்கெனவே நாங்கள் விண்ணப்பம் மூலமாக தெரியப்படுத்தியபோது எடப்பாடியிலுள்ள பூலாம்பட்டி என்ற மையப் பகுதியிலே

தொட்டியைக் கட்ட வேண்டும் என்றும், அந்த வழியாக ஆடையூர், பக்கநாடு, சித்தூர், ஆவணிப்பேரூர், செட்டிமாங்குறிச்சி, தாதாபுரம், இருப்பாளி, வெள்ளிரிவெள்ளி, வேம்பனேரி பகுதிகளுக்கும், அதேபோன்று கெங்கணாபுரம் ஒன்றியத்திலுள்ள வெள்ளாளபுரம் ஊராட்சியிலிருந்து பாச்சாளியூரிலிருந்து சமுத்திரம், புதுப்பாளையம், கோனசமுத்திரம், கோனேரிப்பட்டி, குறுக்கப்பட்டி, தங்காயூர், எருமப்பட்டி மற்றும் கச்சிப்பள்ளியிலிருந்து வடுகப்பட்டி வரையிலும், மகுடஞ்சாவடி ஒன்றியத்திலுள்ள கண்ணாஞ்சேரி, அழகப்ப பாளையம்புதூர், ஏகாபுரம், தப்பக்குட்டை, காளிகவுண்டன் பாளையம், எர்ணபுரம், நடுவனேரி, வைகுந்தம், ஆ. தாழையூர், கனககிரி, கூடலூர், கண்டர்குலமாணிக்கம் ஆகிய கிராமங்களுக்குக் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலமாக நல்ல சுகாதாரமான காவிரி குடிநீரை வழங்க வேண்டும் என்று பணிவோடு நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்களை வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11-55

அத்துடன் குடும்ப அட்டைகளுக்கு, ரேஷன் கடைகளில் 20 கிலோ அரிசி வழங்கும் திட்டத்தை நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். 1000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இந்தத் திட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தை அறிவித்த உடனேயே ஏழைகளுடைய வயிறு குளிர்ந்துவிட்டதாகவே ஏழைகள் கருதிக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், ஏழை எளிய தாய்மார்களுக்கு இந்த அறிவிப்பு மிகப் பெரிய மகிழ்ச்சியை அளித்திருக்கிறது. ஆகவே, 20 கிலோ அரிசியைக் கட்டாயமாக வழங்கவேண்டும். அதுவும் ஒவ்வொரு ரேஷன் கடையிலும் தரமான அரிசியை ரூ. 2-க்குக் கட்டாயமாக வழங்கவேண்டும். ஏழைகள் மாதத்தில் எந்த நாள் சென்றாலும் உணவுப் பொருட்கள் தங்குதடையின்றி சீராகக் கிடைக்க நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும். அதற்காக என்னுடைய மனமார்ந்த நன்றியைச் சொல்லிக்கொண்டு, (மணியடிக்கப்பெற்றது) ரேஷன் கடைகளில் பணியாற்றும் ஊழியர்கள் ஒருசிலர் பெரிய வியாபாரிகளிடத்திலே தொடர்பு வைத்துக்கொண்டு, அந்த ரேஷன் கடைகளில் 15 கிலோ, 20 கிலோ அரிசி வாங்க முடியாத ஏழைகளுடைய குடும்ப அட்டைகளை ஒரு சிறிய தொகையைக் கொடுத்து வாங்கி, ஒரு ரேஷன் கடையிலே 200 முதல் 500, 600, 700 அட்டைகளை வாங்கி பெரிய வியாபாரிகளிடத்திலே கொடுத்து,

அதாவது அந்த கிளார்க்குகள் லஞ்சமாகப் பணத்தைப் பெற்றுக்கொண்டு, ஏழைகளை அட்டையைப் போல உறிஞ்சுகிறார்கள். இந்த நிலையை மாற்றி ரேஷன் கடைகளில் திருட்டுத்தனமாக அட்டையை வாங்கி பெரிய வியாபாரிகளிடத்தில் விற்கக்கூடிய அந்த ரேஷன் கடை ஊழியர்களைக் கடுமையாக தண்டிக்கக்கூடிய வகையிலே நீங்கள் நடவடிக்கையினை எடுக்க வேண்டும். இது ஏழையினுடைய பிரச்சினை, வயிற்றுப் பிரச்சினை. ஆகவே, தயவுசெய்து தமிழக முதல்வர் அவர்கள் இதன் மீது நல்ல நடவடிக்கையினை எடுப்பார்கள் என்று நம்புகிறோம். 1000 கோடி ரூபாயை இந்த ஏழைகளுக்காக ஒதுக்கி இருக்கிற தமிழக முதல்வர் கலைஞர் அவர்களை என்னுடைய பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக உளமார, மனமார பாராட்டுகிறேன்.

அதேபோன்று போக்குவரத்துத் துறையைப் பற்றிச் சொல்ல வேண்டுமானால், தனியார் பேருந்துகளை நடத்துகின்றவர்கள் ஏறத்தாழ ஓராண்டு இரண்டாண்டு காலத்திலே 5 பேருந்துகளை வாங்கக்கூடிய அளவுக்கு வளர்கிறார்கள். ஆனால் ஒரு சாபக்கேடு போல, இந்தக் கார்ப்பரேஷன்கள் மட்டும் 300 கோடி ரூபாய் நஷ்டத்தில் இயங்குவதாக இங்கே நிதிநிலை அறிக்கையில் கொடுத்திருக்கிறார்கள். நான் பணிவோடு உளப்பூர்வமாக தெரியப்படுத்திக் கொள்வது என்னவென்றால், இந்தத் தரங்கெட்ட பொருட்களை வாங்கிய தரங்கெட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கையினை எடுத்த மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களை உளமார, மனமார பாராட்டுகிறேன்.

அதேபோன்று மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களும், தமிழக முதல்வர் அவர்களும் தனியார் பஸ் ஆப்பரேட்டர்களை அழைத்து அவர்களுக்குச் சொல்லவேண்டிய முறையிலே சொல்லி அனுப்பியிருக்கிறார்கள். கிட்டத்தட்ட ஒரு வாரத்திற்குள்ளே சென்றமுறை எப்படி எப்படி பஸ்கள் ஓடியதோ, எந்தெந்த ரூட்டில் ஓடியதோ, அதேபோல அந்த பஸ்கள் ஓட வேண்டுமென்று நம்முடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் அந்த பிரைவேட் ஆப்பரேட்டர்களிடம் சொன்னதன் காரணமாக இன்று கிட்டத்தட்ட 10 நாட்களிலேயே தினசரி ரூ. 3 லட்சம் முதல் ரூ. 6 லட்சம் வரை அதிகமான வருமானம் வருவதாக கார்ப்பரேஷனில் இருந்து நல்ல செய்திகள் வந்துகொண்டு இருக்கின்றன. தமிழக முதல்வர் அவர்களுக்கு ஒன்றே ஒன்று சொல்லிக் கொள்கிறேன். பிரைவேட் வண்டிகள் சென்றபின் ஒரு நிமிடம், இரண்டு நிமிடங்களில் நம்முடைய

கார்ப்பரேஷன் வண்டிகள் சென்றுகொண்டிருக்கின்றன. அதன்பிறகு அரை மணி நேரம், ஒருமணி நேரம் கழித்துதான் பிரைவேட் வண்டிகள் செல்லுகின்றன. இதனால் நமக்குக் கிடைக்கவேண்டிய, கார்ப்பரேஷனுக்குக் கிடைக்க வேண்டிய அத்தனை வருவாயையும் பிரைவேட் வண்டிக்காரர்கள் பெற்றுவிடுகிறார்கள். எனவே, மாவட்ட ஆட்சித் தலைவர்களிடத்திலே சொல்லி நம்முடைய கார்ப்பரேஷன் வண்டிகள் புறப்படும் நேரத்தைச் சரிசெய்தால் கிட்டத்தட்ட 300 கோடி ரூபாய் நஷ்டத்தை ஈடுகட்டி, ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் லாபத்தில் பேருந்துகள் இயங்கும் என்பதைச் சொல்லிக்கொண்டு, எடப்பாடி தொகுதியில்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நான் உங்களிடத்தில் முதலிலேயே சொல்லியிருக்கிறேன், 12.00 மணிக்குள்ளே மற்றவர்களெல்லாம் பேசிவிட்டு, முன்வரிசைத் தலைவர்கள் பேசவிருக்கிறார்கள் என்று. நீங்கள் அதிக நேரம் எடுத்துக் கொண்டீர்கள். இன்னும் இருவரை நான் அனுமதிக்க வேண்டியிருக்கிறது. எனவே, இதோடு உரையை முடித்து விடுவது நல்லது. அடுத்து (குறுக்கீடு) சரி, சீக்கிரம் பேசி முடியுங்கள்.

திரு. இ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய எடப்பாடி தொகுதியில் நகரப் பேருந்துகள் 15 ஆண்டுகளுக்கு முன்பு விடப்பட்டு, அந்த நகரப் பேருந்துகள் பழையதாகி அவற்றில் பல பேருந்துகள் ஓடாமல் இருக்கின்றன. அதன் பிறகு புதிய பேருந்துகள் எதுவும் விடவில்லை. கலைஞர் ஆட்சியிலே எடப்பாடி தொகுதியிலே நகரப் பேருந்துகள் விட வேண்டுமென்றும், எடப்பாடியிலிருந்து சேலம் மற்றும் மற்ற பகுதிகளுக்கு நிறைய பேருந்துகள் விட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டு அமர்கிறேன். நன்றி வணக்கம்.

நண்பகல் 12-00

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. சக்ரபாணி, ஐந்தே ஐந்து நிமிடங்களுக்குள் பேசி முடித்து விடுங்கள்.

திரு. ஆர். சக்ரபாணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க மாமன்றத்தில் பேச எனக்கு வாய்ப்பளித்த மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்

அவர்களுக்கும், அதிகமான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்த ஒட்டன்சத்திரம் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து, கன்னிப் பேச்சினைத் தொடங்குகின்றேன்.

இந்த மாமன்றத்தில் கடந்த கால கட்டங்களில் நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்து விவாதித்திருக்கிறார்கள். அந்த நிதிநிலை அறிக்கைகள் எல்லாம் மக்களின் உணர்வுகளை, மக்களின் அவசியத் தேவைகளை வெளிப்படுத்தியதில்லை. ஆனால் நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளை, தேவைகளைத் தெரிந்து நிதிநிலை அறிக்கையைத் தயார் செய்து இருக்கிறார்கள்.

பல்லாண்டு காலமாக வணிகர்கள் பலமுனைவரியை நீக்கி, ஒருமுனை வரி வேண்டும் என்று பல போராட்டங்களை நடத்தி, பலனேதும் இல்லாமல் ஆட்சி மாற்றம்தான் தங்களுக்கு எதிர்காலம் என்று ஏங்கியிருந்தனர். இன்று புதிய எழுச்சியுடன் அனைத்துத் தரப்பு வணிகர்களும் மகிழ்ச்சியோடு இந்த நிதிநிலை அறிக்கையைப் பாராட்டுகின்றனர்.

படித்து விட்டு வேலையின்றி பரிதவிக்கும் இளைஞர்களுக்கு, கிராமநலப் பணியாளர்கள், நகர நலப் பணியாளர்கள், மதுவிலக்கு பிரச்சாரப் பணியாளர்கள் ஆகிய திட்டங்களின் அடிப்படையில் வேலைவாய்ப்பு பெறும் மகத்தான திட்டத்தால் இளைஞர்கள் மனம் நிறைந்து மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

தமிழகத்தில் புதிய தொழிற்சாலைகள் தோன்றாத காரணத்தால் சோர்வு அடைந்திருந்த தொழிலாளர்கள், இளைஞர்கள் மகிழ்ச்சி அடையும் வகையில் தமிழகத்தில் பல்வேறு தொழிற்சாலைகள் தொடங்கும் திட்டத்தால் மகிழ்ச்சியும், மனநிறைவும் ஏற்பட்டு நிதிநிலை அறிக்கையை வரவேற்றுப் பாராட்டுகிறார்கள்.

தமிழக மக்களின் மிக அவசியத் தேவையான குடிநீர், மின்விளக்கு, சாலை வசதி, சுகாதார வசதி உடனடியாகக் கிடைத்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை அனைத்துத் தரப்பு மக்களும் பாராட்டியிருக்கிறார்கள். மொத்தத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அளித்திருக்கின்ற நிதிநிலை அறிக்கையை தேர்தல் காலத்தில் வாக்களித்த மக்களின் எதிர்பார்ப்பை நிறைவு செய்கின்ற விதத்தில் அவர்கள் மனதார பாராட்டுகின்ற விதத்தில் இருக்கும் நிதிநிலை அறிக்கையை நானும் பாராட்டி மகிழ்ச்சி அடைகிறேன். மகிழ்ச்சியான

இந்த நேரத்தில் எனது தொகுதி மக்களின் அவசிய அவசரத் தேவைகளை இந்த மாமன்றத்தின் மூலம் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் 1989-ஆம் ஆண்டு முதல்வராகப் பொறுப்பேற்றிருந்த காலத்தில் எனது தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான நங்காஞ்சி நீர்த்தேக்கத் திட்டத்தை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தார்கள். அதற்குப் பின் வந்த அ.இ.அ.தி.மு.க. ஆட்சி மேற்கண்ட நீர்த்தேக்கத் திட்டத்திற்குத் தேவையான பணத்தை ஒதுக்கீடு செய்யாமல் ஆமை வேகத்தில் நடத்தி வந்தது. அந்தத் திட்டம் விவசாயத் தேவைக்கேற்ப விரிவுபடுத்தப்பட்ட திட்டமாக கழக ஆட்சியின்போது துவக்கப்பட்டது. அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் அந்தத் திட்டம் சுருக்கப்பட்டு, நடைபெற்ற வேலைகளிலும் பெருமளவு ஊழல் நடைபெற்று, செய்த வேலைகளிலும் பெருமளவு சீரழிவு ஏற்பட்டு உள்ளது. எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களும் மேற்கண்ட நங்காஞ்சி நீர்த்தேக்கத் திட்டத்தில் நடைபெற்றுள்ள முறைகேடுகளையும், ஊழல்களையும் கண்டுபிடிக்கும் வகையில் விசாரணையை நடத்தி, தவறு செய்தவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மீண்டும் அந்தத் திட்டம் சிறப்புடன் அமைந்திட தகுந்த நிதி ஒதுக்கி துரிதமாக வேலைகள் நடைபெற தாங்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து எங்கள் தொகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையான நல்லதங்காள் ஓடைத் திட்டம், திட்ட அளவிலேயே இருக்கிறது. அந்தத் திட்டத்தை உடனடியாக நடைமுறைப்படுத்திட ஏற்பாடுகள் செய்து எனது தொகுதி விவசாய மக்களின் நீண்டகால ஆசையை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12.05

எனது தொகுதியிலுள்ள சடையகுளத்திலிருந்து வெளியேறும் உபரி நீரை வாய்க்கால் வெட்டி செங்குளத்திற்குக் கொண்டு சென்று, விவசாயத் தொழில் விரிவடையச் செய்திட தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதியில் வாழும் மக்களுக்கு போதிய சுகாதார வசதியில்லாததால், போதிய மருத்துவ வசதியில்லாததால், அவர்கள்

மதுரை, பழனி, திண்டுக்கல் போன்ற நகரங்களுக்குச் செல்ல வேண்டிய பரிதாபநிலையில் உள்ளனர். அதனால் ஏற்படுகின்ற காலதாமதத்தினால் உயிரிழப்புகள் மிக அதிகமாக ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே, அனைத்து உயிர்காக்கும் வசதிகளுடன் கூடிய அரசு பொது மருத்துவமனை ஒன்றை ஒட்டன்சத்திரம் நகருக்கு ஏற்படுத்தித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பழனி வட்டத்திலிருந்து ஒட்டன்சத்திரம் வட்டம் தனியாகப் பிரிக்கப்பட்டதாக முந்தைய அரசு அறிவித்தது. தற்பொழுது ஒட்டன்சத்திரம் வட்டத்திலுள்ள அனைத்து அரசு அலுவலகங்களும் வாடகைக் கட்டிடத்திலேயே இயங்கி வருகின்றன. எனவே, அனைத்து அரசு அலுவலகங்களுக்கும் அரசு சார்பில் கட்டிடம் கட்டித்தர ஏற்பாடு செய்து தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

ஒட்டன்சத்திரம் காய்கறி மார்க்கெட், தமிழ்நாட்டிலுள்ள மிகப் பெரிய மார்க்கெட்டுகளில் ஒன்றாகும். அங்கு தினமும் ஆயிரக்கணக்கான டன் காய்கறிகள் வந்து, இந்தியாவின் பல பகுதிகளுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. உற்பத்தி அதிகமாகும் நேரங்களில் காய்கறிகளை இருப்பில் வைத்துக் கொள்ள முடிவதில்லை. அதனால் காய்கறிகள் அழுகுகின்ற சூழ்நிலை ஏற்படுகின்றது. எனவே, அங்குள்ள விவசாயிகளின் நீண்டநாள் கோரிக்கையான, காய்கறிகளைப் பதப்படுத்துவதற்கு குளிர்சாதன வசதி கொண்ட கட்டிடம் ஒன்று கட்டித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

ஒட்டன்சத்திரம் பகுதி விவசாயிகள் நிறைந்த பகுதியாகும். அதில் இரண்டு ஒன்றியங்கள் உள்ளன. ஒன்று ஒட்டன்சத்திரம், மற்றொன்று தொப்பம்பட்டி. இவற்றில், ஒட்டன்சத்திரம் ஒன்றியத்தில் அரசு சார்பாகவோ அல்லது தனியார் சார்பாகவோ எந்த ஒரு தொழிற்சாலையுமே இல்லை. அதனால் ஒட்டன்சத்திரம் மற்றும் தொப்பம்பட்டி ஆகிய ஒன்றியங்களை தொழிலில் மிகவும் பின்தங்கிய பகுதிகளாக அறிவிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

ஒட்டன்சத்திரம் ஒன்றியம் *36* ஊராட்சி மன்றங்களையும், தொப்பம்பட்டி ஒன்றியம் *39* ஊராட்சி மன்றங்களையும் கொண்டதாக உள்ளன. அதனால் இந்த இரண்டு ஒன்றியங்களையும் பிரித்து, கள்ளிமந்தயத்தைத் தலைமையிடமாகக் கொண்டு தனி ஊராட்சி ஒன்றியமாக்கித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

ஒட்டன்சத்திரம் வளர்ந்துவருகின்ற நகரமாகும். அங்கு போக்குவரத்து அதிகமாக உள்ளதால், சில நேரங்களில் வாகனங்கள் தேங்கி நிற்கவேண்டிய சூழ்நிலை ஏற்படுகின்றது. அதனால் ஒட்டன்சத்திரத்திற்கு ஒரு புறவழிச்சாலை ஏற்படுத்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஒட்டன்சத்திரம் தொகுதி மக்கள், தங்கள் வழக்குகள் சம்பந்தமாக திண்டுக்கல்லுக்கும், பழனிக்கும் சென்றுவர வேண்டிய சூழ்நிலை உள்ளதால், ஒட்டன்சத்திரத்தில் உரிமையியல் நீதிமன்றமும், குற்றவியல் நீதிமன்றமும் அமைத்துத் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதியில் வடகாடு என்ற மலைப்பிரதேசம் நிலமட்டத்திலிருந்து 20 கிலோமீட்டர் உயரத்தில் உள்ளது. அங்கு கால்நடைகள் அதிகமாக வளர்க்கப்படுகின்றன. கால்நடைகளுக்கு நோய் ஏற்பட்டால் அவைகளை ஒட்டன்சத்திரம் கால்நடை மருத்துவமனைக்குக் கொண்டு செல்லவேண்டிய சூழ்நிலை உள்ளது. எனவே, அங்கு கால்நடை மருத்துவமனை அமைத்துத் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

ஒட்டன்சத்திரம் தொகுதி முழுவதும் தண்ணீர்ப் பிரச்சினை கடுமையாக உள்ளது. ஒட்டன்சத்திரம் பேரூராட்சிக்கு நிரந்தரமான குடிநீர்த்திட்டம் ஒன்று கொண்டுவர வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன். தொப்பம்பட்டி ஒன்றியத்திலுள்ள சண்முகா நதியிலிருந்து, கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் சரவணப்பட்டி, ஆலாவலசு, கந்தப்பக் கவுண்டன் வலசு, தொப்பம்பட்டி, தேவதாகுடி வலசு, வேலம்பட்டி, மேட்டுப்பட்டி, பூசாரிக் கவுண்டன் வலசு, வாகரை, பொருளூர், கள்ளிமந்தயம் ஆகிய கிராமங்களுக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் கொண்டுவர வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

ஒட்டன்சத்திரத்திலிருந்து இடையகோட்டைக்கு பஸ் வசதி ஏற்படுத்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். அதேபோல... *(மணியடிக்கப்பெற்றது)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சீக்கிரம் உரையை முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. ஆர். சக்ரபாணி: அதேபோல, ஒட்டன்சத்திரத்திலிருந்து பாச்சலூருக்குச் செல்கின்ற மக்கள், இந்த நூற்றாண்டில்கூட, பஸ்ஸின் கூரை மீது ஏறிப் பயணம் செய்கின்ற சூழ்நிலை உள்ளது. அதனால் ஒட்டன்சத்திரத்திலிருந்து பாச்சலூருக்கு கூடுதலாக இரண்டு பேருந்துகள் விடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் சாலை வசதி மிகவும் மோசமாக உள்ளது. ஒட்டன்சத்திரம்-தாராபுரம் சாலை குண்டும் குழியுமாக உள்ளது. அதனால், ஒட்டன்சத்திரம்-தாராபுரம் சாலையை அகலப்படுத்த வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று, வாகரையிலிருந்து வடபருத்தியூர் செல்லும் சாலை, வெரியப்பூரிலிருந்து தேவசின்னாம்பட்டி வழியாக கேதையுறம்புக்குச் செல்லும் சாலை, வில்வாதம்பட்டியிலிருந்து கீரனூருக்குச் செல்லும் சாலை போன்ற சாலைகளையெல்லாம் ஏற்படுத்தித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

ஒட்டன்சத்திரம் தொகுதியில் படித்த இளைஞர்கள் அதிகமாக உள்ளதால், அரசின் சார்பில் ஒரு தொழிற் பயிற்சி நிலையம் அமைத்துத் தருமாறு கேட்டுக் கொள்கிறேன். தொப்பம்பட்டி ஒன்றியத்தில் பழனியாண்டவர் தேவஸ்தானத்திற்குச் சொந்தமான, சுமார் 200 ஏக்கருக்கும் மேற்பட்ட நிலம் தரிசாக உள்ளது. அங்கு சிட்கோ மூலமாக ஒரு தொழிற்பேட்டை அமைத்துத் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதியில் வடகாடு மலைப்பகுதியில் உள்ள மக்களுக்கு நோய் ஏற்பட்டால், ஒட்டன்சத்திரம் மருத்துவமனைக்கு வரவேண்டிய சூழ்நிலை உள்ளது. அதனால் வடகாட்டில் ஆரம்பச் சுகாதார நிலையம் ஒன்றை அமைத்துத் தருமாறு கேட்டுக் கொண்டு எனக்கு இந்த மாமன்றத்தில் பேசுவதற்கு வாய்ப்பளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 12-10

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மணி.

திரு. டி. மணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1996-97-ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தின்மீது சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். ஏற்கெனவே நம்முடைய மாநிலத்தில் உள்ள சென்னை மாநகரை பல்வேறு விதமான பெயர்களிலே அழைத்து வந்ததை, 'சென்னை' என்று அறியக்கூடிய வகையிலே, பெயரை மாற்றித் தந்திருக்கிற அந்த நல்ல நிகழ்ச்சியை என்னுடைய இயக்கத்தின் சார்பிலே நான் மனமாரப் பாராட்டுகிறேன்.

அடுத்து, மத்திய, மாநில உறவுகள் சம்பந்தமாக சொல்லும்போது, மத்திய மாநில உறவுகள் பற்றி சர்க்காரியா கமிஷன் எந்த அளவுக்கு விஷயங்களைச் சொன்னாலும், அதிலே காலத்திற்கேற்றவாறு, மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்ற விஷயத்திலே, நாம் கொஞ்சம் அதிக அக்கறை எடுத்து—அந்த அதிகாரம் என்பது, பரவலாக அதிக அதிகாரம் வேண்டுமென்று சொல்கிற அதேநேரத்திலே, சில வரிச் சலுகைகள் அல்லது நம்முடைய வருவாயைப் பெருக்குகிற அளவிலே—மத்திய அரசாங்கம் எந்த அளவுக்கு நமக்கு நிதியாதாரங்கள் தருகிறதோ, அந்த அளவிலேதான் நம்முடைய அதிகாரம் என்பது, அதனுடைய பின்னணியிலே இருக்கவேண்டும். குறிப்பாக, நம்முடைய ஐந்தாண்டுத் திட்டம் வருகிறபோது, முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலே எந்த அளவுக்கு நிதியைத் தருகிறார்கள்; அதை இரண்டாவது கட்டத்திலே எந்த அளவுக்கு உயர்த்தித் தருகிறார்கள் என்பதன் அடிப்படையிலேதான் நம்முடைய மாநிலத்தினுடைய வளர்ச்சியானாலும் சரி, வேறு எந்தப் பணிகள் ஆனாலும் சரி, வளர்ச்சியடைவதற்கு ஏதுவாக இருக்கும். அந்த வகையிலே, நம்முடைய நிதியாதாரங்களை, இந்த மாநிலத்திற்கு அதிக அதிகாரங்கள் என்ற வகையில், அது நம்முடைய ஐந்தாண்டுத் திட்டமானாலும், வேறெந்த நிதியாதாரங்களானாலும், அந்த அளவுக்குத் தரவேண்டும் என்பதை நான் இங்கே எடுத்துக்கூற விரும்புகிறேன்.

இரண்டாவது, நம்முடைய துறைமுகங்கள். ஏற்கெனவே, நம்முடைய மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் இங்கே பலவற்றைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். குறிப்பாக, இராமேஸ்வரம், பாம்பன், வாலிநோக்கம் என்றெல்லாம் பலவற்றை இந்த நிதிநிலை அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். அதிலே குளச்சலைப் பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார்கள். கன்னியாகுமரியையும் குறிப்பிட்டிருக்கிறார்கள். வேறு பலவற்றையும் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்தின் கடலோரப் பகுதிகளில், மீனவ மக்கள் கடலிலே சென்று மீன் பிடிப்பதற்காக அமைக்கப்படும் சிறிய துறைமுகங்களில், மீன்பிடித் துறைமுகங்களில் ஒன்றுதான் கன்னியாகுமரி என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். 1982-83ஆம் ஆண்டுக் காலத்திலே, இன்றைய ஆளுங்கட்சியினுடைய அமைச்சர் பெருமக்களும், அதிலே இருக்கிற பெருவாரியான உறுப்பினர்களும், இந்தப் பகுதியிலே இருக்கிற காலத்திலே, இதே மன்றத்திலே, 1982-83ஆம் ஆண்டு வாக்கில், குளச்சல் துறைமுகம் சம்பந்தமாக, அன்றைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மத்திய அரசிடமிருந்து அதற்கான அனுமதியைப் பெற்றார்கள். ஆனால்,

1996 ஜூலை 24] [திரு. டி. மணி]

இன்றையதினம், அங்கே சென்று நாம் பார்க்கிறபோது, குளச்சல் துறைமுகம் என்று சொல்கிற விளம்பரப் பலகைதான் அந்தப் பகுதியிலே இருக்கிறது. அதன்பிறகு எத்தனை ஆண்டுகள் ஆகிவிட்டன என்று நான் என்னுடைய கணக்கைச் சொல்லத் தேவையில்லை. குளச்சல் துறைமுகம் ஏற்படுகிறபோதுதான், அந்தப் பகுதியிலே உள்ள, மணவாளக்குறிச்சியிலிருந்து போகிற மணல் பூராவும் அந்நிய நாடுகளுக்கு ஏற்றுமதியாகிறபோது, அன்னியச் செலாவணியை அதிகமாக உருவாக்கித் தரமுடியும். அத்தகைய ஒரு சின்ன மாவட்டம் என்ற முறையிலே, அந்தத் துறைமுகத்தை விரைவிலே செயல்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்பதைத்தான் என்னுடைய வேண்டுகோளாக, அந்தப் பகுதியிலே இருக்கிற மக்களின் வேண்டுகோளாக, இந்த மாமன்றத்தில் ஒரு கோரிக்கையாக நான் வைக்க விரும்புகிறேன்.

அதேபோல், இந்த மாவட்டத்திற்கு வருகிற முந்திரிக்கொட்டை ஆப்பிரிக்காவிலிருந்து இங்கு இறக்குமதி ஆகிறது. இங்கே இறக்குமதி செய்கிறார்கள் என்று சொன்னால், அது தூத்துக்குடியிலே ஒரு பகுதி, இன்னும் கொச்சியிலே ஒரு பகுதி என்று இறக்குமதி செய்யப்பட்டு, இங்கே வருகிறது. அவை பூராவையுமே குளச்சலில் இறக்குமதி செய்கிறபோது, அந்தப் பகுதியிலே வருகிறபோது, அந்தப் பகுதி மக்களுக்கு தொழில் வாய்ப்பை ஏற்படுத்துவது மட்டுமல்ல; இன்னொரு முக்கியமான பிரச்சினையும்கூட இருக்கிறது. அது சம்பந்தப்பட்ட தொழில் பூராவையுமே கொச்சியிலே வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதன் காரணமாக நம்முடைய மாநிலத்திற்குக் கிடைக்க வேண்டிய அன்னியச் செலாவணி, அண்டை மாநிலத்திற்குச் செல்கிற ஒரு துர்பாக்கியமான நிலை, நீண்ட நெடுங்காலமாகத் தொடர்கிறது என்பதை நான் நம்முடைய அமைச்சர் பெருமக்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஆகவே, அந்தத் துறைமுகம் விஸ்தரிக்கப்பட வேண்டும், விரைவிலே ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள். அடுத்து, மீன்பிடித் துறைமுகம் என்று சொல்கிறபோது, அதனை கன்னியாகுமரியிலே ஆரம்பிப்பது நல்ல காரியம்.

பிற்பகல் 12-15

அதேபோன்றுதான், எங்களுடைய மாவட்டத்திலே இருக்கிற இரணியன்துறை என்ற பகுதியில், தேங்காய்பட்டணத்தில், தாமிரபரணி ஆறு போய்க் கொண்டிருக்கிறது. அந்த ஆறு போய்ச் சேருகின்ற

பகுதியிலே இந்த மாதிரி மீன்பிடித் துறைமுகம் ஏற்படுத்துவதாகச் சொல்லி, கடந்த ஆண்டோ, அதற்கு முந்தைய ஆண்டோ நிதிநிலை அறிக்கையிலே அதற்காகப் பணத்தையும் ஒதுக்கியிருப்பதாகச் சொல்லுகிறார்கள். அந்தப் பகுதி மக்கள் எங்கே போகிறார்கள் என்று சொன்னால், தமிழகத்தில் இருக்கக்கூடிய அந்த மீனவப் பகுதி மக்கள், ஒரு சீசன் என்று சொன்னாலும்கூட, இங்கே தங்களுடைய படகை ஒதுக்கிக்கொள்வதற்கு இடம் இல்லாத காரணத்தினாலும், வசதி இல்லாத காரணத்தினாலும் கோவாவுக்கு மீன்பிடிக்கச் செல்லுகிறார்கள். நம்முடைய தமிழக மீனவர்கள் கோவாவுக்குச் செல்லுகிறார்கள். ஆனால் அங்கே அவர்களுக்குப் பாதுகாப்பு இல்லை. பாதுகாப்பு இல்லாதது மட்டுமல்ல, 2 ஆண்டுகளுக்கு முன்னால், 7 படகுகளைக் கொளுத்தி இலட்சக்கணக்கான ரூபாய் இழப்பை ஏற்படுத்தினார்கள். நான் மத்திய சர்க்காருக்கும், மாநில சர்க்காருக்கும் அவர்கள் சார்பாக பல்வேறு மனுக்களைக் கொடுத்தேன். இதுவரையிலும் எந்தவிதமான பதிலும் வரவில்லை, ஆதரவும் கிடைக்கவில்லை, நஷ்டஈடும் கிடைக்கவில்லை. ஆகவே, அந்த மீன்பிடித் துறைமுகம் என்பது தவிர்க்கமுடியாத ஒரு தேவை என்பதை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சருடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

அடுத்து உணவுத் திட்டம். உணவுத் திட்டத்தில் 1000 கோடி ரூபாயை நாம் மானியமாகச் செலவிடுகிறோம். அந்தத் திட்டத்தின்கீழ் 20 கிலோ அரிசி வழங்குவதாக நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். அந்த 1000 கோடி ரூபாயையும் செலவு செய்தபோதிலும், சாதாரண விவசாயிகளுடைய, சாதாரண கிராமப்புறப் பகுதி மக்களுடைய கையில் அந்த அரிசி கிடைக்கின்றபோது 20 கிலோவில் ஒரு கிலோ, அல்லது அதற்கு மேலும் குறைகின்றது. கடைக்காரர்களைக் கேட்டால் நாங்கள் வாங்குகிற இடத்திலேயே எங்களுக்கு அதனுடைய அளவைக் குறைத்துக் கொடுக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். ஒரு கிலோவில் 100 கிராம், 150 கிராம் எடை வெட்டப்படுவதாகக் கூறுகிறார்கள். அரிசி கூட சில நேரங்களில் ஈரப்பதமாக இருந்தால் குறைந்து போகலாம். ஆனால் சர்க்கரையில்கூட அளவு குறைகிறது என்று சொன்னால் அது எப்படி? நாம் வெளி மார்க்கெட்டிலே ஒரு மூட்டை சர்க்கரை வாங்கினால் அதில் 25 கிராம்கூடக் குறைவதில்லை. எனவே எடைவெட்டு என்பது சர்வசாதாரண நிகழ்ச்சியாக இருக்கின்றது. அந்த மாவட்டத்திலே அது ஒரு கடைசிப் பகுதி. அந்தப் பகுதி கேரள மாநிலத்தோடு சேர்ந்த பகுதி. அங்கே ஒப்பன் மார்க்கெட்,

அதாவது வெளிச்சந்தைக்குப் பொருட்கள் வருவது குறைவு. அது கடைசிப் பகுதியாக இருப்பதால் அங்கே அதிகமான சுங்கச் சாவடிகளை வைத்திருக்கிறார்கள். அங்கே அரிசி வருவதேயில்லை. இடையிலேயே நின்றுவிடுகின்றது. எனவே அந்த மக்கள் அந்த அரிசியை நம்பித்தான் வாழ வேண்டியிருக்கிறது. அவர்கள் கேட்பது எங்களுக்கு உணவுக்குத் தகுதியான நல்ல அரிசி வேண்டும் என்பதுதான். ஒரே வார்த்தையில் சொன்னால் நல்ல அரிசி வேண்டும் என்பதுதான். அந்த வகையில் அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்தது குடும்ப அட்டை. நேற்றையதினம் கேள்வி நேரத்திலே மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் குடும்ப அட்டை சம்பந்தமாக பல தகவல்களைச் சொன்னார்கள். கள்ளக் கார்டுகள் நிறைய இருக்கின்றன. அது உண்மை. கள்ளக் கார்டுகளை நாம் தடுக்க வேண்டும் என்று சொன்னால், ஒரு வார்டிலே நாம் கள்ளக் கார்டுகளைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று சொன்னால் என்னுடைய கருத்தின்படி நாம் கார்டுகளை வழங்குகின்றபோது பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த குழுக்களை அமைத்து அதன் மூலமாக கார்டுகளை நாம் வழங்குவோமேயானால் யாரும் ஒரு கார்டுகூட கள்ளக் கார்டு வைத்திருக்க முடியாது. அப்படி வைத்திருந்தாலும் அதைக் கண்டறியமுடியும். இரண்டாவதாக ஒரு குடும்பத்திலே 4, 5 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அதில் ஒருவருக்குத் திருமணமாகி அவர் தனிக்குடித்தனம் செல்கிறார் என்றால், அப்படித் தனிக்குடித்தனம் செல்பவருக்குக் கார்டு கிடைப்பதில்லை. கார்டுக்காக அங்கே சண்டை வருகிறது. ஆகவே குடும்பங்களிலே பிரிவினை வருகின்றபோது, அந்தக் கார்டைப் பிரித்துக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிறகு இயற்கைச் சீற்றம். அது ஒரு அநியாயம். 1992-93-லே முந்தைய அரசு ஆட்சியிலே இருந்தபோது, ஒரு பெரிய வெள்ளம் வந்து தமிழகத்தில் பல மாவட்டங்கள் பாதிக்கப்பட்டன. மத்திய அரசு அதற்காக 5 கோடி ரூபாய் வழங்கியதாகத் தகவல். ஆனால் அன்றைக்கு இருந்த அரசு வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களில் கொஞ்சம் பேருக்குத்தான் காசு கொடுத்தது. அரசுப் புறம்போக்கு நிலத்திலே தென்னங்கீற்றினால் கட்டப்பட்ட 3000-க்கும் மேற்பட்ட குடிசை வீடுகள் அந்தப் பகுதியில் இருந்தன. அவர்களுக்கு ஒரு காசுகூட இதுவரையில் கொடுக்கப்படவில்லை. ஆகவே, அதில் ஏதாவது செய்யமுடியும் என்று

சொன்னால், அதைப் பரிசீலனை செய்யவேண்டும் என்று மிகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அதுபோல சூறாவளி, தமிழகத்தில் பல மாவட்டங்களில் பல்வேறு சேதாரங்களை ஏற்படுத்தியது. இலட்சக்கணக்கான வாழை மரங்கள் சேதமடைந்தன. கன்னியாகுமரி மாவட்டத்தில்கூட அரசுத்துறையின் மூலமாக ஒரு உயர் அதிகாரி வந்து சேதங்களைப் பார்வையிட்டார். அந்த அதிகாரியின் பெயர்கூட பட்டால்கர் என்று நினைக்கிறேன். அந்த அதிகாரி நேரடியாக எல்லாவற்றையும் பார்த்தார்கள். அரசினுடைய அந்த அணுகுமுறை மிகவும் பாராட்டக்கூடியதாக இருந்தது. ஆனால் இதுவரையில் அதிலே எந்த நடவடிக்கையும் இல்லை. அண்டை மாநிலத்தில் ஒரு குலை தள்ளிய வாழை சூறாவளியினால் சேதமடைந்தால் அதற்கு 50 ரூபாய் நஷ்டஈடும், குலை தள்ளாத வாழை சூறாவளியினால் சேதமடைந்தால் 25 ரூபாய் நஷ்டஈடும் வழங்கப்படுகிறது என்று அன்றைக்கிருந்த முதல்வரிடம் சொன்னோம். அதற்கு அந்த அம்மா ஒன்றைக் கேட்டார்கள். ஜி.ஓ. இருந்தால் வாங்கிக் கொடுங்கள் என்று சொன்னார்கள். அந்த ஜி.ஓ.வை வாங்கி அவர்களுக்கு நான் அனுப்பி வைத்தேன். அந்த அடிப்படையிலே, வாழைமரம் பயிர்செய்யும் சாதாரண விவசாயிகள், ஒரு வாழையை நடுவதற்கு, அந்த நிலத்தின் சொந்தக்காரருக்கு ரூ. 10 கொடுக்கிறார்கள். அதைத் தானமாக கொடுக்கிறார்கள். அப்படி பாதிக்கப்படுகின்ற ஆயிரக்கணக்கான விவசாயிகளுக்கு பாதுகாப்பு தருகின்ற வகையில் ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-20

அடுத்து, வேளாண்மைத் துறையைப் பற்றி நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. எங்கள் கட்சியின் சார்பிலே அதை நாங்கள் பாராட்டுகின்றோம். நல்ல அம்சங்களை நாங்கள் சொல்லுகின்ற நேரத்தில், இது சம்பந்தமாக ஒரு கருத்தையும் சொல்ல விரும்புகிறேன். கிராமப்புற விவசாயிகளுடைய வளர்ச்சி, கிராமப்புற விவசாயிகளுடைய முன்னேற்றம் என்பது மிகவும் அவசியமாகும். சாதாரண ஏழை விவசாயியாக இருந்தாலும் சரி, விவசாயத் தொழிலாளர்களாக இருந்தாலும் சரி, அவர்களுக்கு வளர்ச்சி இருக்க வேண்டும். என்னுடைய நினைவு சரியாக இருக்குமானால், பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் இந்த மாமன்றத்தில் முதலமைச்சராக இருந்த நேரத்தில் இங்கே ஒரு நிலச் சீர்திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதற்குப் பின்னாலே வந்த அரசாங்கங்கள் எல்லாம் பல்வேறு மாற்றங்களைச்

செய்தார்கள். சிலவற்றில் நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள். ஆனால் அழுத்தமான ஒரு நிலச் சீர்திருத்தச் சட்டம் வேண்டும். அந்தச் சட்டத்தில் என்ன இருக்க வேண்டும் என்றால் பினாமிகள் பெயரில் இருக்கும் நிலங்களைக் கண்டுபிடித்து அவற்றை ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு ஒரு ஆளுக்கு ஒரு ஏக்கர் என்ற அளவில் ஒரு இலட்சம் ஏக்கர் நிலத்தை ஒரு இலட்சம் விவசாயிகளுக்குக் கொடுத்தால் அந்த விவசாயிகள் பாதுகாக்கப்படுவார்கள்.

எனக்குத் தெரிந்த ஒரு விஷயத்தை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். பெரிய தோட்ட முதலாளிகள் என்று எடுத்துக்கொண்டால், என்னுடைய மாவட்டத்திலே களியல் என்ற கிராமத்திலே பெரிய தோட்ட முதலாளி ஒருவர் இருக்கிறார். அவரிடம் 5 ஆயிரம் ஏக்கர் ரப்பர் எஸ்டேட் நிலம் இருக்கிறது, அவை அத்தனையும் பட்டா நிலங்கள். ஆனால், அவரும் ஒரு ஏரியாவில் 922 ஏக்கர் புறம்போக்கு நிலத்தை வைத்துக் கொண்டிருக்கிறார். அதுபோன்ற நிலங்களை எடுத்து ஏழை எளிய விவசாயத் தொழிலாளர்களுக்குக் கொடுக்காவிட்டால், கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய ஏழை மக்களுடைய அன்றாட வருவாயைப் பெருக்க முடியாது. அவர்களுடைய வாழ்விலே நாம் மாற்றத்தை ஏற்படுத்த முடியாது. அந்த நிலங்களை எல்லாம் கண்டுபிடித்து நிலமற்ற விவசாயிகளுக்குத் தருகின்ற வகையில் நீங்கள் ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் இந்த அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

அடுத்து பாசனம் சம்பந்தமாக பல திட்டங்களைச் சொல்லியிருக்கிறீர்கள், அவற்றை நான் வரவேற்கிறேன். ஆனால் கண்மாய்கள், கால்வாய்கள், குளங்கள் போன்றவற்றைச் சீரமைக்கும்போது அவற்றுக்காக ஒரு 'மாஸ்டர் பிளான்' வைத்துக் கொள்ள வேண்டும். அந்த பிளான் அடிப்படையில் ஒரு வருடத்தில் 2 குளங்கள், 2 கண்மாய்கள் என்ற அளவில் எடுத்துக் கொள்ளவேண்டும். எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டால் பணம் சரியாகச் செலவு செய்யப்படாமல் போய்விடும். என்னுடைய மாவட்டத்தில் ஒரு குளம் வெட்டுவதற்கு ஒரு லட்சம் ரூபாய் என்ற அளவில் கொடுக்கிறார்கள். அது சரியாகப் போய்ச் சேராது. ஆனால் அதைப் பயன்படுத்தி உருப்படியாக ஒரு ஒன்றியத்தில் 5 குளம் என்ற அளவில் எடுத்துக்கொண்டு 5 லட்ச ரூபாயைச் செலவு செய்து கரைகளைக் கட்டி மண்ணரிப்பைத் தடுத்தால் நன்றாக இருக்கும்.

அந்த வகையில் பாசனத்தில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஏற்கெனவே நான் நம்முடைய மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரிடம் எங்களுடைய மாவட்டத்தின் நீராதாரத்தைக் கண்டுபிடித்து புதிய திட்டங்கள் என்ற அளவில் ஒரு பட்டியலைக் கொடுத்திருக்கிறேன். பள்ளாறு கால்வாய், மடிசல் கால்வாய், முல்லையாற்றின் குறுக்கே அணை, மாவடுதுறை அணை என்று அங்கே இருக்கின்றன. எங்களுடைய மாவட்டத்திலிருந்து வந்திருக்கக்கூடிய பல உறுப்பினர்கள் பல கருத்துக்களைத் தெரிவித்தார்கள். மாவடுதுறை அணையைக் கட்டினால் மட்டும் நாம் நாகர்கோவிலுக்குக் கொடுக்க வேண்டிய குடிநீரை முழுவதுமாகக் கொடுக்க முடியும் என்பது என்னுடைய கருத்தாகும். வேறு திட்டங்களை வைத்திருக்கிறார்கள். அது எந்த அளவுக்குச் சரியானது என்று எனக்குத் தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இன்னும் ஒரு நிமிடத்தில் பேசி முடித்துக் கொள்ளுங்கள். கட்சிகளின் தலைவர்கள் இன்னும் 5 பேர் பேசியாகவேண்டும்.

திரு. டி. மணி: அடுத்து, காவிரிப் பிரச்சினையைப் பொறுத்த வரையில், காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பின் பின்னணியில் இரண்டு மாநிலங்களும் இணக்கத்தோடு பேசி முடிக்கவேண்டும் என்பதுதான் எங்களது அணுகுமுறை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்ததாக கல்வியை எடுத்துக் கொண்டால் அதில் தனியார் ஆதிக்கம் மிகவும் வளர்ந்துள்ளது. அதைக் கட்டுப்படுத்த வேண்டும். தனியார் கல்லூரிகளுக்குப் போகும்போது, பொதுவாக மருத்துவக் கல்லூரிகளை எடுத்துக் கொண்டால் காசு கொடுத்தால் இடம் என்ற நிலை உள்ளது. சில்லறை அல்ல, பல லட்சங்கள் கொடுக்க வேண்டியிருக்கிறது. தனியார் ஆதிக்கம் என்று சொல்லுகிறபோது, எங்களுடைய மாவட்டத்தில் இருக்கின்ற டி.டி.சி. ஆசிரியர் பயிற்சிப் பள்ளியைத் தனியார் நடத்துவதற்கு அனுமதி வழங்கப்படவில்லை என்று நான் கருதுகிறேன். ஆனால் பத்திரிகையிலே விளம்பரத்தைப்போட்டு கொல்லங்கோட்டிலே ஒரு ஆசிரியர் ஒரு பயிற்சிப் பள்ளியை நடத்துகின்றார். ஏற்கெனவே, இந்த மன்றத்திலே 1983-ம் ஆண்டு பேசுகின்றபோது அன்றைய ஆளுங்கட்சியில் இருந்த மாண்புமிகு அமைச்சர் அரங்கநாயகம் அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள், எந்தக் காரணத்தைக்கொண்டும் தனியாருக்கு உரிமை வழங்கப்படமாட்டாது என்று. ஆனால், அதைத் தொடர்பாக

வைத்துக்கொண்டு, நீதிமன்றத்திலே சென்று செலவு செய்து பெற்றுக்கொள்கின்றார்கள். ஒரு அட்மிஷனுக்கு இன்றைக்கு ரூ. 20,000 வாங்குகிறார்கள் அந்த டி.டி.சி. தனியார் பள்ளியிலே. இதனையும் நான் அரசினுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

பிற்பகல் 12-25

அடுத்து, நம்முடைய ஹோமியோபதி, சித்தா, ஆயுர்வேதம் இவையெல்லாம் கூட எல்லா மருத்துவமனைகளிலும் வரக்கூடிய........ (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், மருத்துவக் கல்லூரியாக இருந்தாலும் சரி, பொறியியல் கல்லூரியாக இருந்தாலும் சரி, தனியாருக்கு அனுமதி வழங்குவதில்லை என்றுதான் நாங்கள் முடிவு செய்து இருக்கிறோம். இருந்தாலும், அவர்கள் டெல்லிக்குச் சென்று, மத்திய அரசாங்கத்தின் மூலமாக அவர்கள் அனுமதியினைப் பெற்றுவந்து, இங்கே பல்கலைக்கழகத்திலே, அனுமதிவேண்டுமென்று கேட்கிறார்கள். பல்கலைக்கழகம் அனுமதிக்க மறுத்தால், உச்சநீதிமன்றத்திற்குப் போய், உச்சநீதிமன்றத்தின் மூலமாக ஒரு ஆணையைப் பெற்று வந்துவிடுகிறார்கள். எனவே, மாநில அரசாங்கத்தைப் பொறுத்தவரையிலே தனியாருக்கு எக்காரணத்தைக் கொண்டும் கல்லூரிகள் தொடங்குவதற்கு அனுமதிக்க முடியாது என்று முடிவு எடுத்தாலும்கூட எங்கள் சக்திக்கு அப்பாற்பட்டு, மத்திய அரசும், உச்சநீதிமன்றமும் இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

திரு. டி. மணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் மாநில சர்க்காரை குறை ஒன்றும் சொல்லவரவில்லை. இருக்கக்கூடிய நிலைமைகளைத்தான் சொல்கிறேன். ஆக, நான் கேட்டுக் கொள்வதெல்லாம், நம்முடைய மருத்துவமனைகளிலே, ஹோமியோபதி, சித்தா, ஆயுர்வேதம்—இவைகளின் உட்பிரிவைக்கூட விட்டுவிடலாம் ஆனால்—இம்மூன்றும் நம்முடைய மருத்துவமனைகளிலே வரக்கூடிய அளவிற்கு ஆவன செய்ய வேண்டும். அதுதான் என்னுடைய

வேண்டுகோள். எனவே, இது சம்பந்தமாக நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் குழித்துறையிலே ஒரு அரசு மருத்துவமனையிருக்கிறது. 'எக்ஸ்ரே' கருவி வாங்கி 9 மாதங்கள் ஆகின்றன. அதனைப் பயன்படுத்த அவர்கள் தயாராக இல்லை. அங்கு வெளிச்சம் கிடையாது. திருட்டு நடக்கிறது. அதிகாரிகளிடத்தில் சொன்னால் கண்டு கொள்வதேயில்லை. ஆக, அந்த அடிப்படையிலே மருத்துவத் துறையிலே சில மாற்றங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தொழில் வளர்ச்சியைப்பற்றிச் சொல்லவேண்டும் என்றால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நம்முடைய மாநிலத்திலே, தொழில் வளர்ச்சியில் மிகுந்த அக்கறை கொண்டு கார் தொழிற்சாலை மற்றும் அது போல பலவற்றை அறிவித்திருக்கிறார்கள். மிக்க மகிழ்ச்சி அடைகின்றோம். ஆனால், அதே நேரத்தில், எங்களுடைய மாவட்டத்திலே ரப்பர் தொழிற்சாலை அமைப்பது பற்றி இருக்கக்கூடிய சிக்கல் என்னவென்று சொன்னால், வெளி நாட்டிலிருந்து வரும் நிபுணர்கள் அவர்கள் குறிப்பிடும் இடம் கிடைத்தால்தான் அங்கே வருவோம் என்று சொல்லுகிறார்கள். அது அவர்களுடைய விருப்பம். நாம் ஒன்றும் சொல்ல முடியாது. ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்தார்கள். அந்த இடத்தை எடுக்கின்றபோது, தோவாளை தாலுகாவில், நீதிமன்றத்திற்குச் சென்று தடை வாங்கி விட்டார்கள். இப்படி என்றால் ரப்பர் தொழிற்சாலை என்றைக்கு வரும்? ஆனால் அரசுக்குச் சொந்தமான இடம் இருக்கிறது. அதாவது பள்ளக்குளத்தில் 900 ஏக்கரா இருக்கிறது. காடு என்று சொன்னாலும்கூட அங்கு மரங்கள் இல்லை. அதை எடுக்கலாம். மேலும், தக்கலையிலே உதயகிரிக்கோட்டையில் இடமிருக்கிறது. அதை எடுத்தாலும் தொழிற்சாலை நடத்துவதற்கான இடம் இருக்கிறது. தரமான ரப்பரும் இருக்கிறது. எனவே, அந்த வகையிலே தகுந்த ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் ஒன்று சொல்ல வேண்டும். அதாவது தேங்காய் மட்டை நாரிலிருந்து கயிறு எடுப்பதற்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. தொழில் கேந்திரமாக இருக்கக்கூடிய கொல்லங்கோட்டிலே தேங்காய் மட்டையிலிருந்து கயிறு திரிக்கும் வேலை செய்யக்கூடிய ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் இருக்கிறார்கள். ஆனால், அவர்களுக்கு வருமானம் என்று சொன்னால் ஒரு நபருக்குக்

கிடைக்கக்கூடிய வருமானம் ரூ. 20 கூட இருக்காது. குடும்பம் முழுவதும் உழைத்தால்தான் அதில் ஏதாவது வருவாய் வருகிறது. எனவே, அந்தக் கிராமத்தை மாதிரி கிராமமாக இந்த அரசு அறிவிக்க வேண்டும். அதன் மூலமாகத்தான் அந்தத் தொழிலாளர்களுக்கு ஏதாவது மாற்றங்களை நாம் செய்து கொடுக்க முடியும். (மணியடிக்கப்பெற்றது)

அடுத்தது மின் உற்பத்தி பற்றாக்குறையாக இருக்கிறது. ஏற்கெனவே, அங்கே பல்வேறு திட்டங்களை ஆய்வு செய்து, முடித்திருக்கிறார்கள். ஆய்வு முடிந்தாலும், வேலைகளை ஆரம்பிப்பதற்குத் தயாராக இல்லை. உதிரிப்பொருள்கள் இல்லை. மேலும், அது போன்று உயரத்துடன் கூடிய தூண்கள் இல்லை, மின்மாற்றிகள் இல்லை. இவற்றையெல்லாம் இந்தக் காலகட்டத்தில் பெற்றுத்தந்தால்தான் மின்சாரம் ஒழுங்காகக் கிடைக்கும்.

பிற்பகல் 12-30

அதுபோல குடிநீர்ப் பிரச்சினை. இதிலே மத்திய சர்க்காரும், மாநில சர்க்காரும் ரொம்ப முனைப்பாக உள்ளன. மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வேண்டும். கன்னியாகுமரி மாவட்டத்தில் குழித்துறையில் பழைய குடிநீர்த் திட்டம் மாறி, புதிய குடிநீர்த் திட்டம் வந்திருக்கிறது. முந்தைய சர்க்கார் அந்தப் புதிய குடிநீர்த் திட்டத்திலே குழாய் போட்டார்கள். போடப்பட்ட குழாய்கள் தரமானவை அல்ல. இதை ஆரம்பிக்கும் வேளையிலேயே, குழாயில் வெடிப்பு ஏற்பட்டது. ஜனங்களுக்கும் தொந்தரவு. இதனால் நகராட்சிக்கும் தொந்தரவு, தண்ணீரும் கிடைக்காது, அந்த நிலை தவிர்க்கப்பட வேண்டும். அந்த அடிப்படையிலே குடிதண்ணீர்த் திட்டத்திலே சில மாற்றங்கள் வேண்டும்.

அடுத்து, போக்குவரத்துத் துறை. இதைப் பற்றி விரிவாகச் சொல்வதற்கு நேரம் இல்லை. இந்தத் துறை மிகவும் சீர்குலைந்திருக்கிறது. புதிய பஸ்கள் வாங்காமல் சீர்படுத்த முடியாது. எங்கள் மாவட்டத்தில் 600-க்கும் அதிகமான நகரப் பேருந்துகள் இருக்கின்றன. ஆனால் ஓடுவது எத்தனை தெரியுமா? 250-லிருந்து 275 பஸ்கள்தான். நாங்கள் ஊருக்குள் போனால் மாணவர்கள் எங்களைப் பிடித்து வைத்துக் கொள்கிறார்கள். எங்களை விடுவதில்லை. சிறை வைப்பது மாதிரி இருக்கிறது. யார் போய் என்ன சொல்ல முடியும்? பஸ்கள் சரியாக ஓடாததினால் தனியார் பஸ்களில் ஓவராக, அதாவது 15 பேர்கள் அந்த பஸ்களின் மேற்கூரையில் உட்கார்ந்து போகக்கூடிய நிலைமை உள்ளது. இந்தத் துறையை சுடுகாடு மயமாக்கி ஒரு மோசமான நிலைக்கு கடந்தகால ஆட்சியாளர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள்.

அதனால்தான் இந்தத் துறை இவ்வளவு அலங்கோலமாகக் காட்சி தருகின்றது.

இன்னும் ஒரேயொரு கருத்தைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன். வனத் துறையைப் பற்றிச் சொல்ல வேண்டும். ஏற்கெனவே மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடருக்கு வருவதற்கு முன்னால் இரண்டு தகவல்களைச் சொன்னேன், இதற்கு முன்னால் வனத் துறை அமைச்சராக இருந்தவர் என்னுடைய வீட்டிற்குப் பக்கத்திலே உள்ளவர். அவர் பிறந்த நாளிலிருந்தே எனக்கு அவரைத் தெரியும். அவர்களிடத்திலே நான் சொன்னேன், இந்தத் துறையிலே ரொம்ப ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்., கவனமாக ஹேண்டில் பண்ண வேண்டு, இல்லையென்று சொன்னால் நிலைமை மோசமாகிவிடும் என்று. ஆனால், சொல்லி என்ன பயன்? சொல்லி இரண்டு மாதங்களுக்குள்ளே சுடலிக்காட்டிலே இருக்கக்கூடிய அரசாங்கத்தினுடைய தேக்கு பிளான்டேஷனிலே நூற்றுக்கும் அதிகமான மரங்களை வெட்டி எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள். நாங்கள் 'இந்து' பத்திரிகை நிருபர்களை அழைத்துக்கொண்டு போய் காட்டினோம். அவர்களும், படம் பிடித்து, பத்திரிகையிலே போட்டு, நான்கு, ஐந்து ஆர்ட்டிகிள் எல்லாம் எழுதினார்கள். ஆனால், பயன் ஒன்றும் இல்லை. அவருக்குப் பிறகு அடுத்தவர் வந்தார். அதிலே ஏதாவது மாற்றம் வருமா என்று பார்த்தால், முன்னதைவிட அது மோசம். ஆக, கொள்ளைக்கூட்டத்தினுடைய கையில் ஆட்சி இருந்ததன் விளைவுதான் இது. எனவே, காடுகளைப் பாதுகாக்க வேண்டும் என்ற மிகப்பெரிய கோரிக்கையை நாங்கள் வைத்திருக்கிறோம்.

காட்டுவளம் குறைவதால்தான் மழை குறைவாகப் பெய்கிறது என்று நிபுணர்கள் கூறுகிறார்கள். இன்னொன்று, அந்த இலாக்காவைப் பொறுத்தவரையில் அதிகாரிகள் அதிலேயே இருந்து பழுத்துப்போனவர்கள். நீங்கள் மந்திரிகளை ஜெயிலுக்கு அனுப்பி விட்டீர்கள். நல்ல காரியம்தான். அவர்கள் கம்பி எண்ண வேண்டியதுதான். கம்பி எண்ணும் வேலையை மந்திரிகள் மட்டும் செய்தால் போதாது. அதிகாரிகளும் கம்பி எண்ணினால்தான் நிலைமை சீராகும் என்பது என்னுடைய கருத்து. ஏனென்றால், இப்போதுகூட பத்துகாணியில் 50, 60 மரங்களை வெட்டினார்கள். நான் அதிகாரிகளைப் போய்ப் பார்த்துக் கேட்டேன். அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால், 300 வருடம் ஆகிவிட்டன, பழைய மரம் என்றார்கள். அதன் விலை மதிப்பு ஒரு கோடிக்கு மேலே இருக்கும்.

அதுபோல பேச்சிப்பாறை அருகாமையிலே மரத்தை வெட்டினார்கள். நாங்கள் அமைச்சருக்குத் தகவல் கொடுத்தோம். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் தகவல் கொடுத்தோம். ஆனால், அந்த பாரஸ்ட் ஆபீஸர் அதைக் கண்டுகொள்ளவே இல்லை. நீங்கள் அவர்களை வேலையிலிருந்து கழற்றி விட்டால் மட்டும் போதாது. ஜெயிலுக்கு அனுப்ப ஏதாவது மார்க்கம் இருக்கிறதா என்று பாருங்கள். அப்போதுதான் இதைச் சீரமைக்க முடியும் என்பது என்னுடைய கருத்து. இப்படி நம்முடைய காடுகளைப் பாதுகாக்க வேண்டும். இன்னொன்று... *(மணியடிக்கப்பெற்றது)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் சீக்கிரம் பேச்சை முடித்துக்கொள்ள வேண்டும்.

திரு. டி. மணி: 1946-க்கு முன்னாலே நாங்கள் எல்லாம் ஜெயிலுக்குப் போயிருக்கிறோம். ஒரு மாதம் அங்கிருந்துவிட்டு வெளியிலே வரும்போது கண் தெரியாது. அப்படி நாங்கள் இருந்ததற்குப் பெயர் `லாக் அப்'. திருவிதாங்கூரிலே பழைய காலத்திலே அப்படியிருந்தது. 1949-லேகூட ஜெயிலுக்குப் போயிருக்கிறோம். அப்போது எல்லாம் கொள்கை ஒருவிதமாக இருந்தது. கையிலே விலங்கை மாட்டி கம்பியிலே கட்டிப் போட்டு விடுவார்கள். எழுந்திருந்து போகவேண்டுமென்றால் அவர்களுடைய அனுமதி பெற்றுத்தான் போகவேண்டும். ஆனால், இப்போது ஊர் மக்கள் பணத்தைக் கொள்ளையடித்தவர்கள் ஜெயிலுக்குப் போனால் அவர்களுக்கு ஏன் 'கிளாஸ்' கொடுக்க வேண்டும்? அரசியல்வாதிகளாக நாம் ஜெயிலுக்குப் போனபோது நமக்கு கிளாஸ் இல்லை. ஊர்ப்பணத்தைக் கொள்ளையடித்தவர்களுக்கு அங்கே 'கிளாஸ்' கொடுக்கப்படுகிறது. அது ஏன் என்று தெரியவில்லை. *(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வகுப்புகளை ஒதுக்குவது அரசல்ல. நீதிமன்றத்தினுடைய உத்தரவுப்படிதான் அவை ஒதுக்கப்படுகின்றன.

பிற்பகல் 12.35

திரு. டி. மணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த நீதிமன்றம்கூட ஓரளவுக்கு நம்முடைய சமூகப் பிரச்சினைகளை எண்ணிப் பார்க்க வேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள். இந்தக் கொள்ளையடித்த கூட்டத்தினர், ஜெயில் என்று கேட்டாலே,

கம்பி என்று கேட்டாலே, ஜெயிலுக்கு போவதற்கு முன்னாலே நெஞ்சுவலி என்று அநியாயமாகச் சொல்கிறார்கள். ஜெயில் என்று கேட்டவுடனே, இவர்களுக்கு நெஞ்சுவலி எங்கிருந்துதான் வரும் என்று தெரியவில்லை. ஆகவே நம்முடைய மருத்துவ அதிகாரிகளும், நீதிமன்றங்களும் தயவு செய்து, இவர்கள் கொள்ளையடித்த பணம், இந்த நாட்டு மக்களுடைய வரிப்பணம் என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். என்னுடைய உணர்வெல்லாம் என்னவென்றால், எனக்குச் சம்பளம் தருகிறார்கள். நம்முடைய நாட்டிலே, ஜனங்களுடைய பணத்தை, வரிப்பணமாகப் பெற்றுத்தான், நாம் சம்பளமாக பெறுகிறோம். அப்படி இந்த நாட்டிலே இருக்கக்கூடிய மக்களுடைய வரிப்பணத்தை கொள்ளையடித்த இந்தக் கூட்டத்தை, அந்த அமைச்சர்களுக்கு உடந்தையாக இருந்த அதிகாரிகள் வரையிலும் சீரான, முறையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லையென்று சொன்னால், இந்த அரசினுடைய நிர்வாகத்தைக் கூட அவர்கள் திறமையாக நடத்துவதற்கு உதவமாட்டார்கள் என்பது என் கருத்து. இந்த இரண்டு மாதத்தில் இருக்கின்ற அனுபவமும் அதுதான். அந்த வகையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்....

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகளை நான் மதித்து ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். தவறு செய்த அமைச்சர்கள் மாத்திரம் அல்ல, அதிகாரிகள் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதற்கான விழிப்புணர்வுக் குழுவின் சார்பாக, அதிகாரிகளுடைய கோப்புகள் எல்லாம் இப்போது தயாராகிக் கொண்டிருக்கின்றன. வெகு விரைவில் அவைகள் வெளிப்படும்.

திரு. டி. மணி: மிக்க நன்றி....(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவர் முடிக்கட்டும்...... (குறுக்கீடு) அவர் முடிக்கட்டும்.

திரு. டி. மணி: ஆக அந்த அடிப்படையிலே, நடவடிக்கைகள், ஊராட்சி ஒன்றியங்கள் வரையிலும் செல்ல வேண்டும். இரண்டு மாதத்திற்குள், நான் பல அதிகாரிகளைக் கூப்பிட்டுப் பேசிப் பார்த்தேன். பேசினால் அவர்கள் முன்னால் இருந்த போக்கில் மாற்றம் இல்லை. அந்த அடிப்படையிலே மாற்றங்கள் செய்வதன் மூலமாகத்தான் இந்த அரசு உருவாக்கியிருக்கிற திட்டங்கள், அடிமட்டத்திலே வாழ்கின்ற மக்களுக்குப் பயன்பெறச் செய்ய முடியும். அடிமட்டத்திலே வாழ்கின்ற

மக்கள் அரசின் திட்டங்களால் பயன்பெற வேண்டுமென்று சொன்னால், தவறு செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்ற என்னுடைய கோரிக்கையை வைத்து, பேசுவதற்கு வாய்ப்புத் தந்தமைக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். சந்தானம்..(குறுக்கீடு) நிறையப் பேர் பேச வேண்டும்.

திரு. சி. ஞானசேகரன்: ஒரு நிமிடம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நிறையப் பேர் பேச வேண்டியிருக்கிறது. (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள். திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய கருத்தோடு, நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். சிறைக்குப் போகிறவர்கள் எல்லாம்—கொள்ளையடித்துவிட்டு சிறைக்குப் போகிறவர்கள் எல்லாம்—சிரித்துக்கொண்டே போகிறார்களே? ஏதாவது வசதிகள் அதிகமாகச் செய்யப்பட்டிருக்கிறதா அல்லது விதிப்படிதான் ஜெயில் நடைபெறுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விம்பிள்டன் மேட்ச்சில் ஒரு பெண் நிர்வாணமாக ஓடினாள். அவளும் சிரித்துக் கொண்டுதான் ஓடினாள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. எல். சந்தானம்.

***திரு. எல். சந்தானம்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய இதயத்திலே தெய்வமாக வீற்றிருக்கின்ற இந்தியத் திருநாட்டின் தவப்புதல்வன் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களுக்கும், தேசியத் தலைவர் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்து, சோழ நாட்டின் தவப்புதல்வன் தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், தன்மானத் தலைவர் பேராசிரியர் அவர்களுக்கும் சோழவந்தான் தொகுதியை எனக்கு வழங்கிட உறுதுணையாக இருந்த எனது இயக்கத்தின் தலைவர் திரு. அய்யணன் அம்பலம் அவர்களுக்கும், என்னுடைய வெற்றிக்காக அரும்பாடுபட்ட என்னுடைய தோழமைக் கட்சி நண்பர்களுக்கும், சிறப்பாக எனக்கு வெற்றியைத் தேடித் தந்த சோழவந்தான் சட்டப் பேரவைத்

தொகுதியைச் சேர்ந்த வாக்காளப் பெருங்குடி மக்களுக்கும் என்னுடைய உள்ளபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றி விவாதிப்பதற்கு முன்னாலே, தலைவர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய இயக்கத்தின் சார்பிலே ஒரு வேண்டுகோளை சமர்ப்பித்துக்கொள்கிறேன். இந்த ஆண்டு, இந்தியத் திருநாட்டின் தலைசிறந்த தலைவர் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களுடைய நூறாவது பிறந்த நாள் காணும் ஆண்டாகும். அந்த மாபெரும் தலைவருக்கு சென்னை நகரிலே சிறப்புமிக்க ஒரு சிலையை அமைத்துத் தருவதற்கு எங்களது இயக்கத்திற்கு தமிழனத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் உறுதுணையாக இருக்க வேண்டும். காரணம் ஒரு காலத்தில், நேதாஜி அவர்கள் குறிப்பிட்டுச் சொல்கிறபோது, எனக்கு மீண்டும் பிறவி ஒன்று இருந்தால், அதில் தமிழனாகப் பிறக்க வேண்டும் என்று சொன்னார்கள். காரணம், அவர்கள் நடத்திச் சென்ற இந்திய தேசிய இராணுவத்திலே பெரும் பகுதியாகப் பணியாற்றியவர்கள் நமது தமிழ் சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் என்கின்ற காரணத்தினாலே, அப்படிச் சொன்ன அந்தப் பெருமகனுக்கு தாங்கள் ஏற்கனவே மதுரை மாநகரிலே தலைவர் மூக்கையாத் தேவர் அவர்களுக்கு உறுதுணையாக இருந்து, சிறப்புமிக்க மாபெரும் தேவர் திருமகனார் சிலையை அமைத்துத் தந்தவர்கள் என்கின்ற காரணத்தினாலே, சென்னை மாநகரத்திலே அந்தப் பெருந்தலைவனுக்கு நீங்கள் சிலை ஏற்படுத்தித் தருவதற்கு அத்தனை துணையும் செய்ய வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12.40

அதேபோல மதுரையிலே இருக்கின்ற விவசாயக் கல்லூரியை பல்கலைக் கழகமாக ஆக்கி, விவசாயக் குடும்பத்திலே பிறந்த எங்களது தலைவர் முத்துராமலிங்கத் தேவரின் பெயரை அதற்குச் சூட்ட வேண்டும் என்றும் சொல்லி, ஊழலை ஒழிப்பதிலே முனைப்பாக இருக்கின்ற நமது அரசு இன்றைக்கு சினிமாத், துறையிலே காட்டப்படுகின்ற 'இந்தியன்' சினிமா படத்திற்கு வரி விலக்கு அளித்து எல்லா மக்களும் அதைப் பார்க்கின்ற நிலையை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று என்னுடைய விண்ணப்பமாக தலைவர் கலைஞர் அவர்களுக்கு வைத்துவிட்டு, இன்றைக்கு தலைவர் கலைஞர் இங்கு சமர்ப்பித்து இருக்கின்ற நிதிநிலை அறிக்கையானது பற்றாக்குறை அறிக்கை என்று சொன்னாலும்கூட தமிழினத் தலைவர் டாக்டர்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

கலைஞர் தமிழ் மக்களின்பால் கொண்டிருக்கின்ற பற்றுதலைக் காட்டுகின்ற அறிக்கையாக இந்த அறிக்கை அமைந்து இருக்கிறது.

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்".

என்கின்ற வள்ளுவன் வாக்கிற்கு ஒப்ப, தமிழ்ப் பெருங்குடி மக்கள் இன்றைக்கு இருக்கின்ற நிலையிலே, இந்தத் தமிழ் மக்களைக் காக்கின்ற ஒரே தலைசிறந்த தலைவர் தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் தான் என்கின்ற முறையிலே சிறப்பாக வாக்கு அளித்து இருக்கிறார்கள். அந்த தமிழ்ப் பெருங்குடி மக்களுக்கு என்னுடைய பாராட்டுதலைச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதேபோல இந்தப் பற்றாக்குறையை ஈடு செய்வதற்கு என்ன வழிவகை இந்த நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டு இருக்கிறது என்பது தெரியவில்லை. இன்றைக்கு இங்கு பேசிய அனைத்து உறுப்பினர்களும் சென்ற அரசிலே இருந்த அதிகாரிகளும் அமைச்சர்களும் செய்து இருக்கின்ற ஊழல்களை வெகுவாகச் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். அந்த ஊழல் பணங்களை எல்லாம் திரும்பப் பெற்று அரசு கஜானாவுக்கு செலுத்துவதன் வாயிலாக, இந்தப் பற்றாக்குறையை மட்டுமல்ல, இன்னும் அடுத்த ஆண்டு பட்ஜெட்டைக் கூட நிறைவு செய்யலாம் என்கின்ற எண்ணம் தலைவர் கலைஞர் அவர்கள் உள்ளத்திலே இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

இன்றைக்கு வரியே இல்லாத—வரிச் சலுகைகள் ரூ.306 கோடிக்கு கிடைக்கின்ற அற்புதமான அமுதசுரபி ஆகிய—இந்த பட்ஜெட்டை தலைவர் கலைஞர் அவர்கள் மக்குச் சமர்ப்பித்து இருக்கிறார்கள். அதிலே பருப்பு, மிளகாய், புளி போன்ற அத்தியாவசியப் பொருட்களுக்கு எல்லாம் வரிச் சலுகை செய்து இருக்கிறார்கள். அந்த வரிச் சலுகை செய்ததோடு மட்டுமல்லாது, கிடைக்கின்ற அந்தச் சலுகைகள் நுகர்வோருக்கும் உற்பத்தியாளர்களுக்கும் சென்று அடைகிறதா என்பதை அரசு மிக கவனமாக விழிப்போடு இருந்து பார்த்துக்கொள்ள வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதேபோல இன்றைக்கு இருக்கின்ற பிரச்சினை குடிநீர்ப் பிரச்சினை. அந்த குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சிறப்பான ஏற்பாடுகள் எல்லாம் இந்த நிதிநிலை அறிக்கையிலே காட்டப்பட்டு இருக்கிறது.

அடுத்து பேருந்து வசதி. பேருந்து வசதி என்பது இன்றைக்கு மக்கள் எப்படி குடிநீர்ப் பிரச்சினையைத் தலையாய பிரச்சினையாக நினைக்கின்றார்களோ அதேபோல பேருந்து என்பது மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு மிகத் தேவையான ஒன்றாக இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. நமது உறுப்பினர்கள் அனைவரும் குறிப்பிடுவது போல, இன்றைக்கு இருக்கிற பேருந்துகள் எல்லாம் ஊருக்குச் சென்று அடைகின்ற பேருந்துகளாக இல்லை. அவை எல்லாம் நடுவழியிலே நின்றுபோகின்ற பேருந்துகளாக, சாலைகளிலே அலங்காரப் பேருந்து களாக நின்றுகொண்டு இருக்கிற ஒரு அவலமான நிலையைத் தான் நாம் பார்க்க முடிகிறது. எனவே, இன்றைக்கு இருக்கின்ற நமது அரசையும், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்வது, இந்தப் பேருந்துகளை எல்லாம் புதுப்பிக்க வேண்டும். அதோடு சிறப்பான சில பேருந்துகளைப் புதிதாக வாங்கி மக்களினுடைய தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டு மென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயத்தைப் பொறுத்தமட்டிலே நமது நிதிநிலை அறிக்கையிலே சென்ற ஆண்டு இருந்த உற்பத்தியைக் காட்டிலும் இந்த ஆண்டு கால் பகுதி குறைந்து இருப்பதாகக் காட்டப்பட்டு இருக்கிறது. அதற்குக் காரணம், கடுமையான வறட்சி தமிழகம் எங்கும் நிலவுவதுதான். அதனால்தான், இந்த உற்பத்திப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது என்று சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. முன்பு கலைஞர் அவர்களின் அரசு இருந்தபோது விவசாயப் பெருங்குடி மக்களுக்கு இலவச மின்சாரம் வழங்கியதோடு, அவர்கள் பெற்றிருந்த *10,000* ரூபாய் வரையுள்ள கடனைத் தள்ளுபடி செய்ததன்மூலம் விவசாயிகள் உள்ளங்களிலே நிரந்தரமான இடத்தைப் பெற்றிருந்த அரசாக இருந்தது. அப்படிப் பட்ட அரசு இந்தத் தடவையும் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அவர்கள் பெற்றிருக்கிற கடனைத் தள்ளுபடி செய்யமுடியவில்லை என்றாலும்கூட, வட்டி, அபராத வட்டியையாவது தள்ளுபடி செய்வ தற்கு முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கி றேன்.

பிற்பகல் 12-45

தொழில் துறையில் சிறப்பான அம்சங்கள் எல்லாம் இந்த நிதி நிலை அறிக்கையில் தீட்டப்பட்டிருக்கின்றன. அதிலே ஒன்று, *38* கோடி ரூபாய் செலவிலே தேங்காய் பதப்படுத்தும் தொழிற்சாலை

ஒன்று அமைக்கப்படும் என்று கூறப்பட்டிருக்கிறது. அது எந்த இடத்திலே அமைக்கப்படும் என்று சொல்லாத காரணத்தால், தென்னை மரங்கள் அதிகமாக இருக்கின்ற என்னுடைய சோழவந்தான் தொகுதியில் அந்தத் தொகுதி மக்கள் பயன்பெறுகின்ற வகையிலே அந்தத் தொழிற்சாலையை கொடுத்தீர்களேயானால், தமிழினத்தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களை அதற்காக நான் நன்றி பாராட்டக் கடமைப்பட்டவனாக இருப்பேன் என்பதை இந்த சந்தர்ப்பத்திலே சொல்லிக் கொள்கிறேன்.

அதோடு சுற்றுப்புறச் சூழல் என்ற நிலையில் என் தொகுதியில் வேகவதி கெமிக்கல்ஸ் என்ற ஒரு கம்பெனி இருக்கிறது. நஞ்சை நிலங்கள் உள்ள இடத்தில் அமைந்துள்ளது. நேற்று கூட தலைவர் கலைஞர் அவர்கள் சொன்னார்கள். நஞ்சை நிலங்களாக இருக்கிற இடங்களில் இதுபோன்ற ஆலைகள் அமையக்கூடாது என்றார்கள். அந்த கெமிக்கல்ஸ் கம்பெனி சோடியம் குளோரைடு தயாரிக்கிற ஆலையாக அங்கே இருக்கிறது. விஷத்தன்மை கொண்டது. வெடி மருந்து தயாரிக்கிற தன்மை படைத்துள்ள அதைத் தயாரிக்கும் அந்த ஆலைக்கு, முந்தைய அரசில் அனுமதி கிடைத்திருக்கிறது. கொடுப்பதைக் கொடுத்தால் எதையும் பெற்றுக்கொள்ள முடியும் என்ற நிலையிலே அங்கே நஞ்சை நிலமாக, தென்னை மரங்கள் அதிகமாக இருக்கிற அந்த இடத்தில் அந்த ஆலைக்கு உரிமம் கொடுத்ததன் காரணமாக—அந்த விவசாயிகள் அவைகளைப் படம் கூட எடுத்துக் கொடுத்திருக்கிறார்கள்—அங்கே இருக்கிற தென்னை மரங்கள் எல்லாம் பட்டுப்போய் காய்ந்துவிட்டன. எனவே அதற்கு எப்படி உரிமம் வழங்கப்பட்டது என்பதைத் தலைவர் கலைஞர் அவர்கள் ஆராய்ந்து அதை பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது.)

நான் 10 நிமிடம் கூட பேசவில்லை. அருள்கூர்ந்து ஒன்றிரண்டு நிமிடங்கள் தாருங்கள். என்னுடைய தொகுதியின் குறைகள் பற்றிப் பேச வேண்டும். இந்த நிதிநிலை அறிக்கையில் ஏழை எளியவர்கள் பயன்பெறுகின்ற வகையில் திருமண உதவித்திட்டம், பிரசவ காலங்களில் மாதர்க்குக் கொடுக்கிற தொகை ரூ.300 லிருந்து ரூ. 500 ஆக உயர்த்தியது, இவற்றையெல்லாம் நான் வெகுவாகப் பாராட்டுகிறேன். அதுபோல் வேலை வாய்ப்பிலே நிறைய சந்தர்ப்பங்களை இந்த நிதிநிலை அறிக்கையிலே தந்திருக்கிறீர்கள். அதற்கும் நான் இந்த அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நீர்ப்பாசன வசதியைப் பொறுத்த அளவிலே நிதி ஒதுக்கீடு செய்து பல ஆண்டுகளாக தூர்ந்து கிடக்கிற குளங்களையும் கண்மாய்களை யும் சீர் செய்கிற வகையில் இந்த நிதிநிலை அறிக்கை வந்திருக்கிறது. என்னுடைய தொகுதியில் தென்கரை வடகரைக் கண்மாய், கட்டைக் குளம் கண்மாய் போன்றவைகள் இருபதாண்டுகளாக தூர் வாரப் படாமல் இருக்கின்றன. அதுபோல் இந்தக் குளங்களுக்கு வருகின்ற வரத்துக்கால்வாய் எல்லாம் தூர்ந்துபோய்க் கிடக்கின்றன. அதிலே ஒன்று இரும்பாடியைச் சேர்ந்த நாச்சிவியார் கால்வாய், குருவித்துரை கால்வாய் போன்றவைகள் எல்லாம் தூர்ந்து அந்தக் குளங்கள் தூர் வாரப்படாத நிலையில் உள்ளன. ஆகவே அவைகளையெல்லாம் தூர் வார நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்வியைப் பொறுத்தவரை, புதிதாக மேல்நிலைப்பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆனால் பல்வேறு கல்விக்கூடங்களில் போதிய அளவில் வகுப்பறைகள் இல்லாமல் இருப்பதைக் கவனத்திற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதனால் சிறப்பாக போதிக்க முடியாமல் இன்றைக்கு மரத்தடிகளில் வகுப்புகள் நடத்துகின்ற ஒரு நிலை இருக்கிறது. சோழவந்தான் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் போதிய இருப்பிட வசதியில்லாமல் மரத்தடியில் கல்வி கற்பிக்கிறார்கள். அதை இந்த அரசு சிறப்பாக நடவடிக்கை எடுத்து அப்படிப்பட்ட பள்ளிகளுக்கு எல்லாம் கட்டிடங்களைக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-50

கிராமப்புற மக்களுக்குப் பயனுள்ள வகையில் 300 ஆரம்பச் சுகா தார நிலையங்களை இந்த அரசு தந்திருப்பதை நான் வெகுவாகப் பாராட்டுகிறேன். சோழவந்தான் வழியாக இன்றைக்கு கன்னியாகுமரி, நெல்லையிலிருந்து வருகிற அத்தனை கனரக வாகனங்களும், லாரிகள் அத்தனையும் சோழவந்தானின் முக்கிய கடைவீதி வழியாகச் செல்கிற காரணத்தால் மிகுந்த நெருக்கடியும் நிறைய ஆக்சிடென்ட்களும் அங்கே ஏற்படுகிற காரணத்தால் சோழவந்தானுக்கு ஒரு புறவழிச் சாலை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அலங்காநல்லூரில், வளையப்பட்டியில் செல்கிற ஒரு சாலை அந்தப் பகுதியை எல்லாம் இணைக்கிற சாலையாக இருக்கிற காரணத்தால் அந்தச் சாலைக்கு ஒரு பெரிய பாலம் அமைத்துத் தர வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

வாவிடமருதூர், சுற்றி கிராமப்புறங்கள் நிரம்ப இருக்கிற பகுதியாக இருக்கிற காரணத்தால் அங்கே கால்நடை மருத்துவமனை ஒன்றை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குப்லாடம்பட்டி தாடகை நாச்சியம்மன் அருவியை சுற்றுலா மைய மாக அமைத்துத் தந்து இந்த அரசு என்னுடைய தொகுதியை வளப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த நல்ல வாய்ப்பைத் தந்த நமது சட்டமன்றப் பேரவையின் துணைத்தலைவர் அவர்களுக்கும், இந்த நல்லதொரு நிதிநிலை அறிக்கையை தமிழக மக்களுக்கு அளித்த நமது தானைத் தலைவர், தமிழினத் தலைவர், நமது உள்ளங்களில் எல்லாம் நிறைந்திருக்கிற தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் என்னுடைய உள்ளப்பூர்வமான பாராட்டுதல் களையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பி னர் திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

*திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டினுடைய சிறப்பு வாய்ந்த நிதிநிலை அறிக்கையை இந்த மாமன்றத்திற்கும் நாட்டிற்கும் அளித் திருக்கிற தமிழக முதல்வர், மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுக்கு பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் எங்களுடைய நெஞ்சார்ந்த நன்றியையும், வாழ்த்துக்களையும், வணக்கத்தையும், வரவேற்பையும் தெரிவித்துக்கொண்டு, இந்த நிதிநிலை அறிக்கை விவாதத்தில் கலந்து கொள்கிற வாய்ப்பு அளித்திருக்கிற ஆண்டிமடம் தொகுதிவாழ் வாக்காளப் பெருமக்களுக்கும், எங்களுடைய நிறுவனத் தலைவர் டாக்டர் ஐயா அவர்களுக்கும், நன்றியைக் கூறிக்கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையானது மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறிப் பிட்டிருப்பதைப் போல பாட்டாளிகளுடைய இல்லத்தில் ஏற்றி வைத்தி ருக்கிற அகல் விளக்கு என்ற இலக்கணத்திற்கொப்ப, இலக்கியமாக, ஏழை மக்களுக்கு அவர்கள் பயன்படுத்தக்கூடிய பருப்பு, மிளகாய், புளி, வெல்லம், சீயக்காய் போன்ற பொருள்களுக்கு எல்லாம் வரி விலக்கு அளித்திருப்பது மிகச் சிறப்பான ஒரு இடத்தை மக்கள் மனதில் பெற்றுத்தந்திருக்கிறது என்பதை நாட்டு மக்களோடு பழகுகிற நிலையில் நாங்கள் அறிந்து கொண்டிருக்கிறோம். அந்தவகையில் இந்த நிதிநிலை அறிக்கையை நாங்கள் பாராட்டுவதற்கும் வரவேற்பதற்கும் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஏழைகளுக்கு வரிவிலக்கு, நாட்டு மக்களுடைய நல்ல எதிர்பார்ப்பு களுக்கேற்ப பல சலுகைகளும், இருப்பவர்களுக்குக் கூட சில சுமைக் குறைப்புகளும், ஆக அனைத்துத் தரப்பு மக்களுடைய எண்ணங் களுக்கேற்ப இந்த வரவு-செலவுத் திட்ட அறிக்கையானது இருந்து கொண்டிருக்கிறது என்ற அடிப்படையில் இதனை ஒரு மனோரஞ்சித மலராகவே கருதுகிறோம். மனோரஞ்சித மலருக்கு உள்ள சிறப்பு என்னவென்று சொன்னால் எந்தப் பூவின் வாசத்தை எண்ணி அந்த மலரை நுகர்கிறோமோ அந்த மணத்தைத் தரக்கூடியது அது. அந்த அளவுக்குச் சிறப்பு வாய்ந்தது மனோரஞ்சித மலர் என்று சொல்வார்கள். அதைப்போல அனைத்துத் தரப்பு மக்களுடைய எண்ணங்களுக்கேற்ப இந்த நிதிநிலை அறிக்கை இருக்கிற காரணத்தால் இந்த நிதிநிலை அறிக்கையானது ஒரு மனோரஞ்சித மலராகவே இருப்பதாக நாங்கள் கருதுகிறோம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

பிற்பகல் 12-55

ஆனாலும் கூட ஓரிரு மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த அவை யிலே பேசும்போது பெரியதாக ஒன்றுமில்லை, சிறப்பாக ஒன்று மில்லை, நிறைவாக ஒன்றுமில்லை என்றெல்லாம்கூட குறிப்பிட்டிருக் கிறார்கள். இந்த நேரத்திலே நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புவது, கிருட்டிண பரமாத்மாவை தன்னுடைய இல்லத்திற்கு வரவேண்டும் என்று சொல்லி, தர்மனும் துரியோதனனும் கேட்டுக் கொண்டபோது, எந்த வீடு நிறைவாக இருக்கிறதோ, அந்த வீட்டிற்கு நான் வருவேன் என்று சொல்ல, துரியோதனன் ஓடோடிச் சென்று வீடு நிறைய வைக்கோலை நிரப்பி வைத்தானாம். ஆனால் அதேநேரத்தில் தர்மன், ஒரு அகல் விளக்கை—இருண்டு கிடக்கின்ற வீட்டிலே ஒரு அகல் விளக்கை—மட்டும் ஏற்றிவைத்துவிட்டு, காத்துக் கொண்டிருந்தானாம். அந்த நேரத்திலே கிருட்டிண பரமாத்மா அவர்கள், அகல் விளக்கு ஏற்றி வைத்திருக்கிற எளிய வீட்டிற்குச் சென்றதாகவும், வீடு நிறைய வைக்கோலை வைத்து, நிரப்பியிருந்ததாகச் சொல்லப்படுகிற துரியோ தனனுடைய இல்லத்திற்குச் செல்லவில்லை என்பதையும் பாரதம் நமக்கு பறைசாற்றுகிறது. ஆக, நிறைவாக இருக்க அகல்விளக்கு. இதற்கு முன்னாலே இருந்தவர்கள் இந்தத் தமிழகத்தையே ஒரு இருண்ட காலமாக மாற்றியமைத்து இருக்கின்ற சூழ்நிலையிலே இருண்டு கிடக் கின்ற தமிழ்நாட்டிலே விளக்கை ஏற்றிவைக்கின்ற முறையிலே இந்த நிதிநிலை அறிக்கையிருக்கிறது. ஆகவே, தர்மருடைய அகல் விளக்கு ஏற்றி வைக்கப்பட்ட இல்லத்தைப் போல *(மேசையைத் தட்டும் ஒலி)*

இங்கே மிகச்சிறப்பாக நிறைவாக இருக்கிற காரணத்தால்தான் இதனை அனைத்துத் தரப்பு மக்களும் பாராட்டி வரவேற்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல. காலியின் கையிலே கல் கிடைத்தால் அது அடிப் பதற்கும் பத்திரிகையாளர்களைத் தாக்குவதற்கும்தான் பயன்படும். ஆனால், கலைஞராக இருக்கின்ற ஒரு சிற்பியிடம் அதே கல் கிடைக்கு மானால், அது அழகான ஒரு சிலையாக மாறும். இன்றைக்கு தமிழக முதல்வர், டாக்டர் கலைஞர் அவர்கள் கையாலே கொடுத்திருக்கிற இந்த நிதிநிலை அறிக்கையானது, ஒரு சிற்பியின் கையாலே வடித்த மிகச் சிறந்த சிலையாக இருக்கிறது. இதைப் பார்ப்பவர்கள் எல்லாம் பாராட்டுகிறபோது, ஒரு சிலர் மட்டும் எனக்குக் கல்லாகத்தான் தோன்று கிறது என்று சொன்னால், பார்க்கிறவர்களுடைய பார்வையிலேதான் கோளாறு இருக்கிறதே தவிர, அந்தச் சிலையில் கோளாறு இருப்பதாக யாரும் சொல்லிவிட மாட்டார்கள். அதைப்போலத்தான் இந்த நிதி நிலை அறிக்கையானது, குறை சொல்ல முடியாத அளவுக்கு, மிகச் சிறப்பான பல்வேறு திட்டங்களைப் பெற்றிருக்கிறது.

முதலாவதாக, தொடக்கமாக எண்ணிப் பார்க்கிறபோது, கூட்டாட்சித் தத்துவத்தைப் பற்றி இந்த நிதிநிலை அறிக்கையிலே மிகச் சிறப்பான கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நாங்கள், பாட்டாளி மக்கள் கட்சி சார்பிலே தமிழர் வாழ்வுரிமை மாநாட்டை நடத்தி, தன்னுரிமைத் தீர்மானம் போட்டபோது, எங்கள்மீது தேசத் துரோகக் குற்றச்சாட்டைச் சுமத்தினார்கள் அன்றைக்கிருந்த ஆட்சியாளர்கள். அதிலே நாங்கள் பிரிவினையைச் சொல்லவில்லை. இன்றைக்கு அமைந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியும் பிரிவினை மீது நம்பிக்கையில்லாத, பிரிவினையைக் கைவிட்டு, இன்றைக்கு பிரிவினை மீது நம்பிக்கையில்லாமல் இருந்து கொண்டிருக்கிற ஆட்சி யாகத்தான் இருக்கிறது. ஆனாலும்கூட இன்றைக்கு வலுவான கூட்டாட்சி இயங்கவேண்டும் என்பதற்காக இந்தத் தத்துவம் இங்கே முன்மொழியப்பட்டு இருக்கிறது.

இந்தியாவிலே இன்றைக்கு இருக்கிற கூட்டாட்சித் தத்துவ முறை யானது எந்த அளவிற்கு இயங்கிக் கொண்டிருக்கிறது என்று சொன்னால், அமேதி தொகுதிக்கு ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேலே செலவு செய்து அதை சொர்க்க பூமியாக மாற்றுவதும், இங்கே யிருக்கிற அரக்கோணத்திற்கு அரை கோடி ரூபாயைக்கூட ஒதுக்க முடியாத அளவிற்கும் ஏற்றத்தாழ்வுகளை, பாரபட்சத்தைக் காட்டக்

D
Y21, 31 N96.
N96.6.1
தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
213445

கூடிய அளவுக்குத்தான் இன்றைக்கு நம்முடைய இந்திய கூட்டாட்சி முறைகளிலே நடைமுறைகள் இருந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, இந்த நிலைமையிருந்தால், ஒருமைப்பாடானது உண்மையாக மலராது என்ற காரணத்தால்தான் இங்கே கனடாவை முன்னுதாரணமாகக் காட்டி, அந்த கனடா நாட்டினுடைய சிறப்பியல்புகளை எல்லாம் இங்கே எடுத்துச் சொல்ல இருக்கிறேன், குறிப்பாக சுட்டிக் காட்ட இருக்கிறேன்.

கனடாவில் 10 மாநிலங்கள் இருக்கின்றன என்று சொன்னால், அந்த 10 மாநிலங்களுள் ஒவ்வொரு மாநிலமும் ஒரு கனடாவை பிரதி பலிக்கிற ஒரு ஆடியாக, அதாவது Each of Canada's ten Provinces has a governmental structure mirroring that of the Nation என்று சொல்லக் கூடிய அளவுக்கு ஒவ்வொரு மாநிலமும் ஒரு கனடாவைப் பிரதி பலித்துக் கொண்டிருக்கின்ற அளவுக்குத்தான் சர்வ அதிகாரமும் பெற்றுத் திகழ்கிறது. ஆனால் இன்றைக்கு இந்தியாவிலே இருக்கிற மாநிலங்கள் ஒரு நகராட்சிக்கு உள்ள அதிகாரத்தைக்கூட பெற்றி ராத அளவுக்கு இருக்கின்ற காரணத்தால்தான், இந்தக் கூட்டாட்சித் தத்துவமானது மிக மிக இன்றியமையாததாகத் தேவைப்படுகிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இன்றைக்கு நமக்குள்ளே சிலபல கருத்துக்களிலே வேறுபாடு இருந்தாலும், அமெரிக்க நாட்டிலே இன்றைக்கு இந்தக் கூட்டாட்சித் தத்துவ முறையானது சிறப்பாக இருக்கிறது. அங்கே தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் அதாவது, 'ஸ்டேட் செனட்' என்று அழைக்கப்படுகின்ற அந்தச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கே சர்வ அதிகாரமும் வழங்கப்படக்கூடிய அளவுக்குத்தான் அங்கே நிலைமைகள் இருந்து கொண்டிருக்கின்றன. ஆனால், இங்கே கூட்டாட்சித் தத்துவமானது குளறுபடியாக இருக்கிற காரணத்தாலே, உண்மையான ஜனநாயகம் மலர முடியவில்லை. இதைச் சொல்வதாலே ஏதோ பிரிவினைக்கு வித்திடுவதாகவோ அல்லது அதற்கு வழிகாட்டு வதாகவோ, தயவுசெய்து யாரும் எண்ணிவிடக்கூடாது. ஏன் என்றால், கனடா நாட்டிலே, கடந்த ஆண்டு ஒரு ரெஃபரண்டம்—மக்கள் வாக்கெடுப்பு—நடத்தினார்கள். பிரிந்து போவதற்கான வாக்கெடுப்பு இரண்டாவது முறையாக நடத்தப்பட்டபோது, ஒரேயொரு சதவீத வித்தியாசத்தில் அந்தத் தீர்மானமானது தோல்வியுற்றது. ஆகவே, பிரிந்து போவதற்குக் கூட உரிமை கொடுக்கக்கூடிய அளவுக்கு அங்கே

கூட்டாட்சித் தத்துவமானது மிகச் சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கிறது. அதனாலே அவர்கள் பிரிந்துவிடவில்லை. ஆனால் இன்றைக்கு ஜெர்மனியிலேயும் அப்படிப்பட்ட சிறப்பான அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தாலும்கூட, இரண்டு ஜெர்மனியும் ஒன்றாகி ஐக்கியமாகி இணைந்திருக்கிறது என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது, ஆக உண்மையாக கூட்டாட்சி மலரவேண்டுமென்று சொன்னால், வளமான தமிழகமும் வலிமையான பாரதமும் இருக்கவேண்டுமென்று பலர் விரும்புவதைப் போன்று உண்மையான கூட்டாட்சித் தத்துவம் மலரவேண்டுமென்றால் இதுதான் தக்க தருணம்.

பிற்பகல் 1.00

மத்தியில் இன்றைக்கு 13 கட்சிகள் இணைந்து ஒரு உண்மையான கூட்டாட்சித் தத்துவமாகச் சென்று கொண்டிருக்கிற சூழ்நிலையில் இந்தத் தருணத்தைப் பயன்படுத்தி ஒரு சிறந்த கூட்டாட்சித் தத்துவத்தைத் தருகின்ற ஆற்றல் படைத்த ஒரே தலைவராக நாங்கள் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களைத்தான் நம்பிக் கொண்டிருக்கிறோம் என்பதையும் (மேசையைத்தட்டும் ஒலி) இந்த நேரத்தில் மெத்தப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து ஊழல் ஒழிப்பிற்காக 'ஆம்புட்ஸ்மென்' அமைப்பு, அதாவது உயர்மட்டக் குழு அமைக்கப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். அதனை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் அதே நேரத்தில் அமெரிக்காவினுடைய அதிபராக இருக்கின்ற 'பில் கிளிண்டன்' அவர்களைக் கூட நம்முடைய ஊரிலே இருக்கக்கூடிய ஒரு சாதாரண ஆர்.ஐ. அளவிலே இருக்கக்கூடிய ஒரு அதிகாரியைப் போன்றவர் இரண்டு மணி நேரம் அழைத்து விசாரிக்கிறார். ஒரு அமெரிக்க ஜனாதிபதியை அழைத்து விசாரிக்கிறார். அவருடைய துணைவியார் ஹில்லாரி கிளிண்டனையும் அழைத்து விசாரிக்கிறார். அங்கே எந்தக் குளறுபடியும் எந்தக் கலவரமும் கிடையாது, ஒத்துழைக்கிறார்கள். ஆனால் இங்கேதான் படம் எடுத்தால்கூட, அமைச்சருடைய வீடுகளைப் படம் எடுத்தால், அதாவது தவறான வழிகளிலே சேர்த்த சொத்துக்களைப் பத்திரிக்கையாளர்கள் படம் எடுக்கிறபோதுகூட தாக்குகிறார்கள். சிறைக்கு அவர்கள் செய்த தவறுகளுக்காக அழைத்துச் செல்லப்படுகிறபோது பத்திரிகையாளர்களையும், பொதுமக்களையும் தாக்கக்கூடிய அளவிற்கு இங்கே ஒரு மோசமான சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் 'ஆம்புட்ஸ்மென்' அமைப்பு என்பதை ஏதோ பதவி ஓய்வு பெற்றவர்களுக்குப் புகலிடமாக தரப்

படுகின்ற இடமாக இல்லாமல் சர்வ அதிகாரம் படைத்த ஒரு அமைப்பாக உருவாக்கி, எப்படி பிலிப்பைன்ஸ் நாட்டினுடைய அதிபர் மார்க்கோசினுடைய சொத்துக்கள், அந்தப் பதவிக் காலம் பறிபோனதற்குப் பின்னாலே பறிக்கப்பட்டதோ, அதைப்போல கடந்த கால ஆட்சியில் அதாவது இதற்கு முந்தைய ஆட்சியில் அடித்த கொள்ளைப் பணங்களைப் பறிமுதல் செய்து, அரசினுடைய, அதாவது மக்களுடைய சேவைத் திட்டங்களுக்கு, முன்னேற்றத் திட்டங் களுக்கு அவற்றைப் பயன்படுத்துவதற்கு இந்த ஆட்சியாளர்கள் நட வடிக்கை எடுத்திட வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல ரஷ்யாவினுடைய ஒரு மாநிலத்திலே இஸ்கந்தர் கபிதோ என்பவன் செய்த ஊழலுக்காக இன்றைக்கு ஆயுள் தண்டனை அனுபவித்துக் கொண்டிருக்கிறான். ஆக பொதுவாழ்விலே தவறுகள் செய்பவர்களை, அதாவது ஆயுள் தண்டனை தரக்கூடிய அளவிற்கு, அங்கே அஜர்பைஜான் மாநிலத்தினுடைய அமைச்சராக இருந்த இஸ்கந்தர் கபிதோ தண்டனை பெற்றதைப் போல இங்கேயும் தவறு செய்பவர்கள் மீது நிச்சயமாக அப்படிப்பட்ட கடுமையான தண்டனை கொடுத்தால்தான் வருங்காலத்தில் வரக் கூடியவர்கள் தவறுகளைச் செய்யமாட்டார்கள் என்பதை இந்த நேரத்தில் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு இந்தியாவினுடைய ஆட்சி மொழியாக தமிழும் ஆக்கப் படும் என்ற நம்பிக்கை ஒளியைத் தந்திருக்கிறீர்கள். அந்த நம்பிக்கை ஒளி நிச்சயமாக நடைபெறும் என்று நாங்கள் நம்புகிறோம். ஏனென்று கேட்டால், ஸ்பெயின் நாட்டிலே வெறுமனே *4* கோடி மக்கள் உள்ள நாட்டிலே *9* லட்சம் பேர்கள் உள்ள 'பாஸ்க்' (Basque) மொழி பேசுகின்ற இனத்தவர்களுக்கு அங்கே சர்வ உரிமையும் இருக்கிறது. அந்த மொழி ஆட்சி மொழியாக, பயிற்சி மொழியாக அனைத்து நிலைகளிலேயும் அந்த மொழியானது அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. ஆக பெரிய மொழி ஸ்பேனிஷ் மொழி என்ற காரணத்திற்காக அங்கே சலுகை கிடையாது. சிறிய மொழி 'பாஸ்க் மொழி' என்ற காரணத் தினாலே அங்கே உரிமை மறுக்கப்படுவதும் கிடையாது. ஆகவே இந்தியாவினுடைய அனைத்து தேசிய மொழிகளும் ஆட்சி மொழிக ளாக ஆக்கப்படவேண்டுமென்ற ஒரு நல்ல எண்ணம் மலர்வதற்கு காலமானாலும் உடனடியாக தமிழாவது உங்களுடைய அரிய, பெரிய முயற்சிகளினாலே ஆட்சி மொழியாக மத்தியிலே வரவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதையடுத்து பல்வேறு திட்டங்கள் எல்லாம் உள்ளன. இன்றைக்கு இஸ்ரேலுடைய தொழில் நுட்பத்தை வேளாண்மைத் துறையில் பயன் படுத்த இருப்பதாக நான் அறிகிறேன். நம்முடைய முன்னோர்களாக இருந்த பல்லவர்களும், சோழர்களும்கூட இங்கே ஏரிகளை வெட்டி நீர்ப்பாசனத்திற்காகப் பயன்படுத்திய முறைகூட, மிகச் சிறந்த தொழில் நுட்பம் வாய்ந்த முறைதான். சிறிய ஏரிகளிலிருந்து ஒவ்வொரு ஏரிக்கும் அங்கே கால்வாய்கள் வெட்டப்பட்டு, ஒவ்வொரு ஏரி யோடும் அது இணைக்கப்பட்டிருக்கும். ஒரு ஏரி நிரம்பினால் இன்னொரு ஏரிக்கு அந்தத் தண்ணீரானது செல்லக்கூடிய அளவிற்கு மிகச் சிறந்த தொழில்நுட்பம் பெற்றிருந்தார்கள். ஆனால் அந்தக் கால்வாய்களும், ஏரிகளும் இன்றைக்கு தூர்ந்துகிடக்கிறது. தேவையான மராமத்து நடைபெறாமல் இருக்கிறது. அதற்காக 30,000 ஏரிகளைச் செப்பனிடும் பணிகளைச் செய்வதாக தமிழக அரசு அறிவித் திருப்பதை நான் பாராட்டி வரவேற்கின்ற அதே நேரத்திலே, வெறுமனே வாரும் மண்ணை ஏரிக்கரைகளின்மீது போடுவதால் ஏரிகளுக்கு எந்தப் பயனும் ஏற்பட்டுவிடாது. ஆகவே புல்டோசர்களை வாங்கி அந்த ஏரிகளைத் தூர்வாரியும், அந்தக் கால்வாய்களை சீரமைத்தும் கொடுத்தால்தான் இந்த இலட்சியமானது ஈடேறும். அதே நேரத்தில் நாமெல்லாம் இப்போது நிலத்தடி நீரை அதிகமாக எடுத்துக் கொண்டிருக்கிறோம். நிலத்தடி நீரை மேலை நாடுகளில் உள்ளதைப் போல—மழைக் காலங்களில் பிடித்து அதாவது பம்பு செய்து நிலத்திற்குள்ளே செலுத்துகிறார்கள்—அந்த மாதிரியான முறையில் இந்த நிலத்தடி நீரை நாம் சேமிக்கின்ற வழிமுறைகளைக் கண்டாக வேண்டு மென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல இஸ்ரேலில் பெரிய பெரிய பிளாஸ்டிக் கன்டெய்னர், அதாவது பிளாஸ்டிக் பைகளிலே தண்ணீரை மழைக் காலங்களில் சேமித்து, அதை ஏனைய காலங்களில் சொட்டுநீர்ப் பாசனமாக, விசிறுநீர்ப் பாசனமாக அவற்றைப் பயன்படுத்திக்கொள்கிறார்கள். அப்படிப்பட்ட முறைகளையெல்லாம் நாம் கண்டறிந்து இந்தத் தண்ணீர் பிரச்சினையைத் தீர்க்கவேண்டும். பெரும்பாலான ஆறுகளினுடைய தண்ணீரில் 80 சதவீதம் வீணாக கடலில் போய் கலக்கிறது. ஆகவே, ஆறுகளிலே தடுப்பு அணைகள், பெரிய அணைகளாகக் கட்ட முடியாவிட்டாலும், ஒவ்வொரு ஆற்றிலும் பல தடுப்பு அணை களைக் கட்டினால் அந்த நிலத்தடி நீர் ஆங்காங்கே பாசனத்திற்குப் பயன்படும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-05

வீராணம் திட்டம் பற்றி, வேளாண்மைத் துறை அல்லது பொதுப் பணித் துறை மானியத்திலேயாவது அறிவிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். கல்வித் துறையிலே காளான்களைப் போல ஆங்கிலப் பள்ளிகள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. அவற்றில் கர்நாடகத்திலே உள்ளது போல, 5-ஆம் வகுப்பு வரையிலே கட்டாய மாகத் தாய்மொழி வாயிலாகத்தான் சொல்லித்தர வேண்டும் என்ற கட்டாயத்தை, இந்த அரசு உடனடியாக பிறப்பித்தால்தான், புற்றீசல் களைப் போலத் தோன்றிக்கொண்டிருக்கிற ஆங்கில மொழிப் பள்ளி களைத் தடுத்து நிறுத்த முடியும் என்பதை இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அதேபோல, கட்டாயமான, தரமான கல்வி வழங்கப்பட வேண்டுமென்பதுதான் எங்களுடைய கொள்கை. இந்த அரசினுடைய கொள்கையும் அதுவாகத்தான் இருக்கிறது. ஆகவே, அவற்றை யெல்லாம் இந்த ஆட்சியிலே நீங்கள் செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மிக முக்கியமான 'Brain Drain' என்று சொல்லக் கூடிய ஒரு அநியாயம் இந்த நாட்டிலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மக்களுடைய வரிப் பணத்திலே இலட்சக்கணக்கிலே செலவிட்டு ஐ.ஐ.டி., எம்.பி.பி.எஸ்., பி.இ., போன்ற பாடங்களுக்கு நாம் இங்கே செலவிட்டுக் கொண்டிருக்கிறோம். இங்கே படித்து முடித்துவிட்டு, உடனடியாக அமெரிக்காவிற்கும், இங்கிலாந்திற்கும், மேல் நாடுகளுக்கும் சென்று விடுகிறார்கள். அதனாலே, அவர்களுடைய திறமை இங்கே நமக்குப் பயன்படாமல் போய்விடுகிறது. எனவே, அதைத் தடுத்து நிறுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சீனாவிலே கூட பார்த்தால், எந்தப் படிப்பு முடித்தவர்களானாலும், உடனடியாக இரண்டு ஆண்டுக்காலம் கிராமங் களுக்குச் சென்று பணி புரிந்தாக வேண்டும். அப்படி பணி புரிந்தவர்களுக்குத்தான் அங்கே வேலைவாய்ப்பு தரப்படுகிறது. அதற் குப்பின்னாலே வேலைவாய்ப்பு வேண்டும் என்று சொன்னால் 2 ஆண்டு கட்டாய சேவை, கிராமங்களுக்குச் சென்று செய்தாக வேண்டும். அதுபோல், இங்கு 'பிரைய்ன் டிரெயின்' என்று சொல்லக்கூடிய பற்றாக்குறை வராமல் தடுப்பதற்கு இந்த ஆட்சியாளர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மருத்துவ, பொறியியல், தொழில் படிப்புகளிலே, மாணவர்களைத் தேர்வு செய்கிற முறையிலே ஒரு சிறு கோளாறு இருக்கிறது. அதனை நீங்கள் சீர்திருத்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதாவது, மாணவர்களை அழைக்கிறபோது, ஓ.சி. மாணவர்களை முதலாவதாக வும், பி.சி., எம்.பி.சி, எஸ்.சி., எஸ்.டி. என்று இப்படி அழைக்கிறபோது, அதிக மதிப்பெண்கள் எடுக்கிற மாணவர்கள், ஓ.சி.யிலே வருகிற காரணத்தினாலே, அவர்கள் எம்.எம்.சி. போன்ற மருத்துவக் கல்லூரி களிலே சேர்ந்துவிடுகிறார்கள். எம்.பி.சி. மாணவர்களுக்கும், தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கும், பெருந்துறை போன்ற கல்லூரிகளிலேதான் இடம் கிடைக்கின்றது. ஆகவே, இந்த முறை அல்லாமல் எப்படி ப்ளஸ் 2 பாட வகுப்புகளிலே ஒவ்வொரு பாடத்தையும் ஒரு அலகாகக் (Unit) கணக்கிடுகிறோமோ, அதேபோல் ஒவ்வொரு மருத்துவக்கல்லூரியையும், பொறியியல் கல்லூரியையும் ஒரு அலகாகக் கணக்கிட்டு, அதிலே அந்த இட ஒதுக்கீட்டு முறையை ஒவ்வொரு கல்வி நிலையத்திலும் அமல்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள் கிறேன்.

நுழைவுத் தேர்வு, கிராம மக்கள் நுழைய முடியாத தேர்வாக இருக்கிறது என்று நாம் அனைவரும் போராடிக்கொண்டு இருக் கிறோம். தயவு செய்து மறுபடியும் அதை அடுத்த ஆண்டிலாவது பரிசீலனை செய்து, அந்த நுழைவுத் தேர்வை ரத்து செய்துவிட வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு மதுரையிலே உயர்நீதிமன்றக் கிளை வருவதை வரவேற்கின்ற அதே நேரத்திலே, அமெரிக்காவில் 50 மாநிலங்களில், ஒவ்வொரு மாநிலத்திலும், சுப்ரீம் கோர்ட்டினுடைய பெஞ்சுகள் இருக்கின்றன. அதே போல் தமிழகத்திலும், இன்றைக்கு மத்தியிலும், மாநிலத்திலும் நமக்கு சாதகமாக ஒரு சூழ்நிலை இருக்கிற காரணத் தினாலே, இங்கே சென்னையிலே உச்சநீதிமன்றத்தினுடைய கிளை ஒன்றை அமைப்பதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ் வளர்ச்சியைப் பொறுத்த அளவிலே பாவாணர் நூல்களை நாட்டுடைமையாக்கியிருப்பதை வரவேற்கின்ற அதே நேரத்திலே அவ ருடைய மிகச் சிறந்த வழித் தோன்றலாக இருக்கின்ற பாவலரேறு பெருஞ்சித்திரனார் ஐயா அவர்கள், தமிழர் மொழியாலும், நாட்டா லும், தனிச் சிறப்பு பெற்று விளங்க வேண்டும் என்று உழைத்தவர்.

அவருக்கும் இந்த அரசானது ஒரு நினைவுச் சின்னம் எழுப்புவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

திராவிடப் பல்கலைக் கழகத்திற்கு ரூபாய் 50 இலட்சம் முதல் தவணையாக ஒதுக்கியிருப்பதை வரவேற்கின்ற அதே நேரத்திலே, அந்தப் பல்கலைக்கழகத்திலே தமிழ் இருக்கைகளை உருவாக்கி, அந்தப் பல்கலைக்கழகமானது வெறும் மொழியோடு மட்டும் நின்று விடாமல், இனம், கலை, பண்பாடு ஆகிய அனைத்தையும் ஆய்வு செய்கின்ற முறையிலே அமைய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்திலே மொழிபெயர்த்தும், வெளியிடாமல் இருக்கின்ற புத்தகங்களை வெளியிடுவதற்கு ஆவன செய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். எல்லா மொழிகளிலும்.....

*மாண்புமிகு திரு. ஆலடி அருணா: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அமெரிக்காவில் சுப்ரீம் கோர்ட்டினுடைய பெஞ்ச் ஒவ்வொரு மாநிலத்திலும் இருக்கிறது என்று சொன்னார். நான் படித்த அளவில் எனக்குக் கிடைத்த விவரம் என்னவென்றால், அமெரிக்காவில் ஒவ்வொரு மாநிலத்திலும் High Court உள்ளது. சில மாநிலங்களில் அதனை State Supreme Court என்று அழைக்கிறார்கள். ஆனால் சுப்ரீம் கோர்ட் என்பது ஒரே இடத்தில்தான் இருக்கிறது. அது துவங்கப்பட்ட காலத்தில் 9 நீதிபதிகளுடன் துவங்கப்பட்டது. இப்போதும் 9 நீதிபதிகளோடுதான் இருக்கிறது. ஒவ்வொரு மாநிலத்திலும் சுப்ரீம் கோர்ட் கிடையாது. ஆனால் சில மாநில அரசுகள் ஹைகோர்ட்டை, ஸ்டேட் சுப்ரீம் கோர்ட் என்று சொல்லிக்கொள்கின்றனர். நான் படித்த புத்தகங்களில் கிடைத்த தகவல் அதுதான்.

திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்: எல்லா நிலைகளிலேயும் சென்னை என்று அழைக்கப்படுவதை வரவேற்கின்ற அதே நேரத்திலே வடமொழி கலந்தோ அல்லது அனைத்து மொழிகள் கலந்தோ உள்ள எல்லா பெயர்களையும் மாற்ற வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். பம்பாய் ஆனது மும்பை, ஆகவும், பர்மாவானது மியான்மார் ஆகவும் இன்றைக்கு உலக அளவிலே ஒப்புக் கொள்ளப்படுகிறபோது நம்முடைய சென்னை பல்கலைக்கழகத்தையும் 'யூனிவர்சிட்டி ஆப் சென்னை' என்று அதனை மாற்றி அமைக்க வேண்டுமென்று நான் உங்களை வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன்.

1996 ஜூலை 24] [திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன்]

பிற்பகல் 1.10

தொழில் வளர்ச்சிக்காக கார் தொழிற்சாலைகளும், கண்ணாடித் தொழிற்சாலைகளும் வருகின்றன. அதேநேரத்தில் அந்தத் தொழிற் சாலைகளுக்கு நிலத்தை கையகப்படுத்தித் தருகிற போது அந்த நிலத்தை யாரிடமிருந்து எடுக்கிறோமோ அவர்களுக்குரிய நஷ்ட ஈட்டுத் தொகை யும், அவர்கள் அந்தத் தொழிற்சாலைகளில் வேலை செய்வதற்கு ஒரு முன்னுரிமையும் வழங்கப்படவேண்டும் என்றும் அதற்கு அரசு ஆவன செய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தாலும் தன் பிள்ளையை பட்டினி போட்டுவிடக் கூடாது. ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிற்சாலை திறக்கப்படுவதற்கு ஆவன செய்யப்படுகிற முயற்சிகள் எடுக்கப்பட்டு இருந்தாலும் கூட அதில் பாதிக்கப்பட்டுள்ள தொழிலாளர் களுக்கு முன்னுரிமை கொடுத்து புதிதாகத் திறக்கப்படுகிற கார் தொழிற்சாலைகளில் வேலைவாய்ப்பு அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் மேட்டூர் மில் போன்ற பல தொழிற்சாலைகள் மூடப் பட்டு இருக்கின்றன. அவற்றை எல்லாம் திறக்க அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

போக்குவரத்துத் துறையில் 10 ஆம் வகுப்பு வரை படிக்கிற மாணவர்களுக்கு இலவச பேருந்து பாஸ் வழங்கப்படுகிறது. அதில் ஏதோ மாண்புமிகு உறுப்பினர் திரு. ஸ்டாலின் அவர்கள் கேட்ட தாலே அதற்காக சலுகைகள் வழங்கப்படுவது போல் எண்ணிவிடக் கூடாது என்பதற்காகவே நான் இதில் என்னுடைய கருத்தையும் இணைத்துக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் பிளஸ் 2 வரை யிலும் இன்றைக்கும் பெரும்பாலான மாணவர்கள் கிராமப்புறங்களில் படிக்கிறார்கள். ஆகவே, அந்த இலவசப் பயணத்தை பிளஸ் 2 மாணவர்கள் வரையிலும் வழங்கவேண்டும் என்று நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் இன்றைக்கு சென்னை பெருநகரமானது மழைக் காலங் களில் வெனிஸ் நகரத்தைப் போல் மிதந்து கொண்டிருக்கிறது. கூவம் ஆற்றைச் சீர் செய்கின்ற ஒரு திட்டத்தை முன்பு செய்தார்கள். ஆனால் அது இடையில் கைவிடப்பட்டது. அந்தக் கூவம் ஆற்றைச் சீர் செய்து பாதாள சாக்கடைகளை கூவம் ஆற்றோடு இணைத்து செய்கிறபோது அந்த வடிகாலும் சரியாகச் செல்வதற்கு ஒரு வாய்ப்பாக

இருக்கும், கூவம் ஆற்றைச் சீர்படுத்துவதற்கும் ஒரு வாய்ப்பாக இருக்கும். இல்லையென்று சொன்னால் சட்டமன்றத்திலே பல உறுப்பினர்கள் காணாமலே போய்விடுவார்கள். அந்த அளவுக்கு கொசுக் கடித் தொல்லைகள் அதிகமாக இருக்கின்றன. ஆகவே ஆவன செய்து சீர் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சுற்றுச் சூழலைப் பொறுத்தவரையிலே தாபர்—டுபாண்டு போன்ற கம்பெனிகள் வெளிநாட்டினராலே கைவிடப்பட்ட தொழிற்சாலைகள். கோவாவிலிருந்து விரட்டி அடிக்கப்பட்ட தொழிற்சாலைகள் (மணி யடிக்கப்பெற்றது). சுற்றுச் சூழலைப் பாதிக்கும் தொழிற்சாலைகளை அரசு அனுமதிக்கக் கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 20 நிமிடங்கள் ஆகிவிட்டன.

திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுதிப் பிரச்சினையைப்பற்றி மட்டும் சொல்லி விடுகிறேன். அதாவது படிக்கும் மிகவும் பிற்படுத்தப்பட்ட எம்.பி.சி. மாணவர்களுக்கும், தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு, எஸ்.சி. மாணவர்களுக்கு வழங்குவது போல, கல்லூரிகளில் முதலிலேயே கட்டண விலக்கு அளிக்க வேண்டும் என்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் அதிலே பல முறைகேடுகள் நடைபெறுகிறது என்பதை இந்த அரசுக்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

திரைப்படத் துறையில் இருப்பவர்களுக்கு சலுகைகள் வழங்கியிருப் பதைப் போல தெருக்கூத்து கலைஞர்கள், பொம்மலாட்டக் கலைஞர்களுக்கு சலுகைகள் வழங்கினால், நிச்சயமாக அழிந்து கொண்டிருக்கிற அந்தக் கலையை காப்பாற்றுகின்ற ஒரு ஒப்பற்ற பரந்த உள்ளம் படைத்த முதலமைச்சராக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் இருப்பார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பத்திரிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்டு இருக்கிற ஓய்வூதியத்தினை வரவேற்கிறோம். அதில் பல கெடுபிடிகள் இருப்பதாகத் தெரிகிறது. ஓய்வூதியத்தை வரவேற்கிற அதேநேரத்தில் 20 ஆண்டு காலம் நாங்கள் பணி செய்திருக்கிறோம் என்ற அந்த கருத்தைச் சொன்னாலே, அதற்கான ஆதாரத்தைத் தந்தாலே அவர்களுக்கு அந்தச் சலுகைகளை வழங்குவதற்கு ஆவன செய்யவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே ஒரு துணை மின் நிலையம் அமைக்கப் படவேண்டும் என்பதற்காக ஆண்டிமடத்தில் 2 ஆண்டுகளுக்கு முன்னால் அனுமதி வழங்கப்பட்டது. ஆனால் இன்றுவரையில் அது நிறைவேற்றப்படவில்லை. அதை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் 1991-லிருந்து சுமார் 300-க்கு மேற்பட்ட விவசாயிகள் பழைய இனத்திலேயே அவர்கள் இணைப்பு கேட்டுக்கொண்டிருக் கிறார்கள். அடிஷனல் லோடு என்று சொல்லக் கூடிய கூடுதல் மின்சாரம் வழங்கப்படாமல் சிரமப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதற்கும் நீங்கள் ஆவன செய்யவேண்டும் என்றும், கூடுதல் மின்சாரம் உடனடியாக வழங்க இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

ஜீவன்தாரா கிணறுகளுக்கு, ஆதி திராவிடர்களுக்கு மின் இணைப்பு முன்னுரிமை கொடுத்து வழங்கப்படுவது போல் மிகவும் பிற்படுத்தப் பட்டவர்களுக்கு அதிலே முன்னுரிமை கொடுக்கவேண்டுமென்று இந்த அரசை வற்புறுத்திக்கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இரும்புலிக்குறிச்சி உயர்நிலைப் பள்ளி மேல்நிலைப் பள்ளியாக்கப் படவேண்டுகிறேன். என்னுடைய தொகுதியில் சாலைகள் சரிவர இல்லை. குறிப்பாக காடுவெட்டியிலிருந்து கொடுக்கூர் வரையிலும் செந்துறையிலிருந்து கோட்டைக்காடு வரையிலும் உள்ள சாலைகளை உடனடியாக செப்பனிட்டுத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். கோட்டைக்காட்டிலிருந்து பெண்ணாடம் வழியிலே வெண்ணாற்றிலே ஒரு பாலம் அமைத்துக் கொடுத்தால் ஏறத்தாழ 75 கிலோ மீட்டர் தொலைவுக்கு சுற்றி வரக்கூடிய அந்த வீண் செலவுகளும், தூரமும், காலமும் தவிர்க்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆண்டிமடத்தில் ஒரு சர்க்கரை ஆலை அமைக்கப்பட வேண்டு மென்று சொல்லி 1989-ஆம் ஆண்டிலே இந்த சட்ட மன்றத்திலே கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, செந்துறையிலே ஒரு சர்க்கரை ஆலை அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

செந்துறை இன்று வட்ட தலைநகரமாக ஆகியிருக்கிற காரணத்தால் தீரன் சின்னமலைப் போக்குவரத்துக்கழகத்தினுடைய கிளை ஒன்றினை செந்துறையில் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். நீண்ட நாள் கோரிக்கை ஒன்று, கடந்த ஆட்சியானது பழனி தேர்தலுக்காக மட்டும் பயன்படுத்திவிட்டு கைவிட்ட கோரிக்கை ஆகும்.

பிற்பகல் 1-15

வன்னிய கிறித்துவர்களை மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்பது அது. அது ஒரு நியாயமான கோரிக்கை. அதனை மீண்டும் முதல்வரவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, அதை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1,000 ஏக்கர்களுக்கு மேல் நீர் பாயக்கூடிய என்னுடைய தொகுதியிலே உள்ள ஏரிகளான குழுமூர், நக்கம்பாடி, சிற்றுடையார், சன்னாசிநல்லூர், பெரிய *(மணியடிக்கப்பட்டது)* திருக்களப்பூர், காட்டாத்தூர் ஆகிய ஏரிகளை புல்டோசர்கள் மூலமாக ஆழப் படுத்தித் தர வேண்டுமாறு வேண்டி விரும்பி கேட்டுக்கொண்டு, இந்த அளவிற்கு இந்த நிதிநிலை அறிக்கையானது எங்களைப் பொறுத்த அளவிலே, கோடையிலே இளைப்பாறுதல் தருகின்ற ஒரு குளிர் தருவாக இருக்கிறது என்பதையும், அதற்கு பாட்டாளி மக்கள் கட்சி யினுடைய நிறைவான வணக்கத்தையும், வரவேற்பையும், பாராட்டையும் தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நேரம் இப்போது *1.16* ஆகப் போகிறது. *1.30*க்கு முடிப்பது என்றால், *13,14* நிமிடங்கள்தான் இருக்கிறது. ஒன்று, நேரத்தைக் கொஞ்சம் அதிகரித்துத் தாருங்கள்; இல்லையென்றால் நாளைக்குப் பேசுகிறேன். எனக்குப் பின்னாலே இன்னும் இரண்டு, மூன்று பேர் பேசி, எதிர்க் கட்சித் தலைவர் பேசி, முதலமைச்சர் பதில் நாளைக்கா, நாளை மறுநாளா தெரியாது, விடை நாளை மறுநாளாக இருந்தால்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதிகபட்ச நேரம் எவ்வளவு என்று சொல்லுங்கள்.

திரு.எஸ். திருநாவுக்கரசு: எல்லோருக்கும் கொடுத்த மாதிரி அரை மணி நேரம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரை மணி நேரம் என்றால் நாளைக்குத்தான். ஒன்றரை மணி வரைக்கும் பேசுங்கள். பிறகு நாளைக்குப் பேசுங்கள். இப்பொழுது, ஒன்றரை மணி வரைக்கும் பேசுங்கள்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: சரி, நன்றி. மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1996-97-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எனது கருத்துக்களை எடுத்து வைக்கிற வாய்ப்பு தந்தமைக்காக உங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

1996-97 வருவாய்க் கணக்கிலே வரவு, ரூ. 11,068 கோடி; வருவாய்க் கணக்கிலே செலவு ரூ. 12,107 கோடி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதிலே பற்றாக்குறை ஏறக்குறைய 1,038.63 கோடி.

இதிலே வரி உயர்வுகள் வெளிப்படையாக அறிவிக்கப்படவில்லை என்றாலும், விற்பனை வரிச் சீர்திருத்தம் என்கிற பெயரிலே ஏறக்குறைய ரூ. 300 கோடி வரி விதிக்கப்படுகிறது. அதை அந்த மானியக் கோரிக்கை வருகிறபொழுது அதுபற்றி விளக்கமாகச் சொல்லலாம். இப்படி பல்வேறு சீர்திருத்தங்கள், சிக்கனம், இவையெல்லாம் நீக்கி ஒட்டுமொத்த இறுதிப் பற்றாக்குறையாக ரூ. 851.05 கோடி, இறுதி பற்றாக் குறை இருக்கும் என்று பட்ஜெட்டிலே கூறப்பட்டிருக்கிறது.

மத்தியில் ஏறக்குறைய ரூ. ஒரு லட்சத்து 98 ஆயிரத்து 82 கோடி மத்திய அரசாங்கத்தில் வருவாய்க் கணக்கிலே வரவு, வருவாய்க் கணக்கிலே செலவு ரூ. 2 லட்சத்து 4 ஆயிரத்து 660 கோடி மத்திய அரசினுடைய பற்றாக்குறையே ரூ. 6,578 கோடி. மத்திய அரசு பற்றாக்குறை சதவிகிதம் கணக்கிலே பார்த்தால் 3 சதவிகிதம், மாநில அரசினுடைய பற்றாக்குறை 9 சதவீதம். வருமானத்தைக் கணக்கிட்டால் நம்முடைய மாநில அரசு போல ஏறக்குறைய 20 மடங்கு அதிகமான வருமானமுள்ள மத்திய அரசு, தேவையானால் நோட்டு அடித்துக் கொள்ளுகிற அதிகாரமே உள்ள மத்திய அரசே கூட 3 சதவீதம் அளவிற்குத்தான் பற்றாக்குறை வைத்து பட்ஜெட்டைச் சமர்ப்பித்திருக்கிறபோது, மாநில அரசு, 20 மடங்கு குறைவாக வருமானமுள்ள அரசு 9 சதவிகிதம் அளவிற்குப் பற்றாக் குறை பட்ஜெட்டைச் சமர்ப்பித்திருப்பதால், ஒன்று விலைவாசி உயர வாய்ப்பு இருக்கிறது; இரண்டு, அறிவிக்கப்பட்ட திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட முடியாமல் போகும்; அல்லது அவற்றை நடைமுறைப் படுத்தியே ஆக வேண்டுமென்றால் ஏறக்குறைய 1000 கோடிக்கு பொதுமக்கள் மீது வரி விதித்தே ஆக வேண்டுமென்கிற கட்டாயம் ஏற்பட்டே தீரும். இல்லையென்றால், பட்ஜெட் பற்றி நான் வெளியே சொல்கிறபோது சொன்னமாதிரி, அறிவிப்புகள் வெறும் கானல் நீராக இருக்குமே தவிர, நடைமுறைப்படுத்துவது சாத்தியமாகாது.

பிற்பகல் 1-20

அதேபோல, செலவினங்கள் என்று வருகிறபோது, 4 வகைகளாக வருமானங்கள் செலவிடப்படுகின்றன. ஒன்று, பொருளாதாரப் பணிகள், இரண்டு, சமூக நலப் பணிகள், மூன்று, உதவி மானியங்கள்—உதவித் தொகைகள், நான்கு, பொதுப் பணிகள். இந்த 4 பிரிவுகளிலே செலவினங்களைச் செலவிடுகிறபோது, பொதுவாகப் பொருளாதாரப் பணி, 'Economic Services' என்றால், அதிலே பயிர் வளர்ப்பு, மண்வளப் பாதுகாப்பு, கால்நடைப் பராமரிப்பு, சாலைகள், பாலங்கள், எரிசக்தி, பாசனங்கள், நீர்ப்பாசன வசதிகள், தொழில், கனிமம், ஊரக வளர்ச்சி, கூட்டுறவு, மீனளம், காடு வளர்ப்பு, இப்படியெல்லாம் ஆக்கப்பூர்வமான வளர்ச்சியை மையமாக வைத்திருக்கிற development-oriented schemes-லே வரக்கூடிய பிரிவு பொருளாதாரப் பணிகளின் கீழ் வரும். சமூகப் பணிகள் என்கிறபோது, கல்வி, தொழில்நுட்பக் கல்வி, மருத்துவம், பொதுச் சுகாதாரம், குடும்ப நலம், குடிநீர் வழங்கல், துப்புரவு, வீட்டுவசதி, நகர்ப்புற வளர்ச்சி, ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலன், பிற்பட்டோர் நலன், சத்துணவு, இவையெல்லாம் சமூகநலப் பணியிலே வரும். உதவி மானியங்கள், உதவித் தொகைகள் என்பது, கிராம மக்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து தரக்கூடிய கிராமப் பஞ்சாயத்துக்கள் ஆகியவற்றுக்காக ஒதுக்கப்படுகிற நிதி, மானியம் இவையெல்லாம் அதிலே அடங்கும். பொதுப் பணிகள் என்பது, அரசின் அமைப்புகள், வரி விதிப்புப் பணிகள், நிர்வாகப் பணிகள், ஓய்வூதியம், வட்டி, கடன் இவையெல்லாம் பொதுப் பணியிலே வரும். இந்த 4 வகைகளாக செலவினங்கள் வருகிறபோது, இதிலே பொதுப் பணிக்கு ஆகிற செலவினங்கள் குறைந்து மற்ற 3 வளர்ச்சிப் பணிகளுக்கான இனங்களுக்கு நிதி ஒதுக்கம் அதிகமாகிறபோது, ஒரு மாநிலம் வளர்ச்சிப் பாதையை நோக்கிப் போகிறது. அந்தப் பட்ஜெட் ஒரு healthy trend என்கிற முறையிலே அமைந்திருக்கிறது என்று சொல்ல முடியும். ஆனால், போடப்பட்டிருக்கிற பட்ஜெட்டுக்களை நீங்கள் ஒப்பிட்டுப் பார்ப்பீர்களேயானால், உதாரணத்திற்கு, பொருளாதாரப் பணியை Economic Services-ஐ எடுத்துக் கொள்வோம். அதிலே ஒரு ஒப்பீடாக நான் ஒப்பிடுகிறேன். 1991-92-லே ஒதுக்கீடு என்று எடுத்துக்கொண்டால் ஏறக்குறைய ரூ. 3,883 கோடி. மொத்தத்திலே 57 சதவீதம் மொத்த வருமானத்தில் இந்தப் பொருளாதாரப் பணிகளுக்காக 1991-92-லே ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு 1996-97 என்று எடுத்துக்கொண்டால், ரூ. 3,158.32 கோடி, இது மொத்த வருமானத்திலே 28.5 சதவீதம். அதுபோல சமூகநலப் பணிகள் (Social

Services) எடுத்துக்கொண்டால், அதிலே 1991-92-லே ஒதுக்கீடு ரூ. 2,880 கோடி, 1996-97-லே ஒதுக்கீடு 4,790 கோடி. ஏன் சென்ற ஆண்டை ஒப்பிட்டால்கூட, 1995-96-லே ஒதுக்கீடு 4,174 கோடி. ஏற்கெனவே சொன்னமாதிரி வருமானம் இந்த ஆண்டு 11 ஆயிரத்துச் சொச்சம் கோடிகள். ஏறக்குறைய 6 ஆயிரத்துச் சொச்சம் கோடிகள்தான் 1991-92-லே அரசாங்கத்தினுடைய மொத்த வருமானம். எனவே, சென்ற ஆண்டுக்கும், இந்த ஆண்டுக்கும் ஒப்பிட்டுப் பார்த்தால்கூட, சென்ற ஆண்டு, சமூக நலப் பணிகளுக்கு ஒதுக்கப்பட்டது 53.3 சதவீதம் என்றால், இந்த ஆண்டு 1996-97-லே இதற்கு ஒதுக்கப்பட்டிருப்பது 43 சதவீதம்தான்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பாண்டு என்பது—நிதிநிலை அறிக்கை யிலேயே குறிப்பிட்டிருக்கிறேன்—8 மாதங்கள்தான். ஏனென்றால் மேலும் 4 மாதங்களைச் சேர்த்தால் இன்னும் அதிகமாகும் என்ற அந்த விவரத்தையும் நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறேன். இந்த ஆண்டு என்பது 8 மாதங்கள்தான். அதையும் மறந்துவிடாமல் பேச வேண்டும்.

பிற்பகல் 1-25

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதைச் சொல்வார்கள் என்ற காரணத்தினாலே நான் படிக்கிறபோதே இவற்றையெல்லாம் கவனமாகத்தான் படித்துவிட்டுப் பார்த்தேன். நான் சொல்வது ஏற்கெனவே Interim Budget வந்திருக்கிறது. நான் சொல்கிற அளவு Interim Budget-ஐ வைத்துக் கொண்டு இந்தக் கணக்கைச் சொல்ல வில்லை. இப்போது நீங்கள் போட்டிருக்கின்ற Revised Budget இருக்கிற தல்லவா, ஒட்டுமொத்தமாக Interim Budget-க்குப் பின்னாலே இந்த ஆண்டுக்காக நீங்கள் ஒதுக்கியிருக்கிற அந்த Revised Budget-ன் அடிப் படையிலேதான் இந்தப் புள்ளிவிரங்களைச் சொல்லிக்கொண்டிருக் கிறேன் என்பதை நான் மெத்தப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன் பேரவைக்கு. ஆக, சமூகப் பணிகள் என்கிற இதிலேகூட சுமார் 10 சதவீதம் குறைவு. அதேபோல உதவி மானியங்கள், உதவித் தொகைகள் என்று கணக்கு பார்த்தால் ஏறக்குறைய 1991-92-லே ஒதுக்கீடு ரூ.198 கோடி. இந்த ஆண்டு ஒதுக்கீடு ரூ. 336.35 கோடி. ஏறக்குறைய இரண்டுமே 3 சதவீதம்தான். ஆனால், நான் சொன்ன

மாதிரி வருமானம் என்று கணக்குப் பார்த்தால் இரண்டு மடங்கு ஆகிறது. அப்போது ஆறாயிரத்து சொச்சம் கோடி, இப்போது பதினோராயிரத்து சொச்சம் கோடி. ஆனால் ஒதுக்கீடு இந்த முக்கிய மான துறைக்கு, பிரிவுக்கு ஏறக்குறைய 3 சதவீதம்தான் ஒதுக்கப் படுகிறது. அதேபோல், பொதுப் பணிகள் என்று எடுத்துக் கொண்டால், அதிலேதான் ஏறக்குறைய பெரும் தொகை செலவு ஆகிறது. இதில், நான் சொன்னமாதிரி பொதுப் பணிகள் என்பது அரசின் அமைப்பு கள், வரிவிதிப்புப் பணிகள், அதற்கான பணிகள், நிர்வாகப் பணிகள், ஓய்வூதியம், வட்டி, கடன் இப்படியெல்லாம் இது வளர்ச்சிக்காக செலவிடப்படுகிற பணம் அல்ல; இது அரசாங்கத்தின் இலாக்காக்கள், ஏறக்குறைய இன்னும் சொல்லப் போனால், சுருக்கமாகச் சொல்ல வேண்டும் என்று சொன்னால் 25 இலட்சம் பேர்களுக்கு ஆகிற செலவுகள், அதற்கான நிர்வாகச் செலவுகள், கடன்களை எல்லாம் எடுத்துக் கொண்டால் அதிலே 1991-92-லே ஏறக்குறைய ரூ. 1,717 கோடியாக இருந்தது சுமார் 25 சதவீதம்; மொத்த வருமானத்தில் 25 சதவீதம் இந்தத் தலைப்பின் கீழ் மட்டும் செலவிடப்பட்டது. ஆண்டுக் காண்டு, கூடி கூடி, அதிகரித்து அதிகரித்து, இப்போது 1996-97-லே ஒதுக்கீடு 3,821 கோடி ரூபாயாக உள்ளது. ஏறக்குறைய 35 சதவீதமாகி, சுமார் மூன்றிலே ஒரு பங்கு, அரசாங்கத்தின் மொத்த வருமானத்தில் மூன்றிலே ஒரு பங்கு இந்தத் தலைப்பிலே மட்டும் செலவிடப்படு கிறது. ஏறக் குறைய ஐந்து கோடி மக்கள் வெளியே இருக்கிறார்கள். அந்த ஐந்து கோடி மக்களுக்கு மூன்றிலே இரண்டு பங்கும், அவர் களையெல்லாம் சேர்த்து நிர்வாகம் செய்விப்பதற்காக, அரசாட்சியை நடத்துவதற்காக அதிகாரிகளுக்காக பல்வேறு பொதுப் பணிகளுக்காக, நான் சொன்னமாதிரி ஜெனரல் சர்வீஸஸ், பொதுப் பணிகளுக்காக, ஏறக்குறைய மொத்த வருமானத்திலே மூன்றில் ஒரு பங்கு செலவு ஆகிறது என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

முதலிலே நான் சொன்ன மாதிரி இந்த பிரிவின் கீழே ஆகிற செலவுகள், பொதுப் பணிகளின் கீழே ஆகிற செலவினங்கள் குறைந்து மற்ற மூன்று பிரிவுகளின் கீழே ஆகிற செலவுகள் அதிகமாக ஆக்கப் படுகிறபோதுதான் அது பொதுமக்களுக்கு நன்மை தேடித் தருகிற, பொதுமக்களை வளர்ச்சிப் பாதையை நோக்கி அழைத்துச் செல்கிற உண்மையான பட்ஜெட்டாக இருக்கும். அந்த வகையிலே அரசாங்கம் சிந்திக்க வேண்டும்.

1996 ஜூலை 24]

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: குறுக்கிடுவதற்கு மன்னிக்கவும். தலைவர் அவர்களே, 1995-96 ஜெனரல் சர்வீஸஸ், பொதுவான பணிகளுக்கு Revised Estimate ரூ.3,418 கோடி என்பதை நினைவூட்டுகின்றேன். இன்னொன்று, எந்த வளர்ச்சிப் பணிகளானாலும், திட்டப் பணிகள், வளர்ச்சிப் பணிகள் எல்லா பணிகளையும் நிறைவேற்றுவதற்கு அஸ்திவாரமாக இருப்பது அரசு ஊழியர்கள் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. எனவே, அவர்களுக்காக செலவிடுவதும் வளர்ச்சிப் பணிகளோடு சேர்த்துதான் கணக்கிடப்பட வேண்டும் என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. ஆடம்பரங்கள், அநாவசியச் செலவுகள், ஊதாரிச் செலவுகள், அவைகள் வேறு; ஆனால், நான் மாண்புமிகு திருநாவுக்கரசு அவர்களுக்கு எடுத்துக்காட்டுவது 1995-96-ஆம் ஆண்டிலும் ரூ.3,418 கோடி ஆகி இருக்கிறது என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொல்வது ரிவைஸ்டு எஸ்டிமேட், நான் ஒப்பிட்டுப் பேசுவது பட்ஜட்டரி எஸ்டிமேட். ஏனென்றால் இந்த ஆண்டுக்கான ரிவைஸ்டு எஸ்டிமேட் அடுத்த ஆண்டுதான் தெரியும். இப்போது, இந்த ஆண்டுக் கணக்கில் சொல்வது பட்ஜெட் எஸ்டிமேட்தான். இந்த ஆண்டு என்ன உண்மையான செலவு என்பது அடுத்த ஆண்டு வருகிறபோதுதான், ரிவைஸ்டு எஸ்டிமேட் என்ன என்று தெரியும். எனவே, நான் ஒப்பிட்டுக் காட்டியது சென்ற ஆண்டு பட்ஜெட்டரி எஸ்டிமேட், இந்த ஆண்டு பட்ஜெட்டரி எஸ்டிமேட், இரண்டையும்தான். மற்றபடி நான் ஏதோ இந்த அரசாங்கத்தின் மீது குறை சொல்ல வேண்டும் என்பதற்காக அல்ல; நான் சொல்வது இதற்கு முன்னாலேயும் இப்போதும்கூட இந்த ட்ரெண்டு இப்படியே போய்க் கொண்டிருக்கிறது. இது வளர்ச்சிப் பாதையை நோக்கி மாநிலம் போவதற்கான அடையாளம் அல்ல. இதிலே மாறுதல் வேண்டும் என்பதற்காக இந்த மூன்று இனங்களின் கீழே செலவுகள் அதிகரிக்கப்பட வேண்டும்; நான் சொன்ன ஜெனரல் சர்வீஸஸ் என்கிற பொதுப் பணிகள் கீழே செலவினங்கள் கட்டுப்படுத்தப்பட வேண்டும், குறைக்கப்பட வேண்டும்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: இப்போது தயாராகிக் கொண்டிருக்கின்ற அந்த இன்னொரு 'பே கமிஷன்' அறிக்கை வருமேயானால் இந்த ட்ரெண்டு இன்னும், மேலும் அதிகமாகும் என்பதை மறந்துவிட முடியாது.

திரு. எஸ். திருநாவுக்கரசு: இது இப்படியே போனால் கடைசியில் மக்களைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்கிற நிலை வந்து நிற்கும். ஏனென்றால் *(குறுக்கீடு)*

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** "மக்களைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்"—இது எங்கேயோ கேட்ட குரலாக இருக்கிறது.*(சிரிப்பு)*

பிற்பகல் *1-30*

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் சட்டமன்ற விவாதங்களிலே நல்ல திறமைசாலி என்பதை நான் அறிவேன். அவர்கள் side track செய்கிறார்கள். அதற்குள்ளே நான் போக விரும்பவில்லை.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாளைக்கு பேசிக் கொள்ளலாம். பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இந்த அளவோடு முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை *(25-7-1996)* காலை *9-30* மணிக்குக் கூடும், வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-30 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

ஏதுமில்லை.

சட்டமன்றம் LEGISLATURE TAMIL NADU
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

V21,31'N96
N96.6.1

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
213445
சென்னை-600 008

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

6B
18-19

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
816, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.